# கோகலே
# ஆறும் வாசகம்

28847

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)
(12—4—'32 கெஜட்டின் 243-ம் பக்கம் பார்க்க)

பதிப்பாசிரியர் :
திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.,
அட்வகேட், திருநெல்வேலி.

20544

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை அணா 7




PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD, MADRAS.

# முன்னுரை

சென்னைச் சட்டக் கலாசாலைப் போதகரும், கல்கத்தா சர்வ கலாசாலையில் தாகூர் சட்ட விரியுரையாளரும், அண்ணாமலைச் சர்வகலா சங்கத்தின் தமிழ் இலாகாத் தலைவருமாக விருந்து தற்பொழுது தமிழ் மொழி ஆராய்ச்சியில் வல்லுநராகவும், "தமிழ் இலக்கிய வரலாறு" முதலிய பன்னூல் ஆசிரியராகவும் இலங்குஞ் செந்நெறியாளராகிய திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கள் தம் மனங்கனிந்த உதவியால் இந்தக் கோகலே ஆறும் வாசகம் தொகுக்கப்பட்டிருக்கிறது. செந்தமிழ் வளர்ச்சிக்கு நற்றுணை புரிவதில் தமது வாணாளை உரிமைப் படுத்தித் தமிழ் உலகத்திற்கே பேருதவி செய்துவரும் இப்பெரியாருக்கு யாம் முதன் முதலில் எமது மனமார்ந்த நன்றி செலுத்துங் கடப்பாடுடையேம்.

தமிழகப் பற்றையும், தாய் மொழிப் பற்றையும் நம் நாட்டுச் சிறுவரிடம் வளர்க்கும் வண்ணம் பொருட் சுவை, சொற் சுவை ததும்பும் இவ்வாசகம் புதிய போதனா முறைகளைத் தழுவித் தெளிவான செந்தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கிறது. இளைஞருக்குத் தமிழ்க் கல்வி, சீரிய ஒழுக்கம், உலகறிவு முதலியவற்றை ஊட்டக் கூடியனவும், தற்காலத் தன்மைக் கேற்றனவும், மாணுக்காது மனப் பான்மைக்குப் பொருந்தியனவுமாகிப் பழையனவும் புதியனவுமான பாட விஷயங்களே இதில் தொகுக்கப்பட்டுள. பண்டைத் தமிழரது புலமை, நீதி, ஒழுக்கம், சிறப்பு,

வீரம் முதலிய நற்குணங்களைப் பற்றினவும், தற்காலத் தவராது உயர் குணம், அருஞ் செயல் இவை பற்றினவுமான வரலாறுகளும், இனிய கதைகளும், நவீன கலைகளைப் பற்றிய கட்டுரைகளும் இப்புத்தகத்தில் திகழ்ந்து விளங்குகின்றன. பக்தி, கருணை, வீரம், நகை முதலிய ஒன்பான் வகைச் சுவைகளை விளக்கும் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழ்ப் பாடங்களும் இதன்கண் காணப் பெறும்.

ஒவ்வொரு பாடமும், குறிப்பிட்ட சில அரும்பதங்களைக் கற்பிக்கும் நோக்குடையது. தமிழ்வளம் உணர்த்தும் பொருட்டுத் தனித் தமிழ்ச் சொற்களை பெரும்பான்மை இப்புத்தகத்தில் விரவி வருவது ஒரு சிறப்பாகும். இலக்கணப் பயிற்சி, வியாசப் பயிற்சி, சொற் பொழிவுப் பயிற்சி இவைகட்கான பாடங்களும் கட்டுரைகளும் இதில் சேர்க்கப்பட்டுள.

இவ்வாசகத்தைப் பதிப்பிக்கப் பலவிதத்திலும் உதவிய தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் பி. ஆர். இராஜ சூடாமணி அவர்களுக்கும், இதுவரையில் எமது பாட புத்தகங்களை ஏற்று ஆதரித்து வந்த கல்வி அதிகாரிகள், கலாசாலைத் தலைவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களுக்கும் யாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தக் கோகலே வாசகம் எங்கும் பரவி இனிது நிலவும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக !

**V. S. வெங்கடராமன் கம்பெனி,**

பப்ளிஷர்ஸ், கும்பகோணம்.

# பொருளடக்கம்


| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | இறைவன் அருள் ... ... | 7 |
| 2. | கோஹினூர் ... ... ... | 10 |
| 3. | ஸாலமன் ஞானவான் ... ... | 13 |
| 4. | பிரகலாதன் ... ... ... | 16 |
| 5. | குற்றாலத்து மலையருவி ... .... | 21 |
| 6. | காவிரி யாறு ... ... ... | 23 |
| 7. | கழுவுக்கேற்றவர் யார்? ... ... | 28 |
| 8. | நாவு ... ... ... | 32 |
| 9. | நல்லிசை நாவலர்... ... ... | 34 |
| 10. | நறு மலர் ... ... ... | 39 |
| 11. | ஒரு பழைய நகரம் ... ... | 41 |
| 12. | வினோதப் பாக்கள் ... ... | 46 |
| 13. | எரி மலைகள் ... ... ... | 48 |
| 14. | கர்ணன் (முதல் பாகம்) ... ... | 52 |
| 15. | கடிதம் எழுதுதல் ... ... | 55 |
| 16. | கர்ணன் (இரண்டாம் பாகம்) ... ... | 57 |
| 17. | தூய்மை ... .... ... | 61 |
| 18. | குரங்கும் குருவியும் ... ... | 63 |
| 19. | ஸ்பார்ட்டா நகரத்து வீர வாலிபர்கள் ... | 64 |

| பாடம் | விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 20. | ஸ்தல சுய ஆட்சி | ... | ... | 68 |
| 21. | கண்ணன் என் சேவகன் | ... | ... | 71 |
| 22. | திருவாங்கூர் மஹாராஜா | ... | ... | 74 |
| 23. | புத்திமானே பலவான் | .... | ... | 77 |
| 24. | கொயினா மரம் | ... | ... | 81 |
| 25. | காரைக்காலம்மையார் | ... | ... | 84 |
| 26. | தேனீ .. | ... | ... | 87 |
| 27. | ஜெ. என். டாட்டா | ... | ... | 91 |
| 28. | ஸ்ரீ கிருஷ்ண குமாரி | ... | ... | 96 |
| 29. | நவீன அற்புதங்கள் | ... | ... | 103 |

செய்யுட் பகுதி

| | | | | |
|---|---|---|---|---|
| I. | நல்வழி ... | ... | ... | 107 |
| II. | இனியவை நாற்பது | ... | ... | 111 |
| III. | திரிகடுகம் | ... | ... | 112 |
| IV. | கடவுள் துதிப் பாக்கள் | ... | ... | 113 |
| V. | தனிப் பாடல்கள் | ... | ... | 114 |



குற்றாலத்து பலையருவி.

[பக்கம் 21.

# கோகலே ஆறாம் வாசகம்

## 1. இறைவன் அருள்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகுஇலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் ; அன்னவர்க்கே சரண் நாங்களே. —கம்பர்

முருகன் என்னுஞ் சிறுவன் தன் பெயருக்கேற்ப உருவமுங் குணமும் இனிதமைந்தவன். அவன் ஒரு நாள் தன் தந்தையை நோக்கி, "இன்று பாடசாலையில் தாவர நூல் பாடத்தில் செடிகளிலிருந்து வித்துண்டாவதையும், வித்திலிருந்து செடிகள் முளைப்பதையும் எனது உபாத்தியாயர் விளக்கினார். அதில் எனக்கு ஒரு ஐயம் உதித்தது," என்றான். 'அச்சந்தேகம் யாது?' என்று பிதா வினவ, முருகன், "ஆதியில் விதை தோன்ற அதினின்று செடி முளைத்ததா, அல்லது செடி முதலில் உண்டாகப் பிறகு விதை தோன்றிற்றா?" என்று கேட்டான்.

தகப்பனார் :—உன் கேள்வி நன்று. நீயே யோசித்துப் பதில் சொல், பார்ப்போம்.

முருகன் :—ஆதியில் வித்திலிருந்து தான் செடி உண்டாயிருக்க வேண்டும்.

தகப்பனார் :—முதலில் செடியில்லாமல் விதை எப்படி உண்டாகக் கூடும்?

முருகன் :—ஆம்! வித்தில்லாமற் செடி யுண்டாகாது; செடி யில்லாமல் வித்துமுண்டாகாது. பின் எதுதான் முதலில் உண்டாயிற்று? எனது சமுசயம் தீரவில்லை.

தகப்பனார் :—இவைகளில் ஒன்றை ஆதியிற் கடவுள் சிருஷ்டிக்க, அதன் பின்னர் ஒன்றன்பின்னொன்றாக இவை விருத்தியாயிருக்க வேண்டும். உனது சிறு கேள்வியிலிருந்து உலகப் படைப்பிற்குக் காரணமாகக் கடவுள் ஒருவர் இருக்கத்தான் வேண்டும் என்று நன்கு தெரிகிறதல்லவா? அவரே முழுமுதற் காரணமாயிருந்து எல்லாவற்றையும் படைத்திருக்கின்றார். இதுபற்றியே திருவள்ளுவ நாயனாரும்

" அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றார். ஆக்குவதற்கு ஒருவனின்றி எப்பொருளாவது தானாகவே ஆகுமா?

முருகன் :—தாங்கள் கூறியது உண்மையே. இப்பூமியையும் இதிற் காணுஞ் சராசரங்களையும், பகுத்தறிவுள்ள நம்மையும் படைத்தவர் அக்கடவுளை யன்றோ?

தகப்பனார் :—இவ்வுலகத்தை மட்டுமன்று, வானிற் காணும் ஞாயிறு, திங்கள், நட்சத்திரங்கள் முதலிய பலகோடி புவனங்களையுஞ் சிருஷ்டித்தவர் அவரே. மைந்தா! அவரது மகிமையை என்னென்றுரைப்பது! வேதநாயகம் பிள்ளை கூறியவாறு, " அஸ்திவாரம், தூண், சுவர் முதலியவைகளில்லாமலே நாம் வசிப்பதற்காக அந்திரத்திலாடும் பம்பரம் போன்ற இப்பூமியாகிய ஒரு பெரிய மாளிகையை அவர் அமைத்திருக்கிறார். தாங்குங் கால்களின்றி ஆகாயமாகிய மண்டபம் வளைத்து, வயிரக் கற்கள்போன்ற நட்சத்திரங்களை அதில் மின்னச் செய்திருக்கிறார். எண்ணெயும் வர்த்தியு மின்றியே பிரகா

சிக்குஞ் சந்திர சூரியர்களாகிய இருபெருஞ் சுடர்விளக்கு களை ஏற்றி வைத்திருக்கிறார். பசுமையான புற் பூண்டி னாலாய இரத்தினக் கம்பளங்களையும் கீழே விரித்திருக் கிறார். மதுரமான கனிவர்க்கங்களையும் பரிமள புஷ்பங் களையும் அளிக்கும் மரஞ் செடி கொடிகள் செறிந்த காடு களைச் சிங்காரத் தோட்டங்களாக நிருமித்திருக்கிறார். மலைகளாகிய உன்னத சிங்காசனங்களையும், நதி, ஏரி முத லிய நீராடுதுறைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். சமுத் திரங்களும் மேகங்களுமாகிய மேள வாத்தியக்காரர்களை யும், அன்னம், மயில் முதலிய நாட்டியப் பெண்களையும், குயில் முதலிய பட்சிகளாகிய சங்கீத வித்துவான்களையும், கார்மேகமாகிய தண்ணீர் தெளிப்பவனையும், வாயுவாகிய ஆலவட்டக்காரனையும், அக்கினியாகிய சமையற்காரனையும் சம்பளமில்லாத ஊழியக்காரர்களாக நமக்கு நியமித்திருக் கிறார்.


"உற்று நோக்குவோருக்கு உலகமே ஒரு பெரிய புத்தகமாக" இருக்கின்றது. பூமியிலுள்ள மலைகள், மரங்கள், கடல்கள், நதிகள் முதலியவைகளும் வானத்தில் உலவுஞ் சந்திர சூரிய நட்சத்திரங்களும் கடவுளுடைய பெருமையை உபதேசிக்கின்ற குருமூர்த்திகளாய் விளங்குகின்றன.

அவர் நமது கண்களுக்குப் புலப்படாவிடினும் நாம் பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். அவரது திருச் சந்நிதானத்திலேதான் நாம் வசித்து உலாவுகிறோம். அவர் கணமேனுங் கண் கொட்டாது நம்மைக் கண் காணித்து வருகிறார்.

முருகன் :—தந்தையே, தாங்கள் கூறின விஷயங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றன. நான் இறைவனது அருளை இமைப்பொழுதும் மறவாமல் நன் னெறியில் நடக்க முயல்வேன்.

## 2. கோஹினூர்

நவரத்தினங்களாகிய வைரம், வைடூரியம், மரகதம், பவழம், முத்து, கோமேதகம், புஷ்பராகம், நீலம், மாணிக்



கோஹினூர் வைரம் (பழைய உருவம்)

(1) அடிப்புறமும். பக்கமும். (2) மேல் புறம்.


கம் என்ற ஒன்பது குடும்பத்தவர்களில் வைரம் என்ற குலத்தைச் சேர்ந்தவள் நான். ஏனைய எட்டு வகை இரத்தினங்களைப் பார்க்கிலும், கண்ணைப் பறிக்குங் காந்தியிலும், அழகிலும், விலையிலும் எனது குலம் மேன்மையுற்று, ஒப்பு உயர்வு இல்லாதது. குன்றுமணி எடையுள்ள ஒரு சிறு வைரக்கல் பதினாயிரம் ரூபாய்க்கு மேலான மதிப்புள்ளது. நவீன சாஸ்திரக்காரர்கள், வைரங்கள் கரித்துண்டுகளே என்று கூறினும், எங்களது உறுதிக்கும் உயர்வுக்கும் வேறொன்றும் நிகரில்லை. மாசிலாமணிகளாகிய நாங்கள் கோடீசுவரர்களிடத்தும் மன்னாதி மன்னர்களிடத்தும் வசிப்போம். உத்தம குலத்திற் தோன்றிய எனது சரித்திரம் ஆச்சரியகரமானது. ஆதலால் என் தாய்நாட்டுச் சிறுவர்களே! என் கதையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கோதாவரி நதி தீரத்தில் எல்லூருக்கு அருகில் பாத்தியாள் என்னும் கிராமத்தில் சாதாரணக் கூழாங்கல்போல மண்ணிற் புதைந்திருந்தேன். மழை பெய்த ஒருநாள், நிலத்தை உழுது கொண்டிருந்த குடியானவன் ஒருவன் என்னைக் கண்டெடுத்துச் சென்றான். ஒப்பிலாமணியாகிய என்னைப் பற்றிக் கேள்வியுற்று என்னை விரும்பிய கோல்கொண்டா மன்னரிடம் பிறகு போய்ச் சேர்ந்தேன். அவரது முடிமேலமர்ந்து அங்கு பல வருஷங்கள் தங்கினேன். எனது புகழ் பாரதகண்ட முழுவதும் பரவியதனால் நான் மாளவ தேச மன்னர்களால் அபகரிக்கப்பட்டு அவர்களிடம் பல ஆண்டுகள் வசித்தேன். டில்லியில் ஆண்ட முகலாய சக்கரவர்த்திகள் என் பேரில் கண்வைத்து, பல சூழ்ச்சிகள் செய்து என்னைப் பெற்றுக் கொண்டனர். உலகத்திலிருந்த பண்டைக் காலத்திய ஏழு அதிசயங்களில் ஒன்றாகிய மயிலாசனத்தின் கொண்டையில் பதிந்து பார்ப்பவரைப் பிரமிக்கச் செய்தேன். பிறகு அதை விட்டு டில்லி பாதுஷா அவர்களது கிரீடத்தில் வீற்றிருந்தேன்.

கி. பி. 1739-ல் பாரசீக வேந்தராகிய நாதர்ஷா இந்தியாவின்மேல் படையெடுத்து டில்லி மாநகரைக் கொள்ளைகொண்டபோது அக்காலத்திய பாதுஷாவின் முடியில் நானிருப்பதை அவர் கண்டார். என்னுடைய சிலுசிலுப்பையும், நீரோட்டத்தையுங்கண்டு அதிசயித்து, தமது பாரசீக பாஷையில் "கோ,ஹி,நூர்," அதாவது "இது என்ன! ஜோதிமலை!" என்றார். அதுமுதல் எனக்குக் கோஹினூர் (ஒளிமலை) என்ற பெயரே நிலைத்துவிட்டது. பிறகு, பாதுஷாவை வென்று மறுமுறை அவருக்கு முடி சூட்டுந் தருணத்தில் நாதர்ஷா தமது கிரீடத்தை அவருக்கு வைத்துவிட்டு, நான் இருந்த கிரீடத்தைத் தான் அணிந்து

கொண்டார். பின்பு அவர் பாரசீகத்திற்குத் திரும்பிய பொழுது நானும் அவருடன் அங்குச் சென்றேன்.

சிறிது காலத்திற்குப் பின் ஆப்கானியரால் கவரப் பட்டுக் காபூல் நகரத்தில் வசிக்கலானேன். மறுபடியும் இந்தியாவிற்குத் திரும்பிப் பஞ்சாபின் சிங்கமென்று புகழ் பெற்ற இரஞ்ஜித்சிங் வசமாகி லாகூரில் இருந்தேன். 1850-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் பஞ்சாப் நாட்டைச் சேர்த்துக் கொண்டபொழுது நான் அவர்கள் மூலமாக இங்கிலாந்துக்கு வந்து விக்டோரியா மகாராணியாரிடஞ் சேர்ந்தேன். முதலில் 180 'காரட்' அல்லது மூன்று ரூபாய்




கோஹினூர் வைரம் (சாணையில் இழைத்த பிறகு உருவம்)
(3) மேல் புறம். (4) அடிப் புறம். (5) பக்கம்.

எடையிருந்த நான், சாணைக்கல்லால் கமலப் பட்டைகள் தேய்க்கப் பெற்று 103 காரட்டாகக் குறைந்து போனேன். ஆயினும் 'தங்க மணி சாணையில் தேய்ந்து விட்டாலுந் துலங்கு குணம் ஒழியாது' என்றபடி என் ஒளியில் குறையவில்லை. பாரத நாட்டின் பெருமையை விளக்கும் அரிய மணியாகிய நான்,

மாட்சிமை தங்கிய மேரி மஹாராணியாரின் மகுடத்தில் நடு நாயகமாக இன்று விளங்குகிறேன். என்னைப்போல் நகல் ஒன்று செய்து அதை யாவருங்காண இலண்டன் மாநகரத்துக் கோபுரத்திலுள்ள அறைகள் ஒன்றில் பொருட்காட்சியாக வைத்திருக்கிறார்கள். ஆங்கில அரசாட்சியின் செங்கோல் முறைமை நீடித்திருக்கும்வரை நான் இங்கேயே இருந்து என் தாய்நாட்டின் பெருமையை உலகோருக்கு அறிவிப்பேன்.

## 3. ஸாலமன் ஞானவான்

ஆசியாக் கண்டத்தின் மேற்குப்பாகத்தில் பாலஸ்தீனம் என்னும் ஒரு சிறு நாடு உளது. இந்நாட்டில்தான் கிறிஸ்து நாதர் அவதரித்தார். அவர் அவதரிப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அத்தேசம் நாகரிகத்திலுஞ் செல்வத்திலுஞ் சிறப்புற்றிருந்தது. 'பாலுந் தேனும் பாயும் பாலஸ்தீனம்,' என்று அத்தேசத்தார் அதைப் புகழ்ந்து கூறுவது வழக்கம். இவர்களது இராஜபரம்பரையில் ஸாலமன் என்ற ஒரு அரசர் இருந்தார். இவர் மஹா ஞானவான்; அயல் நாடுகள் பலவற்றை ஜெயித்துத் தமது இராஜ்ஜியத்தைப் பல துறைகளிலுஞ் சிறப்புறச் செய்தார். தமது தலை நகராகிய ஜெரூஸலத்தில் ஒரு பெரிய ஆலயத் திருப்பணி செய்து தமது பெயரை நிலை நாட்டினார். "நீதி மொழிகள்," "உத்தம கீதங்கள்" முதலிய நூல்களை இவர் இயற்றியுளர். செங்கோல் மன்னரான இவர் துலாக்கோல் போல் சமன்செய்து சீர்தூக்கி நீதிசெலுத்தி வந்தார். இவரது கீர்த்தி பாரெங்கும் பரவிற்று. இவரது ஞான மொழிகளைப்பற்றியும், நியாய விசாரணைத் திறமையையுங் கேள்விப்பட்டு ஷீபா நாட்டு மகாராணியார் இவரை நேரில் தரிசித்து, இவரது புகழைப் பற்றிய உண்மையை அறிய அவாக்கொண்டு மிகுந்த

பரிவாரத்தோடு ஏராளமான பொன்னையும் இரத்தினங்களையும் ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டு ஜெரூசலத்துக்கு வந்தார்.

ஸாலமனது புத்திசாதுரியத்தைப் பரிசோதிக்க வெண்ணி ஒரு நாள் இயற்கைப் பூக்களால் தொடுத்த ஒரு மாலையையும், செயற்கைப் பூக்களால் ஆக்கிய மற்றொரு மாலையையும் தூரத்திற் பிடித்துக்காட்டி, "மகாராஜரே! இவ்விரண்டு ஹாரங்களில் எது இயற்கைப் பூக்களால் அமைந்தது?" என்று இராணி வினவினள். இரண்டு மாலைகளும் எள்ளளவுகூட வித்தியாசமின்றிப் பார்வைக்கு இருந்ததால் ஸாலமன் சிறிது தயங்கிக் கொண்டிருக்கும் போது சில தேனீக்கள், ஜன்னல் வழியாக உள்ளே பறந்து வந்து ஒரு ஹாரத்தில் மட்டும் உட்கார்ந்ததை நுட்பமாகக் கவனித்து இயற்கைப் பூமாலை இது தான் என்று அனைவரும் ஆச்சரியப்படும்படி அறிவித்தார். அவர் மாலைகளை வேறுபடுத்தறிந்த விதத்தைக் கூறும்படி ஷீபா இராணி கேட்க, ஸாலமன், "தேனீக்கள் மொய்ப்பதைக் கவனியுங்கள்," என்று விடை பகர்ந்தார். இராணியாரும் மன்னனது மகிமையை நேரிற்கண்டு வியந்து சென்றார்.

ஸாலமன் மன்னரது நீதிசெலுத்துந் திறமையைப் பற்றிப் பல கதைகள் வழங்கி வருகின்றன. சக களத்திரங்களான இரண்டு ஸ்திரீகள் ஒரே வீட்டிற் குடியிருந்தனர் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆண் மகவு இருந்தது. இருவரும் தம்தம் குழந்தையைச் சீராட்டிப் பெருமையுடன் வளர்த்து வந்தனர். ஓர் இரவு இளைய மனைவியின் சிசு திடீரென்று வியாதிகண்டு இறந்துவிட்டது. மூத்தவள் அச் சமயம் தன் குழந்தையைத் தொட்டிலில் தூங்கச்செய்து அருகில் தானும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மகவை இழந்த தாயார் பொறாமை கொண்டு, கள்ள மனத்துடன்

சந்தடியின்றி இறந்த சிசுவை மற்றவளது தொட்டிலிற் கிடத்திவிட்டு, அவளது உயிருள்ள பாலகனை எடுத்துத் தன் அருகிற் போட்டுக்கொண்டு படுத்து உறங்குவதுபோலப் பாசாங்கு செய்தாள். பொழுது புலர்ந்ததும் மூத்தவள் விழித்துக்கொண்டு குழந்தை இறந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு உற்று நோக்கும்போது அது தனதல்ல வென்றும், மாற்றாளது மதலை என்றும் உணர்ந்து தன் குழந்தை சக்களத்தியின் பக்கத்தில் கண்வளர்வதைப் பார்த்தாள். உடனே, "உயிருள்ள குழந்தை என்னுடையது," என்று மூத்தவள் கூற, இளையவள் "இது என் குழந்தையே; உன்னுடையதுதான் இறந்து கிடக்கிறது," என்று சாதித்தாள். இருவரும் வழக்குத்தொடர்ந்து ஸாலமன் மன்னரிடம் உயிருள்ள குழந்தையை எடுத்துக் கொண்டுபோய் முறை யிட்டார்கள். ஒவ்வொருத்தியும் குழந்தை தன்னுடையது என்று சத்தியஞ் செய்ததால் அரசன் சிறிது ஆலோசனை செய்து, இருவரும் ஒரே விதமாகப் பாத்தியம் கொண்டாடுவதால் குழந்தையை இரண்டு துண்டாக்கி பெயருக்கொன்றாகக் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார். இளையவள், 'அவ்வாறே செய்யுங்கள்' என்று கூறவும், மற்றவளோ, "மஹாராஜாவே! வெட்ட வேண்டாம் குழந்தையை; அவளே வைத்து வளர்க்கட்டும்; எப்படியாவது குழந்தை உயிருடன் இருந்தாற் போதும்," என்று மன்றாடினாள். உடனே அரசன் இவள்தான் குழந்தையின் தாயார் என்று ஊகித்துக் குழந்தையை அவளிடம் அளிக்கவும், மற்றவளைக் காவலில் வைக்கவும் முடிவு செய்தார். இதைக் கேட்டவர்கள் எல்லோரும் அரசனைப் புகழ்ந்தார்கள்.

மற்றொரு தருணம் திறமை வாய்ந்த ஓவியக்காரர்கள் இருவர் இரண்டு உத்தமமான படங்கள் தயாரித்து, அரச

னது அரண்மனை வாயிலிற் கொண்டுவந்து வைத்து ஸாலமன் மகாராஜாவைப் பார்த்து, 'இவைகளில் எது அதிக நேர்த்தியானது?' என்று விடையருள வேண்டினர். ஒரு தட்டில் பலவகைப் பழங்கள் வைத்திருப்பதுபோல் வர்ணங்கள் தீட்டிய படம் ஒன்றை ஒரு ஓவியக்காரர் வரைந்திருந்தார். மற்றொருவர் மெல்லிய திரைக்குப் பின் நிற்கும் ஓர் அழகிய பெண்ணின் உருவத்தை வரைந்திருந்தார். திரளான ஜனங்கள் வந்து இப்படங்களைப் பார்த்து, ஒன்றைக்கொன்று அதிக அழகாயிருப்பதாக மெச்சிப் பேசினார்கள். வரையப்பட்ட பழங்கள் இயற்கைக் கனிகளைப் போலவே காணப்பட்டதால் சில பறவைகள் வந்து ஏமாறி அவைகளைக் கொத்தித் தின்ன முயன்றன. அரசரின் பிரதானியார் மற்றொரு சித்திரத்தைப் பார்த்தபொழுது, "இந்தப் பெண் மிக அழகாக இருக்கிறாள். மேலே மறைக்குந் திரையைச் சற்று விலக்குங்கள்; நன்றாகப் பார்க்கலாம்," என்றார். ஸாலமன் அரசர், "பெண்ணுருவமுள்ள படமே மேலானது. ஏனென்றால் பழங்கள் பட்சிகளை ஏமாற்றின. ஆனால் இந்தப் படமோ மனிதனையே ஏமாற்றி விட்டது," என்று கூறினர். கூடியிருந்த ஜனங்கள் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

ஸாலமன் மகாராஜா செங்கோல் மன்னராகவும் செந்நெறியாளராகவும் விளங்கியதால், அவர் 'ஞானவான்' என்ற அடைமொழி அளிக்கப் பெற்று, 'ஸாலமன் ஞானவான்,'' என விவிலிய நூலிற் சிறப்பித்துக் கூறப்பட்டுளர்.

## 4. பிரகலாதன்

ஸரோஜா :—அன்னையே! நான் மிகவும் அருமையான ஒரு புத்தகம் வாசித்தேன். அது புதிய நாகரிக அமைப்புக்களைக் குறித்துக் கூறுகின்றது. மனிதர்களுடைய அறி

வின் விரிவையும் அவர்களுடைய வல்லமைகளையும் பார்க்கும்பொழுது அவை மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றன. நவீன காலத்தில் வெளிப்போந்த ஆகாய விமானம், ஆகாயக் கப்பல், தூர சம்பாஷணைக் கருவி, நிழற் படக் காட்சி, பேசும் படக் காட்சி, கம்பி யில்லாத் தந்தித் தபால் முதலியவை மகா அற்புதங்களாய் விளங்குகின்றன. மனிதர்கள் அடைந்திருக்கிற முன்னேற்றங்களைப் பார்க்கும்பொழுது மனிதனாலாகாத காரியமொன்றுமே யில்லையென்று சொல்லலாம். மனிதர்கள் சாகாமலிருப்பதற்குக் கூட வழிகள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதற்குமொரு வழி கண்டுபிடித்துவிட்டால் அவர்களைத் தேவர்களென்றே சொல்லவேண்டு மல்லவா?

தாயார் :—ஸரோஜா! மனிதர்கள் மிக்க வல்லமையுடையவர்களே. மாந்தருடைய மனோ வலிமையினால் ஆகாத காரியங்களில்லை; எனினும் மனிதன் சர்வ வல்லமை வாய்ந்த கடவுளுடைய முன்னிலையில் வறியனாய்த் தோன்றுகிறான். ஏனென்றால், அவன் அடைந்திருக்கும் ஞானமும், வல்லமைகளும், பிற யாவும் கடவுளிடத்திலிருந்தே உண்டானவைகள். இவ்வுண்மைக்கு மாறாக மனிதன் அகந்தை மேலிட்டுத் தானடைந்திருக்கும் ஞானமும் வல்லமைகளும் கடவுளிடத்திலிருந்து வரவில்லையென்றும், அவை யாவும் தன் சுய முயற்சியினாலேயே கிடைத்தனவென்றும் கருதுவானாயின் அழிவது திண்ணம். இதை விளக்க ஒரு கதை உண்டு.

ஸரோஜா :—அஃதென்ன கதை?

தாயார் :—கேள், சொல்லுகிறேன். முன்னொரு காலத்தில் இரணியன் என்னும் அசுரனொருவன் இருந்தான். பேராற்றலுடைய அவ்விரணியன் கயாது என்னும் பெண்ணை மணந்து அவளோடு இம் மண்ணுலகை ஆண்டு வந்தான்.

அவ்விரணியனுக்கு இரணியாக்கன் என்னும் பெயர் கொண்ட தம்பி ஒருவன் இருந்தான். இரணியாக்கன் ஒரு தருணம் இவ்வுலகைப் பாயாகச் சுருட்டிப் பாதாள லோகத்திற்குக் கொண்டுபோய்விட்டான். அதை அறிந்த திருமால் உடனே வராக அவதாரமெடுத்துப் பாதாளத்திற் குச் சென்று, அவ்வரக்கனைக் கொன்று, இப்பூமியை மீட் டுக் கொண்டுவந்தார்.

தன் சகோதரன் பாதாளத்தில் மடிந்த செய்தியைக் கேள்வியுற்ற இரணியன் மிகுந்த துக்கமும் வெட்கமு மடைந்தான். அவன் தனக்கும் அவ்விதமான முடிவு நேரிடுமென்று அஞ்சினான். ஆகையால் அவன் பிரம தேவனைக் குறித்துத் தவஞ்செய்து பல வரங்களைப் பெற்றுத் தானே கடவுளாய் விளங்க வேண்டுமென்று நினைத்தான். அவன் வெகு விரைவில் ஒரு ஏகாந்தமான வனத்தை யடைந்து பிரமதேவனைக் குறித்துக் கடுந்தவம் இயற்றலானான்.

இரணியன் கானகத்தில் தவஞ் செய்யச் சென்ற சில நாட்களுக்குள் கயாது ஓர் ஆண் மகவைப் பெற்றாள். குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட சுக்கிராச்சாரியர் முதலான பெரியோர்கள் மிகவும் மனமகிழ்ந்து அக்குழந் தைக்குப் பிரகலாதன் என்று பெயரிட்டனர். பிரகலாதன் சிறு வயது முதற்கொண்டே தெய்வத்தினிடத்து மாறாத அன்பு உடையவனாய் விளங்கினான். திருமாலையே தன் இஷ்ட தெய்வமாகக் கொண்டு அவரையே எப்பொழுதுந் தியானித்து வந்தான்.

நாட்டிலே பிரகலாதன் இவ்வாறு திருமாலின் அன்ப னாய் வளர்ந்து வருகையில், காட்டுக்குச் சென்ற இரணியன் நெடுங்காலந் தவமியற்றி முடிவில் பிரமாவைத் தரிசித்தான். அவன் அக்கடவுளை நோக்கி, "சுவாமி, நான் தேவர்களா

லும், மனிதர்களாலும், விலங்குகளாலும், ஆயுதங்களாலும், பிணிகளாலும், ஜலத்தாலும், தீயாலும், வாயுவாலும் மற்றெந்தப் பொருள்களாலும், இரவிலாயினும், பகலிலாயினும், பூமியிலாயினும், ஆகாயத்திலாயினும் இறவாதிருக்க வரந் தரவேண்டும். என்னை எவரும் வெல்லக்கூடாது; என்னால் ஆகாத காரியம் ஒன்றிருக்கவுங் கூடாது" என்று கேட்டான். பிரமா, அவன் வேண்டியபடியே வரமளித்து மறைந்தார்.

பின்பு இரணியன் நாட்டிற்கு வந்தான். அந்நாட்களில், உலகில் உள்ளார் யாவரும் திருமாலை மனத்திலே தியானித்து, 'நமோ நாராயணாய' என்ற மந்திரத்தை உச்சரித்த பின்னரே எக்காரியத்தையுஞ் செய்யத் தொடங்குவார்கள். இரணியன் நாட்டிற்கு வந்ததும், "இன்று முதல் எவருமே திருமாலின் பெயரைச் சொல்லக்கூடாது. எக்காரியஞ் செய்வதாயிருந்தாலும் எல்லோரும் என் பெயரைச் சொல்லிக்கொண்டே அதனைத் தொடங்க வேண்டும். யாவரும் 'நமோ இரணியாய' வென்று சொல்லி என்னையே வணங்கவேண்டும். என்னையன்றி வேறு கடவுள் இல்லை. நான் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லமையுடையவன்; மரணமில்லாதவன்; சர்வ வல்லமை வாய்ந்தவன்" என்று முழக்கி, அவ்வாறே எங்கும் பறை அறைவித்தான்.

இரணியனுடைய ஆணையைக் கேட்ட தேவர்களும், மனிதர்களும், யாவரும் அவனுக்கு அஞ்சி அவனையே தெய்வமாக வணங்கத் தொடங்கினார்கள். ஆயினும், இரணியனுடைய நாட்டில் ஒருவன் மட்டும் அவனைத் தெய்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வொருவன், திருமாலின் அடியனாகிய பிரகலாதனேயாம். அவன் சர்வ வல்லமை வாய்ந்த கடவுளின் ஞானத்தையும் பெருமையையும் நன்றாய்

உணர்ந்தவன். அவன் 'நமோ இரணியாய' வென்று சொல்லுவதை வெறுத்தான்; எப்பொழுதுந் திருமாலையே நினைத்தான்; தன மன மொழி மெய்களை யெல்லாம் இறைவனின் திருவடித் தாமரைகளிலே சமர்ப்பித்தான்.

சிறுவனுகிய பிரகலாதன் தன்னை மதியாது இருந்து வருவதை இரணியன் கேள்விப்பட்டான். அப்பொழுது அவனுக்குண்டான கோபத்திற்கு அளவேயில்லை. அவன் பிரகலாதனைக் கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான். இரணியன் கட்டளைப்படியே வீரர்கள் அவனைக் கடலில் தள்ளியும், மலையிலிருந்து உருட்டியும், கொதிக்கும் எண்ணெயிலிட்டும், நஞ்சு ஊட்டியும், மற்றும் பல வழிகளிலுங் கொல்ல முயன்றனர். அவர்கள் அவனைக் கொல்ல முயன்ற பொழுதெல்லாங் கடவுள் அவனைத் தமது அளவு கடந்த வல்லமையாற் காத்துவந்தார்.

எதனுலுந் தன் மகன் இறவாதிருப்பதைக் கண்ட இரணியன், ஒரு நாள் மாலையில் மிக்க கோபங்கொண்டு பிரகலாதனை நோக்கி, "நீ கூறுகின்ற விஷ்ணு யார் ?" என்று கேட்டான். அப்பொழுது பிரகலாதன் மிகவும் பணிவாக, "அவர் உம்மையும், என்னையும், மற்றெல்லா வுயிர்களையும் பொருள்களையும் படைத்துக் காக்குஞ் சர்வ வல்லமை வாய்ந்தவர். அவர் எங்கும் இருக்கிறுர்; உமக்குள்ளும், என்னுள்ளும் இருக்கிறுர்," என்றுன்.

இதைக் கேட்டவுடனே இரணியன், அருகிலிருந்த ஒரு தூணைச் சுட்டிக் காட்டி, "இத்தூணில் அவன் இருக்கிறுனு ?" என்று கேட்டான். அதற்குப் பிரகலாதன், "அவர் தூணிலும் உளர்; துரும்பிலும் உளர்" என்றுன். உடனே, 'நான்' எனும் அகந்தை மிக்க இரணியன், "இப்பொழுதே நான் இத்தூணைப் பிளந்து பார்க்கிறேன்.

இதில் இருந்தால் அவன் வெளியே வரவேண்டும். இல்லாவிட்டால் நானே உன்னைக் கொல்வேன்,'' என்றான்.

உடனே இரணியன் தன் காலால் பிரகலாதன் காட்டிய தூணை உதைத்துப் பிளந்தான். தூண் பிளந்தவளவில், திருமால் அதனுள்ளிருந்து நரசிங்கமாக வெளிப்பட்டார். அவர் இரணியனைப் பிடித்துத் தம் மடியில் இட்டு, அவன் உடலைக் கிழித்துக் கொன்றார். இவ்வாறு, "நான்" என்னும் அகந்தை மிக்க இரணியன் இறந்தான்.

ஆகையால், ஸரோஜா, இவ்வுலகில் தமது ஞானத்தாலும் வல்லமைகளாலும் அகந்தை கொள்ளுகின்ற மாந்தர் முன்னேற்றம் அடையார்.

ஸரோஜா :—அன்னையே ! நான் இன்று மிகவும் முக்கியமான ஒரு பாடம் கற்றுக்கொண்டேன். தாங்கள் இன்று சொன்ன பிரகலாதனுடைய கதையை மறவேன். பிரகலாதனைப்போலக் கடவுளின் அருளைப் பெற முயலுவேன்.

## 5. குற்றாலத்து மலையருவி

அரிய மலைவீழ் அருவி காண்மின் !
காண்மின் ! காண்மின் !! குற்றா லத்தில்,
மண்டி மடமட கடகட வென்றே
யெட்டுத் திக்கு முழங்க வதிர்ந்து,
அண்டங் கடகட படபட வென்றதிர்
இடியொலி யொப்ப இரைந்து குமுறிப்
பாறை யறுத்து மரங்கள் பறித்துப்
பாரைக் கிழித்துப் பக்கத் தாரை
வாரிக் கொண்டு வருமே யருவி ;
பச்சை குச்சி பழுப்பிலை பாசி
பட்டை கட்டை மட்டை கொட்டை
கொப்பு கொம்பு தும்பு துண்டு

வாரி யிழுத்து வந்து தொப்பெனத்
தத்தித் தத்தித் தவழ்ந்து தட்டித்
தவறி விழுந்து தாழ்ந்த பள்ளம்
பொங்கி வீங்கிப் பொருமநிறைந்து
பொங்கு மாக்கட லாகப் பொங்கி,
நுரைத்து இரைத்து நூறு வகையாங்
குமிழி யெழுப்பிக் குழப்பிக் கூட்டி
ஓடி ஓடி வருவதைப் பாரீர் !
பொங்கி எறிந்து பொழிந்து வீங்கிச்
சுழிகள் சுழித்துச் சுற்றிச் சுருண்டு
வட்ட வளைய வட்ட மிட்டுத்
திரட்டி விரட்டி யிருட்டிப் புரட்டி
அடித்துப் பிடித்துச் சண்டை யிட்டுக்
கண்கள் களிப்பக் காட்சி தந்து
மயக்கி மனத்தை மருட்டி வருமே;
ஓடி ஓடி வந்து ஓ ஓ
என்றலறியும் எதிரொலி முழக்கியும்
அண்ட கடாக மெங்கு மதிர
சடசட படபட கடகட தடதட
திடுதிடு கிடுகிடு திடுமென முழக்கி
யறுபது அடிகள் அலறி விழுந்து
தகர்த்துத் தட்டித் தாக்கி வீக்கித்
தத்தித் தத்தித் தெற்றித் தெற்று
நுரைத்து நுரைத்துச் சுழித்துச் சுழித்துத்
தடாக மதனில் தாழ்ந்து வீழ்ந்து
பாறை மீது பரந்து பாய்ந்து
களகள குளுகுளு குக்குளு வெனவே
பண்ணிறை யின்னிசை பற்பல பாடிக்
குற்றா லக்கோ யில்லை நாடி
மஞ்சு லாமலர்ச் சோலை கூடி
ஓடும் அருவி ஒளிமிகு
கண்ணிறை காட்சி காண வருகவே !


—திரு. P. R. ராஜசூடாமணி

## 6. காவிரி யாறு

ஜீவ நதியாகிய கங்கை வட இந்தியாவின் வளத்திற்குஞ் செல்வத்திற்குங் காரணமாக இருப்பதுபோலத் தென்னாட்டிற்குக் காவிரி யாறு உயிராயிருக்கிறது. தென்னாட்டின் நீர்வளமுஞ் செல்வப் பெருக்கமும் காவிரி யாறு பாயுமிடங்களிலேதான் நன்கு புலப்படும். தமிழர்கள் இவ்வாற்றின் பெருமையை நன்குணர்ந்து இதைப்போற்றிக் கவிகளுங் காவியங்களும் எழுதியிருக்கிறார்கள்.

முன்னொரு காலத்திலிருந்த கவேரர் என்னும் முனிவரது ஆச்சிரமத்திலிருந்து உற்பத்தியாகி யோடி வந்தது பற்றி இந்நதிக்குக் காவேரி (அதாவது கவேரர் புதல்வி) என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர். தனது இருகரைகளிலும விரிந்த சோலைகளை உடையதால் இதற்குக் காவிரி (கா=சோலை) என்ற தமிழ்ப்பெயர் வந்ததாகவுஞ் சொல்லுவர். பொற்பொடிகளை அடித்து வருவதாற் 'பொன்னி' என்ற ஒரு பெயரும் இந் நதிக்கு உண்டு.

தமிழ் நூல்களிலே காவிரி நதியின் உற்பத்தியைப் பற்றிப் பின்வருங் கதை கூறப்படுகின்றது:—பார்வதி பரமசிவனுடைய திருமணக் கோலத்தைக் கண்டு களிக்க உலகத்திலிருந்தோர் யாவரும் இமய மலைக்குச் சென்றனர். அதனால் இமய பர்வதம் தாழத் தென்னாடு உயர்ந்தது. தமது பலத்தால் தென் திசையைத் தாழச்செய்து பூமியை நிலை நிறுத்த அகத்திய முனிவரைச் சிவபெருமான் அனுப்பினார். தென் திசைக்குப் போகும் அகத்தியர் தம் கமண்டலத்திற் கங்கை நீரைக் கொண்டு வந்தார். அவர் சோழ நாட்டிற்கு வந்ததும் விநாயகமூர்த்தி ஒரு காக்கை யுருக்கொண்டு முனிவர் கையிலுள்ள கமண்டலத்தைக் கவிழ்த்தார். அதிலுள்ள நீர் தரையில் சிந்திக் காவிரியாறாக ஓடத்


காவிரி யாறு
அரபிக்கடல்

தொடங்கியது. இவ்விவரத்தைச் சாத்தனார் தாம் எழுதிய மணிமேகலை என்னும் நூலில்

"அமர முனிவன் அகத்தியன் றனது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை"

என்று வெகு அழகாக அமைத்திருக்கின்றார்.

காவிரி யாறு மேற்கு மலைத்தொடர்ச்சியின் ஒரு பாகமாகிய குடகு மலையில் உற்பத்தியாகி மைசூர் இராஜ்ஜியத்தில் ஓடிப் பின் தமிழ் நாட்டில் முதலிற் கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களிலும், பின்பு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களிலும், பாய்ந்து வங்காளக் குடாக் கடலிற் சங்கமமாகின்றது. ஆடு தாண்டக்கூடிய குறுகலான தலைக் காவிரி இடையில் பவானி, அமராவதி முதலிய பெரிய உபநதிகளின் ஜலத்தைப் பெற்று ஒரு மைல் அகலமுள்ள அகண்ட காவிரியாகப் பெருகிக் கடைசியில் பல கிளை நதிகளாகப் பிரிந்து மறுபடியும் சிற்றாறாகி விருத்த காவிரியாகிறது. காவிரி மைசூர் இராஜ்ஜியத்தில் முதலாவது ஸ்ரீரங்கப் பட்டணத்திலும், பிறகு சிவசமுத்திரம் என்னுமிடத்திலும் இரண்டு கிளைகளாகப் பிரிந்து ஒன்று கூடுகிறது. நாலா பக்கத்திலுந் தண்ணீர் சூழ்ந்திருப்பதால் இந்த இரண்டு ஊர்களும் சிறு தீவுகளாகும். ஸ்ரீரங்கப் பட்டணத்தில் அரங்கநாதர் ஆலயமொன்று இருக்கிறது. இப்பட்டணத்திலிருந்த திப்பு சுல்தானது கோட்டையை ஆங்கிலச் சேனை முற்றுகை போட்டு ஜயித்ததால் இது சரித்திரத்தில் பெயர்பெற்ற இடம்.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் திருப்பராய்த் துறைக்குச் சமீபத்தில் அகண்ட காவிரியானது, காவிரி, கொள்ளிடம் என்னும் இரு பிரிவுகளாகப் பிரிகிறது. இவ்விரு நதிகளுக்கும் இடையில்தான் அரங்கநாதர் பள்ளி கொண்டுள்ள ஸ்ரீரங்கம் என்னுஞ் சிறந்த விஷ்ணு ஸ்தலம்

அமைந்திருக்கிறது. கொள்ளிடத்தின் தலைப்பில் ஒரு பெரிய அணைக்கட்டும், ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கில் காவிரியில் ஒரு அணையும் கட்டப்பட்டுள. முந்தியது மேலணை என்றும், பிந்தியது கல்லணை என்றும் பெயர் பெறும். இவ்வணைக்கட்டுகளின் உதவியால் காவிரியில் வரும் அதிக வெள்ளத்தை கொள்ளிடத்தில் திருப்பி விடுகிறார்கள். பிறகு காவிரி தஞ்சாவூர் ஜில்லாவில் விண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, அரிசிலாறு எனப் பல கிளைகளாகப் பிரிந்தோடிச் சாகுபடிக்கு உபயோகப்படுகிறது.

காவிரி யாறு தான் செல்லுமிடங்களிலெல்லாம் பல் வளங்களும் பரப்பி நாட்டைச் செழிக்கச் செய்யுந் தன்மை வாய்ந்துள்ளதைக் கண்டு சோழ மன்னர்கள் அதற்குக் கரை முதலியன எடுப்பித்துக் கால்வாய்கள் வெட்டி, அணைகள் கட்டுவித்தார்கள். அதனால், நாட்டிலே பயிர்த்தொழில் மிகவும் விருத்தியடைந்தது. இதனாலேயே "சோழவள நாடு சோறுடைத்து," என்று கவிகள் சோழ நாட்டைச் சிறப்பித்துக் கூறலாயினர்.

பயிர்த்தொழில் வசதிகள் மிகுந்த இடங்களில் ஜனத் தொகை விருத்தியாவதும், நாகரிகம் நாளுக்கு நாள் வளருவதும், வியாபாரம் செழிப்படைவதும் இயற்கை. காவிரி யாறு பயிர்த்தொழிலுக்கு முக்கியமான நீர்வளத்தைத் தந்ததால், அது பாயும் இடங்களில் ஜனங்கள் மிகுதியுங் குடியேறினர். காவிரி, குடகு மலையில் உற்பத்தியாகி மைசூர் இராஜ்ஜியத்தில் முதலில் ஓடி வந்தாலும், அதன் பயனெல்லாம் சோழநாட்டிற்கே உரியதாயிருந்தது. அதனால் சோழ நாடு நால்வகை வளமும் பெற்று மற்றெல்லா நாடுகளிலும் 'வசியும் வளனும் சுரந்து' விளங்கிற்று.

மனிதனுடைய அறிவு விரிந்து வளர்வதற்கேற்ப இயற்கைப் பொருள்கள் உபயோகமாகும் வழிகளும் பலவாகப்

பெருகுகின்றன. காவிரி யாறு முப்பது ஆண்டுகளுக்கு முன்வரையும் விவசாயத்திற்கே பெரும்பாலும் பயன்பட்டு வந்தது. ஆனால் 1899-ம் வருடம் முதல், மைசூர் அரசாங்கத்தார் காவிரியாற்றை மின்சார சக்தி உற்பத்தி செய்வதற்காக உபயோகித்து வருகிறார்கள். மைசூர் இராஜ்ஜியத்திலுள்ள சிவசமுத்திரத்தின் அருகே காவிரி யாறு நானூறு அடி உயரமுள்ள ஒரு ஆகாச கங்கையாக விழுகிறது. இந்த இடத்தில் சில இயந்திரங்களை வைத்து நீர்வீழ்ச்சியின் பலத்தினால் அவைகளின் சக்கரங்களை உருளச் செய்வதால் 4000 குதிரைகளின் பலமுடைய மின்சார சக்தி கிடைக்கலாயிற்று. இவ்வேலையை முதன் முதலாகத் தொடங்கியவர் மைசூர் திவானாக இருந்த ஸர். கே. சேஷாத்திரி ஐயர் ஆவர்.

அவருக்குப்பின் திவானாக வந்த ஸ்ரீ விசுவேசுவரையா என்பவர் கண்ணம்பாடி என்னுமிடத்தில் காவிரியில் அணையொன்று கட்டி, அதிலிருந்து மின்சார சக்தி உண்டாக்க ஏற்பாடுகள் செய்தார். இவ்வேற்பாடுகளின் மூலமாக மைசூர், பெங்களூர், கோலார் முதலிய இடங்களுக்கு வேண்டிய மின்சாரம் முழுவதும் இப்பொழுது மிகக் குறைந்த செலவிற் கிடைக்கிறது.

இன்றைக்கும் காவிரி யாறு சோணாட்டாருக்குப் பெருத்த நன்மையைச் செய்துகொண்டிருக்கிறது. "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத," காவிரியில் உரிய பருவங்களிலே தவறாத தண்ணீர் பெருகி வருவதால் திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்கள் தென்னிந்தியாவின் களஞ்சியமாக விளங்குகின்றன. இப்பொழுது அரசாங்கத்தார் மேட்டூர் என்னுமிடத்தில் காவிரி யாற்றில் ஒரு அணை கட்டித் தண்ணீரைத் தேக்கி ஒரு பெரிய ஏரி

உண்டு பண்ணியிருக்கிறார்கள். இந்த ஏரியிலுள்ள தண்ணீர் பல கால்வாய்கள் வழியாகத் திருச்சி தஞ்சை ஜில்லாக்களுக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்குள்ள நிலங்களைச் சாகுபடி செய்ய உதவுகிறது.

இவ்விதம் காவிரி யாறு பல வழிகளிலும் மனிதனுக்குப் பயன்படுவதால்தான் தென்னாட்டார் அதை ஒரு புண்ணிய நதியாகக் கொண்டாடி அதன் கரையோரமாகப் பல கோயில்களை யமைத்துப் பெருமைப்படுத்துகிறார்கள்.

## 7. கழுவுக்கேற்றவர் யார்?

ஓர் ஊரிலே கோவிந்தச் செட்டி என்றொரு வியாபாரி இருந்தான். அவன் பல வருஷங்களாக வர்த்தகஞ் செய்து ஏராளமான செல்வந் திரட்டினான். என்றாலும், அவன் அந்தப் பொருளை யெல்லாந் தாறுமாறாக வீண்செலவு செய்து அழித்துவிட்டான். அவனுடைய ஐசுவரியம் போய்விட்டபோதிலுங் கீர்த்திமட்டுங் குறையவில்லை. அவனுடைய வீடு ஒரு நாள் பெருங்காற்று மழையினால் விழுந்து போயிற்று. அதைக் கண்ட கோவிந்தச் செட்டி உடனே கூலியாட்களைக் கூப்பிட்டு, விழுந்துபோன சுவர்களை மறுபடியும் எடுக்க உத்தரவு செய்தான். அக்காலத்தில் வீடுகளுக்கு மண்சுவர் எடுப்பதுதான் வழக்கம். அப்படியே கூலியாட்கள் மண்சுவரெழுப்பிவிட்டுத் தம் இருப்பிடஞ் சென்றார்கள்.

கோவிந்தச் செட்டியின் பெயர் ஊரெங்கும் பிரசித்தமாயிருந்தபடியால் அன்று இரவு அவன் வீட்டில் ஒரு திருடன் வந்தான். திருடன் மண்சுவரில் கன்னம் வைத்து வீட்டிற்குள் நுழைந்தபொழுது சுவர் ஈரமாயிருந்ததால் அது கீழே உட்கார்ந்து விட்டது. அப்

பொழுது திருடன் சுவரினால் அழுத்தப்பட்டு மாண்டு போனான்.

மறுநாட் காலையில் திருடனுடைய இனத்தான் ஒருவன், 'மண் சுவர் உட்கார்ந்ததினால் என் உறவினன் மாண்டான்; அதற்குக் காரணம் கோவிந்தச் செட்டியே; அவனை எப்படியாவது கழுவில் ஏற்றவேண்டும்' என்று நினைத்தான்.

அக்காலத்திலே அத்தேசத்தை யாண்ட நிர்மூடன் என்னும் அரசனிடம் அவன் பிராது செய்துகொண்டான். மூடன் பிரதிவாதியாகிய செட்டியை வரவழைத்து, 'நீ யேன் ஈரச் சுவர் வைத்து ஒரு திருடனைக் கொன்றாய்?' என்று கேட்டான். அதற்குச் செட்டி, 'சுவாமி! எனக்கு ஒன்றுந் தெரியாது. சுவர் வைத்தவன்தான் இவ்விபத்துக்குக் காரணம்' என்றான். உடனே மன்னன் சுவர் எடுத்தவனை வரவழைத்து விசாரிக்க, அவன் 'மகாராஜாவே! அது என் குற்றமன்று. மண் கொடுத்தவன் இளகிய மண்ணைக் கொடுத்தான். நான் என்ன செய்வேன்' என்றான்.

வேந்தன் மண் கொடுத்தவனைக் கூப்பிட்டு விசாரித்த பொழுது, 'தரும ராஜாவே! அது என் பிழை யன்று; எனக்குக் குடங் கொடுத்த குயவன் அதன் வாயைப் பெரிதாகப் பண்ணிக் கொடுத்துவிட்டான். அவன் செய்த தவறான காரியத்தினாலேதான் இப்பெரும் பழி ஏற்பட்டது' என்றான்.

அரசன் குயவனைக் கூப்பிட்டு, 'அடா, குயவனே! ஏன் குடத்தின் வாயைப் பெரிதாகப் பண்ணினாய்?' என்று வினவினான். அதற்கு அந்தக் குயவன், 'ஐயா, நான் மண்ணெடுத்துச் சக்கரஞ் சுற்றிக் குடம் பண்ணும்பொழுது

தெருவழியாக ஒரு பெண் முறுமுறுத்துக்கொண்டு போனாள். நான் அதைப்பற்றிச் சிந்தித்தமையினால் வேலையில் ஞாபகப் பிசகாயிருந்துவிட்டேன். அப்பொழுது குடத்தின் வாய் பெரியதாய் அமைந்துவிட்டது. ஆனதினால் இந்தக் குற்றம் என்னைச் சார்ந்ததன்று. நான் வேலை செய்யும் பொழுது தெருவழியாகச் சென்ற அப்பெண்ணின் குற்றமே யாம்,' என்றான்.

அரசன் உடனே அந்தப் பெண்ணை வரவழைத்து, 'பெண்ணே! குயவன் குடஞ் செய்துகொண்டிருக்கும் பொழுது நீ என் அந்த வழியாக முறுமுறுத்துக் கொண்டு போனாய்?' என்று கேட்க, அதற்கு அவள் 'மன்னாதி மன்னனே! நான் தட்டானிடம் நகை கொடுத்திருந்தேன்; அவன் அதை வெகு நாளாகக் கொடுக்கவில்லை. அதை நான் வாங்கப் போய்க்கொண்டிருந்தேன். போகிற வழியில் தட்டானது ஏமாற்றுதலை நினைத்து முறுமுறுத்தேன்' என்றாள்.

அரசன் உடனே தட்டானை வரவழைத்தான். அவனைப் பார்த்து, "நீயேன் இப்பெண்ணின் நகையை வைத்துக்கொண்டு வெகு நாட்களாகக் கொடுக்கவில்லை?" என்று கேட்க, அந்தத் தட்டான் முதன் முதலில் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

உடனே அரசன் முதலான புத்திசாலிகள் எல்லோரும் திருடன் ஈரச் சுவரால் மாண்டதற்குத் தட்டானே காரணம் என்று தீர்மானித்து அவனைக் கழுவிற்போட உத்தரவு செய்தார்கள். அச்சமயத்திற் கோமுட்டி யொருவன் ராஜ சமஸ்தானத்தில் வேலையாயிருந்தான். தட்டான் அவனைப் பார்த்து, 'ஐயோ! எனக்கும் இந்தக் கழுவுக்கும் என்ன பொருத்தம்? கழுவோ பிரமாண்டமாயிருக்கிறது; நானோ மெலிந்திருக்கிறேன். ஆகையால் எனக்குங் கழு

விற்கும் இணையே யில்லை. கோமுட்டியோ நன்றாய் ஊதிப் பருத்திருக்கிறான். அவன் அல்லவோ கழுவுக்கேற்ற கோமுட்டி,' என்றான்.

உடனே தட்டான் சொல்லுவது சரியென்று மெச்சித் தன் அரசாங்கத்தில் வேலையிலிருந்த அந்தக் கோமுட்டியைக் கழுவிற்போட மன்னன் உத்தரவளித்தான். கோமுட்டி அகப்பட்டுக்கொண்டு தியங்கவே, அவ்விடத்தில் வேடிக்கை பார்க்க வந்தவர்களில் இருவர் அவனைக் கண்டு பரிதபித்து, எப்படியாவது அவனைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணி ஒருவர்க்கொருவர் ஆலோசித்துப் பேசிக்கொண்டு, இருந்தாற்போலிருந்து பிரமாதமான சண்டைபோட ஆரம்பித்தார்கள். இதைக் கண்ட அரசன் என்ன சமாசாரம் என்று கேட்க, அவ்விருவர்களில் ஒருவன், "மகாப்பிரபுவே! இந்த முகூர்த்தத்தில் எவன் ஒருவன் இக்கழுவிலேறிப் பிராணனை விடுகிறானோ அவன் மறு பிறப்பில் இந்தத் தேசத்திற்கு மன்னனாக வருவான் என்று சோதிட நூல் சொல்லுகிறது. நான் இந்தத் தேசத்திற்கு அரசனாக வேண்டுமென்று வெகு நாட்களாக ஆசைப்பட்டுக்கொண் டிருக்கிறேன். அதற்காக நான் கழுவிலேற வரும்பொழுது, இந்தப் படுபாவி அச் சூதை யறிந்துகொண்டு, 'நான்தான் முன் ஏறுவேன்,' என்கிறான். இது தான் எங்களுடைய வழக்கு" என்று சொல்லி முடித்தான். இதை நிர்மூடராஜன் கேட்கவே, "யாரடா அவன், என் இராஜ்ஜியத்தைக் கைப்பற்ற விரும்புவன்? என்னுடைய தேசத்திற்கு மற்றொருவன் அரசனாக வரக்கூடுமா! நான் அல்லவே வரவேண்டும்? ஏற்றுங்கள் என்னைக் கழுவில்," என்றான். உடனே அங்கிருந்தவர்கள் அரசனைக் கழுவில் ஏற்றி விட்டார்கள். நிர்மூட அரசன் ஒழிந்ததைப்பற்றி எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள்.

## 8. நாவு

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அடக்கி யாண்டு நல்வழிப்படுத்தினால் அவை உத்தம வழியக்காரர்கள்போலாம்; அவ்வாறு செய்யா விட்டால் கொடிய எஜமானர் போன்று துன்புறுத்தும். சுவை அறிவதற்கும், பேசுவதற்கும் முக்கிய உறுப்பாகிய நமது நாவை நல்வழியில் உபயோகித்தால் நலம் பெறலாம்; அல்வழியில் உபயோகித்தால் துன்பமே நேரிடும். ஆதலால் நாவை யடக்குதல் நமது கடமையாகும்.

நமது உடலை வளர்க்க உணவு இன்றியமையாதது. அறுசுவையோடு கூடிய நால்வகை உணவையுஞ் சுவைத்து நுகருவதற்கு நாக்கு மிகவும் அவசியமாகும். நாக்கின் உருசிக்காகப் பெருந்தீனி தின்பதும், அடிக்கடி சிற்றுண்டி உண்பதும் நோய்க் கிடந்தருவனவாகும்.

சுவை அறிவது எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவான தன்மையாகும். ஆனால் நாவின் மற்றொரு தொழிலாகிய பேசுந் திறமை மனிதருக்கே உரியது. பேச்சு விஷயத்திலும் நாவை நாம் அடக்கி ஆளுவது அவசியமாகும். "நாவசைய நாடசையும்" என்னும் பழமொழி நாவினது வலிமையையும் மேன்மையையும் நன்குணர்த்துகிறது. மெய்பேசுதல், இன்சொற் கூறல், பயன்பட உரைத்தல் ஆகிய இவைகளே நாவின் நல்ல உபயோகங்களாகும். பொய், வன்சொல், பயனில் சொல், குறளை முதலியவைகளை விரதமாக விலக்குதல் வேண்டும்.

நமது நாவு நன்மைக்கு மேதுவானது; தீமைக்கு மேதுவானது. அஃது ஒருவனை முடி சூட்டி உலகாளச் செய்யினுஞ் செய்யும்; இன்றேல் வறியரில் வறியனாய் வாணாளெல்லாம் வருந்தச் செய்யினுஞ் செய்யும். ஒருவனுக்குப்



டிமாஸ்தெனிஸ்.

[பக்கம் 34.]

பெருமை அளிப்பதும் நாவே; சிறுமை யளிப்பதுவும் நாவே. 'பல்லைக் கேறுவதும் நாவாலே, பல்லுடைபடுவதும் நாவாலே.'

மனிதரது நாக்கு இத்துணைச் சிறப்புப் பெற்றதாயினும் அஃது தீமைக்கு உடன்பட்டாலோ, அந்தோ! அதனால் இவ்வுலகமே அழிந்துபோம். இவ்வுலகில் அன்பைக் கெடுத்துப் பகையை மூட்டும்; மணி முடி மன்னரை மண் முடி வேந்தராக்கும்; தாய்க்கும் மகனுக்கும் பகையை விளைக்கும்; மனையாளைக் கணவனிடமிருந்து பிரிக்கும்; அஞ்சா நெஞ்சுடைய வீரரை நடுங்கச் செய்யும்; நா காவாமையால் விளையுந் தீமைகள் நவிலவும் படுமோ?

"யாகாவா ராயினு(ம்) நாகாக்க; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"

என்னும் நாயனாரது மொழிகள் தெய்வ வாக்கன்றோ?

நாம் நாவைக் காத்துக்கொள்ளும் பொருட்டே, வாலறிவனுகிய கடவுள் நாவைக் காக்கப் பல ஏற்பாடுகள் செய்திருக்கிறார். கண்ணைக் காக்க இரண்டு இமைகளை மட்டுமே யளித்தார். நாவைக் காப்பதற்கோ, முப்பத்திரண்டு தந்த வீரர்களையும், மேலிதழ் கீழிதழாகிய இரு கதவுகளையும் அமைத்திருக்கிறார். மனிதர்கள் அறிவீனத்தினுல் இந்நாவைத் தீய வழிகளில் உபயோகிப்பார்களென்று கருதியே பெட்டிபோன்ற வாய்க்குள் அதனைக் கடவுள் வைத்திருக்கிறார்.

நாகம் முதலிய சில பிராணிகளது நாவுகள் பிளவுபட்டு இரண்டாயிருக்கின்றன. இரண்டு நாவுகளுடைய அவ்வுயிர்கள் செய்யுந் தீமையிலும் இருநாப் படைத்த மனிதர் செய்யுந் தீமையே பெரிது, பெரிது! இவர்களுடைய நாவுகள் பிளவு படாமலே இருநாக்காய் இருப்பது ஆச்சரியமே

முதன் முதலில் தம்முடைய நாவைத் தம் வசப்படுத்திக் கொள்வதற்காகச் சிறு கூழாங்கற்களை நாவின்கீழ் அடக்கிக் கொண்டு மகா கவிகளுடைய நூல்களைக் கையிலேந்திக் கடற்கரையில் நின்று தம்மால் இயன்ற மட்டும் உரத்த குரலிற் கூவிப் படித்தார். இவ்வாறு சில மாதங்கள் பயின்றார். அவருடை தெற்றுவாய் வரவரத் திருந்திக்கொண்டே வந்தது; குரலும் கடலின் ஒலிபோல் முழங்க வாரம்பித்தது.

பிறகு பெரியோர்கள் கூறிய அரிய பழமொழிகளையும், வசனங்களையும் மனப்பாடமாகக் கற்றுவந்தார். நாள்தோறும் தமது வீட்டில் ஏகாந்தமான ஓர் அறையில் வைத்திருந்த பெரிய நிலைக்கண்ணாடியின்முன் நின்று கொண்டு தம்முடைய உடல்கோணல்களையும் அவலட்சணமான சைகைகளையுந் திருத்திக்கொண்டார்; தாம் பேசும் மொழிகளுடைய பொருளை விளக்க எவ்வாறு அபிநயங் காட்ட வேண்டுமெனப் புதிய முறைகளையுங் கற்றுக் கொண்டார். அன்றியும், முக பாவனைகளினாலேயே மனத்திலே தோன்றுங் கருத்துக்களை வெளியிடுந் திறமை பெற்றார்.

எல்லாவற்றிற்கும் மேலாக டிமாஸ்தெனிஸ் கடுமையான அப்பியாசம் ஒன்று செய்து வந்ததாகச் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். அவர் ஒரு நிலைக்கண்ணாடி முன்னின்று பேசப் பயிலுங்கால் தம்முடைய இரு தோள்களுக்கு நேராக இரண்டு கூரிய வேலாயுதங்களைத் தொங்கவிட்டார். அவர் அநாவசியமாய்த் தோள்களைத் தூக்கித் தூக்கிப் பேசுவது வழக்கமாகையால் அந்த வழக்கத்தை ஒழிப்பதற்காகவே அவ்வாறு செய்துவந்தார். அவர் தோள்களைத் தூக்கும்பொழுதெல்லாம் அவ்வேலாயுதங்கள் அவற்றைத் தாக்கின. அதனால் அவருடைய தோள்

களில் புண்களும் தோன்றின. ஆயினும் தோள்களைத் தூக்கித் தூக்கிப் பேசும் வழக்கத்தை விடும் மட்டும் அக் கொடுமையான வேலாயுதங்களை அகற்றவில்லை.

இங்ஙனம் சிரமப்பட்டு விடாமுயற்சியுடன் உப நியாசம் செய்யும் வகையைக் கற்றதனாற் சொற்பொழிவு நிகழ்த்துவதில் அவருக்கு நிகரானவர் எவருமே இலரா யினர். அவருடைய புகழ் உலகெங்கும் பரவியது. அவருடைய சொல்வன்மையினாலே பல அரசாங்கச் சீர் திருத்தங்களும் ஏற்பட்டன. அவருடைய சொற்பொழிவு கள் அவருக்குப் பின் தோன்றிய பலருக்கு முன் மாதிரிக ளாயின.

இவ்வாறு சுய முயற்சியால் தம்மை உலகம் புகழத் தக்க வாசாலகனாக்கிக்கொண்ட டிமாஸ்தெனிஸ் கி. மு. 385-ம் ஆண்டில் பிறந்தார். அவர் அறுபத்துமூன்று வருஷம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தார். டிமாஸ்தெனிஸின் இளமைப் பருவத்திலேயே அவருடைய தாய் தந்தையர் இறந்து விட்டனர். அப்பொழுது அவரது பெற்றோர் தேடிவைத்த செல்வத்தையும் பூஸ்திதிகளையும் அவருடைய சுற்றத்தார் அநியாயமாய்க் கவர்ந்துகொண்டனர். இவ் வாறு தம்முடைய சுற்றத்தார் செய்த தீமைகளை நகர பரி பாலன சபைகளிற் பேசி நீதி பெறும்பொருட்டு டிமாஸ் தெனிஸ் முதலில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பின்பு தம்முடைய வாக்கு வன்மையினால் அரசரும் நடுங்கத்தக்க வல்லமை பெற்றார். அவருடைய காலத்தில் கிரீஸ் தேசத்தில் மாசிடோனியா நாட்டை பிலிப் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். பிலிப் மன்னன் நாளுக்கு நாள் அதிக வல்லமை பெற்று, கிரீஸ் தேசத்தின் பல பாகங்களையும் படிப்படியாகத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டே வந்தான்.

இங்ஙனம் படை வலிமையால் வெற்றி பெற்று வந்த பிலிப் மன்னனால் தம்முடைய நகருக்கு வருந் தீமையை டிமாஸ்தெனிஸ் தெரிந்துகொண்டார். அவர் எப்படியாவது தமது நாட்டாரை எழுப்பி பிலிப் மன்னனுடைய தோள் வலிமையைத் தணிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். ஆகையால் அவர் பிலிப் மன்னனுக்கு விரோதமாகத் தமது நாடெங்கும் பல பிரசங்கங்கள் செய்தார். டிமாஸ்தெனிஸின் சொற்பொழிவுகளின் திறமையையும் வலிமையையும் அறிந்த பிலிப் மன்னன் நடுங்கினான். அவன் தன்னைச் சூழ்ந்து இருந்தவர்களை நோக்கி, "ஆதன்ஸ் நகரத்தாரின் சேனைகளையும் கடற்படையையுங் குறித்து எனக்குச் சற்றுமே பயமில்லை. ஆயினும் டிமாஸ்தெனிஸின் நாவுக்கு அஞ்சுகிறேன்," என்றான்.

டிமாஸ்தெனிஸ் பிலிப் மன்னனுக்கு விரோதமாக நிகழ்த்திய சொற்பொழிவுகளுக்குப் பிலிப்பிக்ஸ் என்று பெயர். அவை மிகவுஞ் சிறந்த சொற்பொழிவுகளென்பது கற்றறிந்தவரது அபிப்பிராயம். இவ்வாறு மன்னரும் அஞ்சும்படி சொற்பொழிவு நிகழ்த்திய டிமாஸ்தெனிஸின் சரிதை,

"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு
பட்டதடா வென்மார்பிற் பாண்டியா! நின்குலத்தைச்
சுட்டதடா வென் வாயிற் சொல்"

எனக் கம்பநாட்டாழ்வார் பாடியதாகக் கூறுஞ் செய்யுளை நினைப்பூட்டுகின்றது.

## 10. நறுமலர்

மங்கலப் பொருள்களாகிய மலர்கள், ஆகாயத்தில் அரும்புகின்ற நட்சத்திரங்கள் வானமண்டலத்தை வனப்புறச் செய்வதே போல, மண்ணுலகை அழகு செய்கின்றன. ஒரு தாவரத்தின் வேர், அடி மரம், கிளை, இலை முதலிய உறுப்புக்களில் புஷ்பமே நிகரற்ற எழில் உடையது. புஷ்பங்கள் தமது பன்னிறங்களாலும், பல் உருவங்களாலும், மிருதுத் தன்மையாலும், சுகந்தத்தாலும் நமது மனதை ரமிக்கச் செய்து நமக்கு இன்பம் அளிக்கின்றன. பூக்களின் பொலிவைப் புலவர்கள் பலரும் புகழ்ந்து பாடியுள்ளர்.

இம்மலர்கள் எண்ணிறந்த விதங்களில் நமக்கு உதவியாகின்றன. நறும்பூக்களைத் தலையில் சூட்டிக்கொள்ளுகிறோம். அவைகளை ஹாரங்களாகத் தொடுத்துக் கழுத்தில் அணிகிறோம். மலர்களால் வீடுகளை அலங்கரிக்கிறோம்; இறைவனை அருச்சிக்கிறோம். பன்னீர், அத்தர், தைலங்கள் முதலிய வாசனைத் திரவியங்கள் புஷ்பங்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. புஷ்பங்களிலிருந்து தேன் கிடைக்கின்றது. அவைகள் பலவற்றை மருந்தாகவும் உபயோகிக்கின்றோம்.

தமிழ் நாட்டில் மலர்களைக் கோட்டுப் பூ, கொடிப் பூ, நிலப் பூ, நீர்ப் பூ என நான்கு வகையாகப் பிரித்துளர். சண்பகம், மகிழ், புன்னை, பாதிரி முதலிய மலர்கள் மரக்கொம்புகளில் மலர்வதால் இவை கோட்டுப் பூக்கள் எனப்படும். செவ்வந்தி, ரோஜா, அலரி இவைகள் சிறு செடிகளிலும் புதர்களிலும் பூப்பதால் நிலப் பூ அல்லது

புதர்ப் பூ எனப் பெயர்பெறும். கொடிகளில் உண்டாகும் மல்லிகை, முல்லை, சம்பங்கி இவை கொடிப் பூக்களாகும். அல்லி முதலிய பூக்கள் நீரில் பூப்பதால் நீர்ப் பூ எனப்படும். மலர்களிற் சிறந்த செந்தாமரைப் பூவில் திருமகளும், வெண் தாமரையில் கலைமகளும் வசிப்பதாகக் கூறுவர்.

பூக்களின் பல வர்ணங்களைக் கவனியுங்கள் ! செம் பருத்தி, செவ்வலரி செந்நிறம் ; மல்லிகை, முல்லை வெண் ணிறம் ; சண்பகம், செவ்வந்தி மஞ்சள் நிறம் ; சம்பங்கி, மனோரஞ்சிதம் பச்சை நிறம் ; ஊதா, நீலம் முதலிய தனி நிற மலர்களும், மற்றும் கலப்பு நிறமுள்ள மலர்களும் எண் ணிறந்தன உள.

மரஞ் செடிகள் அரும்புவிட்டு மலரும் பருவங்களும் வேளைகளும் வித்தியாசப்படுகின்றன. மாசியில் மாவும், பங்குனியில் வேம்பும், வைகாசி ஆனியில் மல்லிகை முல்லை யுமாகப் பல்வேறு மாதங்களில் பல்வேறு தாவரங்கள் புஷ் பிக்கின்றன. மேலும் ஓரே தினத்தில் அதிகாலை, முற்பகல், நடுமத்தியானம், பிற்பகல், மாலை, இரவு, முன்னிரவு, பின் னிரவு முதலிய வெவ்வேறு வேளைகளில் வெவ்வேறு வகைப் பூக்கள் மலர்கின்றன. இவ்விஷயத்தை ஆராய்ந்த லின் னேயஸ் என்ற தாவர நூல் நிபுணர் மணிகாட்டும் பூப் பாத்திக் கடிகாரமொன்றைத் தமது தோட்டத்தில் அமைத்திருந்தார்.

ஒரு பூவைப் பரிசோதிக்கு மிடத்து, பூக்காம்பு, புற இதழ், பூ இதழ், பூந்தாள், மகரந்தப்பொடி, கருப் பை முதலிய பல பாகங்கள் காணப்படும். பூக்கள் தமது வண் ணத்தாலும் மணத்தாலும் தேனீ, வண்ணாத்திப் பூச்சி, எறும்பு முதலியவற்றைத் தம்மிடம் வருமாறு கவர்கின்றன. பூக்களிற் புகுகின்ற ஜந்துக்கள், உள்ளே இருக்குந் தேனை

நுகர்வதோடு, ஒரு மலரிலுள்ள மகரந்தத்தை மற்றொரு மலரில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. பிறகு, மலரில் பிஞ்சு உண்டாகி அது காய்த்துப் பழுத்து அதில் புதிய விதைகள் உண்டாகின்றன. இப்புதிய விதைகளே மறுபடியும் மரஞ் செடிகள் உண்டாக ஏதுவாகின்றன.

பூஞ்செடிகளை வைத்து வளர்ப்பது நமது கடமையாகும். சிறிது பெரிதென்றும், நாற்றமுள்ளது நாற்ற மற்றதென்றும், அழகுள்ளது அழகில்லதென்றும் எவ்வித மலரையும் அலட்சியஞ் செய்யாமல் கருத்துடன் போற்றுங்கள்.


## 11. ஒரு பழைய நகரம்

சென்னைமா நகருக்குத் தெற்கே முப்பது மைலுக்கப்பால் ஒரு சிறு கிராமம் இருக்கின்றது. இக்கிராமம் வெகு காலத்திற்குமுன் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. இப்பொழுது அது பெரிய நகரத்திற்குரிய இலக்ஷணங்களோடு தோன்றவில்லை யெனினும், நாம் அங்கே சென்று பார்ப்போமாயின், ஒரு காலத்தில் அது எத்தகைய நிலையில் இருந்திருக்கும் என்பது நமக்குத் தெரியவரும்.

அங்கே கடலோரமாகப் பெரிய பாறைகள் சிதறிக் கிடக்கின்றன. வெகு காலத்திற்குமுன் அந்நகரத்தை ஆண்ட அரசர்கள் அப்பாறைகளிற் பல சிற்பவேலைகள் செய்வித்து வைத்திருக்கின்றனர். அங்குள்ள ஒவ்வொரு பாறையும் மிகவும் அழகிய சிற்ப வேலைப்பாடமைந்து விளங்குகின்றது. சிற்பிகள் சில பெரிய பாறைகளைச் சிறு கோயில்களாகச் செதுக்கி யிருக்கிறார்கள். இக்கோயில்கள் யாவும் இரத வடிவாக அமைந்திருப்பதனால், இவற்றிற்குக்

கல் இரதங்கள் என்று பெயர். இவைகள் இருக்கும் ஊர், தற்பொழுது மகாபலிபுரம் எனப்படும்.

மகாபலிபுரத்தில் ஒரு கலங்கரை விளக்கிருக்கின்றது. இதற்குப் பக்கத்தில் ஒழுக்கேண்ணேசுரர் கோயிலும்,




ஒழுக்கெண்ணேசுரர் கோயில்

அந்தக் கோயிலின் உச்சியில் ஒரு விமானமும் இருக்கின்றன. முற்காலங்களில் இவ்விமானத்தில் பெரிய தீபங்களை ஏற்றி வைத்து, தூரத்திற் செல்லும் மரக்கலங்களை எச்சரிப்பது வழக்கம். ஆனால், புதிய கலங்கரை விளக்கைக் கட்டிய பின்பு ஒழுக்கெண்ணேசுரர் கோயிலைத் தீபஸ்தம்பமாக உபயோகிப்பதில்லை.

இவ்வொழுக்கெண்ணேசுரர் கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் பஞ்சபாண்டவர்களுடைய கல் இரதங்கள்

இருக்கின்றன. இந்த இரதங்களின் வடகோடியில் பாஞ்சாலி இரதமிருக்கிறது. அந்த இரதத்திற்குமுன் ஒரே




கல் இரதங்கள்

கல்லிற் செதுக்கிச் செய்த யானையின் உருவச்சிலை ஒன்றிருக்கின்றது.

நாம் இப்பொழுது மகாபலிபுரத்தில் இக்கோயில்களையும் இரதங்களையுந் தவிரப் பார்க்கக் கூடிய விநோதங்கள் வேறொன்றும் காணப்படவில்லை; என்றாலும், அங்குள்ள ஒவ்வொரு பாறையும், அப்பாறைகளிற் காணுஞ் சிற்ப வேலைகளும் முன்னாட்களில் வாழ்ந்த ஜனங்களின் நாகரிகத்தையும் அவர்களுடைய செல்வச் சிறப்பையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

மகாபலிபுரத்திலே கடற்கரையோரமாக ஓர் ஆலயம் இருக்கின்றது. இவ்வாலயத்தின்மேல் கீழ் கடலின் அலைகள் ஓயாமல் மோதுகின்றன. அதில் நின்றுகொண்டு கடலை நோக்கும்பொழுது, ஓயாமல் ஆரவாரித்து முழங்கிக் கொண்டிருக்கும் அலைகளின்கீழ் பழமையான நகரொன்று

மூழ்கிக் கிடக்கின்றது என்பதை நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னே பழைய மகாபலிபுரம் என்னும் பட்டினத்தைக் கடல் கொண்டதென்பது சரித்திர ஆராய்ச்சியால் தெரிய வருகின்றது.

இந்தியாவிலே பாறைகளைக் குடைந்தாக்கிய பல கோயில்கள் பற்பல இடங்களிற் காணப்படுகின்றன. ஆயினும் மற்றெங்கும் பார்க்கமுடியாத விசித்திர வேலைப்பாடமைந்த ஒரு பாறை மகாபலிபுரத்திலிருக்கின்றது. அந்தப் பாறையின்கண் மகா பாரதத்திலுள்ள ஒரு கதையை விளக்குஞ் சிற்ப வேலைப்பாடு காணப்படுகின்றது. அக்கதை பின்வருமாறாகும்:—

பாண்டவர்கள் கானகத்தில் வாசஞ் செய்து வருகையில் ஒரு தினம் வேதவியாசர் பாண்டவர்களது ஆச்சிரமத்திற்கு வந்தார். அவர் யுதிஷ்டிரரைத் தம்மிடத்திருத்தி அஸ்திர சாஸ்திரத்தை யுபதேசித்து, "தர்மரே! நீர் இதனை அர்ச்சுனனுக்குக் கற்பித்து அவனை இந்திரனிடமும் சிவபெருமானிடமும் அஸ்திரங்கள் பெறுமாறு அனுப்புக," என்று ஆஞ்ஞாபித்தார். அவ்வாறே யுதிஷ்டிரர் அர்ச்சுனனுக்கு அதனைக் கற்பித்து, அவனைத் தேவர்பால் அனுப்பினார்.

அர்ச்சுனன் விடைகொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு இமயத்தை யடைந்தான்; அங்குள்ள இந்திர நீலமலைச் சாரலையே தவமியற்றுதற்கு இடமென்று தெரிந்து கொண்டான்; அவ்விடத்திலமர்ந்து சிவபிரானை நோக்கிச் சிறிது காலம் கந்த மூலமருந்திக் கடுந்தவமியற்றலானான்.

அர்ச்சுனன் இயற்றிவந்த தவத்தை அழித்து, அவனையுங் கொல்லும்படி ஓரசுரனைத் துரியோதனன் ஏவி யனுப்பி

னன். அவ்வசுரன் கொடிய பன்றியுருக்கொண்டு வந்தான். அப்போது பக்தருடைய வேண்டுகோளுக்கிரங்கி அவரைக் காக்கும்படி விரைந்து வெளிப்படுஞ் சிவபெருமான் அர்ச்சுனனுக்கு அருள் புரிய நினைத்தார். அவர் வேட்டுவ வடிவங்கொண்டு அர்ச்சுனன் தவமியற்றும் இடத்தை அணுகினார். அங்கே பன்றி உருக்கொண்டு சென்ற மூகதானவன் அர்ச்சுனனைச் சமீபித்தான். வேடனாக வந்த கடவுளும் அப்பன்றி மேற் பாணந் தொடுத்தார். அதே வேளையில் அர்ச்சுனனும் அப்பன்றியினது சீற்றத்தையுங் கொடிய தோற்றத்தையுங் கண்டு பாணப் பிரயோகஞ் செய்தான். இருவர் பாணத்தாலும் வராகம் இறந்தது. வேட வடிவங் கொண்ட கடவுள் தாம் கொன்ற பன்றிமேற் பாணந் தொடுத்தது தகாதென்று விளையாட்டாக அர்ச்சுனனைக் கோபித்தார். அவனும் அக்கருணாநிதியினது வடிவத்தையறியாதவனாய், அப்பன்றியைத் தான் கொன்றதாக எதிர் வழக்கிட்டான். அதனால் இருவருக்கும் போர் மூண்டது. அப்போரிலே அர்ச்சுனன் தோற்று, கோபாவேசத்தால் வில்லைக் கொண்டு வேட வடிவினராகிய சிவபெருமானை அடித்தான். அவ்வடி சராசர மெங்கும் பட்டமையால், அது அர்ச்சுனன் மேலும் விழுந்தது. அப்பொழுது அவன் மிக்க கோப முடையவனாய் அவரை மற்போருக்கு அறைகூவ, இருவரும் மல்யுத்தஞ் செய்தார்கள். அச்சமரில் கடவுள் அவனைத் தூக்கி அந்தரத்தில் எறிந்துவிட்டுத் தமது மெய் வடிவத்தைக் காட்டியருளினார். அந்தரத்திலேயே அச்சோதி வடிவத்தைக்கண்ட அர்ச்சுனன் சேவித்துக்கொண்டு கீழே விழ, அவனை விழாமற் சிவபெருமான் தமது திருக்கரங்களில் தாங்கி யணைத்து ஆசிகூறி அவன் வேண்டிய பாசுபதாஸ்திரத்தைக் கொடுத்தார்.

இக்கதை முழுவதையும் அப்பாறையின்கண் பல சித்திரங்களாகச் செதுக்கியிருக்கக் காணலாம். மகாபலி புரத்திற்குப் போகின்றவர்கள் இச்சிற்ப வேலையைக் கண்டு மிகவும் வியப்படைகின்றனர்.

மகாபலிபுரத்திற் காணப்படுகின்ற பல அற்புதமான சிற்பவேலைகளைச் செய்தவர்கள் யாரென்று வெகு கால மட்டும் வெளிப்படாமல் இருந்தது. பிறகு மகாபலிபுரத்தி லுள்ள சிலா சாசனங்களின் மூலமாய் அவை பல்லவ அர சர்களின் ஆணையினால் செதுக்கப்பெற்றவையென்று தெரிய வருவதோடு, அந்நாட்களில் ஆண்ட பல்லவ மன்னர்களின் சிறப்பும் மாட்சிமையும் வெளியாகின்றன. நீங்கள் பெரிய வர்களாகின்றபொழுது இந்த இடங்களுக்குச் சென்று ஈங்குள்ள அற்புதக் காட்சிகளைக் கண்டு களிக்க மறவா தீர்கள்.

## 12. விநோதப் பாக்கள்

### வழுதியின் கலியாண விமரிசை

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக் கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்.

—ஔவையார்

### வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை

வாரிக் களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செங்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

## (பழிப்பது போலப் புகழ்வது)

தாண்டி யொருத்தி தலையின் மேலேறுளோ
பூண்ட செருப் பாலொருவன் போடானே—மீண்டொருவன்
வையானே வில்முறிய மாட்டானே தென்புலியூர்
ஐயா நீர் ஏழையானால்.

—காளமேகப்புலவர்

## வறுமைத் துன்பத்தால் வருந்திப் பிரமனைக் குறை கூறிப் பாடியது

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்
கத்தான் கற்பித்தானா ?
இல்லைத்தான் பொன்னைத்தான எனக்குத்தான் கொடுத்
துத்தான் ரட்சித்தானா ?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தானே வத்
தான் ஐயோ வெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான்
பண்ணினானே !

—இராமச்சந்திர கவிராயர்


## கலியாணத்துக்குப் போகக் கூடாமை

சோடில்லை மேல் வெள்ளைச் சொக்காவில்லை நல்ல சோமனில்லைப்
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு விருப்பு மில்லை விவாகமது
நாடில்லை நீ நெஞ்சமே எந்த வாறினி நண்ணுவையே.

—இராமலிங்கசுவாமி

## 13. எரி மலைகள்

மாணாக்கர்களே! நீங்கள் தீபாவளிப் பண்டிகையில் வாண வெடிகள் வாங்கிக் கொளுத்தி விளையாடுகிறீர்களல்லவா? அவ்வித வாணங்களில், பொரி வாணம் என்பதைப் பார்த்திருப்பீர்கள். இது, அடி பருத்தும் நுனி சிறுத்துமிருக்கிற ஒரு மண் குழாயில் வெடிமருந்தை அமைத்துச்



செய்யப்படுகிறது. இதன் அடிப்பாகம் களிமண்ணால் மூடப்பட்டுள்ளது; நுனியில் வாய் போன்ற ஒரு சிறு துவாரம் விடப்பட்டிருக்கிறது. இத்துவாரத்தில் தீ வைக்கும்போது உள்ளேயிருக்கும் வெடிமருந்தில் தீப்பற்றி, அது எரிந்து வெளிக்கிளம்பவே, பொறிகள் நாற்றிசையிலுஞ் சிதறி விழுகின்றன. அக்குழலின் வாயைக் கவனித்தால் அதில் களிமண்ணும் வெடிமருந்தும் உருகி, வழிந்திருப்பதைக் காணலாம்.

இதைப்போலச் சில மலைகளினுச்சியிலிருந்து மகத்தான பொரி வாண வேடிக்கைகள் நிகழ்கின்றன. அவை பார்ப்பதற்கு விளையாட்டாயிராமல் மிகுந்த அச்சத்தையும் வியப்பையும் விளைவிக்கின்றன. அம்மலைச் சிகரங்கள் நெருப்பைக் கக்குவதினால், அவற்றை எரி மலைகள் என்று கூறுகிறோம்.

எரி மலைகள் அக்கினிச் சுவாலையைக் கக்கத் தொடங்குமுன் சில அறிகுறிகள் ஏற்படும். முதலில் பேரிடி முழக்கங்கள் கேட்கும். பூமி யதிர்ச்சியுண்டாகும். பின்பு எரி மலை வாயினின்று தூசுகளின் திரள் நீராவியோடும் புகையோடுங் கலந்து ஆகாயத்தில் வெகு வேகமாய்க் கிளம்பி எழும். அத்தருணம் மின்னலுண்டாகி இடியிடிக்கும். வானத்தில் எழுந்த தூசுப் படலம் சூரியனை மறைத்து விடும். இவ்வித அடையாளங்கள் தோன்றும்போது இம் மலையடிவாரத்திலுள்ள ஜனங்கள் தங்கள் பொருள்களை எடுத்துக்கொண்டு வெளியேறி விடுவார்கள்.

மும்முரமாக எரி மலைகள் முழங்கும்போது பழுக்கக் காய்ந்த சிறு கற்களும் பெருங்கற்களும் வெகு விசையோடு வானோக்கி எழுந்து, நாற்றிசையுஞ் சிதறி, வெகுதூரம் பறந்து விழும். அத்தகைய பெருங்கற்கள் சமீபத்திலுள்ள ஊர்களில் விழுமாயின் அவ்வூர்கள் அழிவது திண்ணம். எரிமலைகள் சில நாட்கள் வெகு கோபதாபத்துடன் கர்ஜித்து முழங்கிச் சமீபத்திலுள்ளன அனைத்தையும் கிடுகிடுவென ஆட்டுவித்து, உருகிய மண் மாரி சொரிந்து ஆரவாரித்தபின் தன் வாய்வழியாயும், வெடிப்புக்கள் வழியாயும், செந்நிறமான அக்கினிக் குழம்பைக் கக்க ஆரம்பிக்கும். இங்ஙனம் உருகிய கல், மண், உலோகங்கள் முதலியன கூடிய அக்கினிக் குழம்பைக் கக்கத் தொடங்கும்பொழுது, ஆரம்பத்திலிருந்த ஆரவாரங்கள் அமர்ந்துகொண்டே

வரும். எரிமலைவாயினின்று வெளியேறுந் தீக்குழம்பு தக தகவென மகா பயங்கரமாய் வெகு தீவிரத்தோடு வெளிப் பட்டு, விரைவாய் நாலாபக்கமுஞ் சரிந்து ஓடி வழியும். வெகு விரைவாய் வரும் இவ்விதத் தீப் பிரளயத்தின்முன் நாடு நகரம் பயிர் பச்சைகள் யாவும் புதையுண்டுபோம். இப்படி வழிந்தோடும் அக்கினிக்குழம்பு, எரி நரகத்தை நிகர்க்கும்.

தீக்குழம்பு வழிந்தோடிய பின், அது குளிர்வதற்கு நாலு ஐந்து வருஷங்களாகும். குளிர்ச்சியடையுந்தோறும் மேற்பாகம் கறுத்து, வெடித்துக்கொண்டே வரும். வெடித்த வெடிப்புக்கள் வழியாக நோக்குமிடத்து, உட்பாகத்திற் செம்மையான தீக்குழம்பு இன்னும் ஆறாதிருப்பதைக் காணலாம். நாளடைவில் உட்பாகமும் குளிர்ந்து கடினத் தன்மை யடையும்.

இவ்வாறு எரி மலைகளில், உற்பாதமுண்டான சில காலத்திற்குப் பின் அவை அடங்கி ஓய்ந்துவிடும். நெருப் பைக் கக்காதிருக்கும் இம்மலைகள் ஒன்றின்மேல் ஏறிப் பரிசோதிப்போமாயின், அதன் உச்சியில் அகன்ற குழி யொன்றைப் பார்க்கலாம்; அதுவே எரி மலையின் வாய். இந்த வாயினின்று பூமிக்குள் நீண்ட கிணறுபோன்ற பிலம் ஒன்று செல்கின்றது. இவ்வழியாகவே எரிமலை நெருப் பைக் கக்குகின்றது.

எரி மலைகளிலிருந்து நெருப்பும், நீராவியும், உருகிய கல் மண் முதலியவைகளும், வெளி வருவதற்குக் காரணம் யாது? இதை அறிய ஆதிகாலத்தில் பூமி எவ்வாறு உண் டாயிற்றென்றும், எவ்வித மிருந்ததென்றும், நாம் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில் ஒரு பெரிய சூரிய னிருந்ததாகவும், அதிலிருந்து வெடித்து வெளியேறிய ஒரு பெரும் நெருப்புப் பொரிதான் இப்பூமி யென்றும் கரு தப்படுகிறது. கதிரவனைப்போலவே இவ்வுலகமும் ஓர்

அக்கினிக்கோளமாக இருந்தது. வெகுகாலம் செல்லவே அது ஆறிக் குளிர்ந்து உறைந்தவிடத்துப் பூமியின்மேல் நிலப் பரப்புண்டாயிற்று. ஆனால் பூமியின் உட்பாகம், ஆறாமல் இன்றும் உருகிய கல் மண் உலோகங்களின் குழம் பாகவே இருக்கிறதென்று ஊகிக்கப்படுகிறது. இதற்கு அறிகுறியாக நாம் ஒரு கிணற்றுக்குள் இறங்கும்பொழுது அங்குள்ள காற்று சிறிது உஷ்ணமாக இருப்பதை உணர லாம். அப்படியே நாம் பூமிக்குள் வெகுதூரம் செல்வோ மாயின் அங்கு மிகுந்த உஷ்ணமிருக்கும். மேலும், பூமி யின் வெளிப்பாகம் மிகவுங் கனமாயிருப்பதால் அதன் மத் திய பாகங்கள் அழுத்தப்பட்டுள்ளன. உலகத்தில் சிலவிடங் களில் வெகு ஆழஞ் செல்லும் துவாரங்கள் இருப்பதால் பூமிக்குள்ளிருக்கும் உருகிய பொருள்களும், நெருப்பும் அவற்றின் வழியாக வெளிப்படுகின்றன. இவைகளே எரி மலைகளாகும்.

மத்திய அமெரிக்காவிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும், ஜப்பான் பிரதேசத்திலும் எரி மலைகள் அதிகமாக இருக் கின்றன. இங்ஙனம் பசிபிக் மஹா சமுத்திரத்தைச் சூழ எரிமலைகள் அமைந்திருப்பதால், இவ்வரிசையை "எரிமலை வட்டம்", என்று கூறுவார்கள். மத்திய தரைக்கடலை யடுத்த இத்தாலியா தேசத்திலுள்ள வெஸுவியஸ் எரிமலை யும், சிசிலித் தீவிலுள்ள எட்னு எரிமலையும் உலகத்தில் பிரசித்திபெற்றன. சில எரிமலைகள் எப்பொழுதும் நெருப் பைக் கக்கி முழங்கிக்கொண்டே இருக்கும்; மற்றும் சில அவ்வாறு முழங்கிய பிறகு அமைதியாக இருக்கும். ஆகை யால் இவைகள் முழங்கும் எரி மலைகள், முழங்கி ஆறிய எரி மலைகள் என இருவகைப்படும்.

எரிமலைகள் பெரிய பட்டணங்களையுஞ் சுற்றுப் பிர தேசங்களையும் அழித்து நாசஞ் செய்கின்றனவென்றாலும்,

இவற்றால் உலகத்திற்கு நன்மையு முண்டு. எரிமலைகளி லிருந்து வெளிவரும் கல்லும் மண்ணும், குளிர்ந்த பிறகு நல்ல வளமுள்ள புதிய நிலமாகிறது. இம்மலைகளிலிருந்து கந்தகம் கிடைக்கிறது. நடுக் கடல்களில் எரிமலை முழக் கத்தால் தீவுகள் ஏற்படுவது முண்டு. எரிமலைகளைக் கவனிக் கும்பொழுது கடவுளுடைய ஞானமுஞ் செய்கையும் நம் முடைய சிற்றறிவுக்கு எட்டாதனவென்று தெரிந்து கொள்ளுகிறோம்.

## 14. கர்ணன் (முதல் பாகம்)

யாசிப்பவருக்கு வரையாது அளிப்பவர் வள்ளல் எனப் படுவர். அவ்வித வள்ளல்கள் பலர் நமது இந்திய நாட்டில் வாழ்ந்துளர். அவர்களில் முதன்மையாக விளங்கியவன் பாரதப் போரில் மிகவும் புகழ்பெற்ற வீரனுகிய கர்ணனே. இதுபற்றி, "கர்ணனுக்குப் பின் கொடையுமில்லை, கார்த்தி கைக்குப் பின் மழையுமில்லை" என்னும் பழமொழி வழங்குகிறது.

கர்ணன் பாண்டவரின் முன்னவன். இளங்குழவி யாகிய கன்னனை அவனுடைய தாயாகிய குந்திதேவி, ஒரு தொட்டிலிலிட்டு ஆற்றோடு விட்டுவிட, அக்குழவியை நந்த னன் என்னுந் தேர்ப்பாகன் ஒருவன் கண்டெடுத்து வளர்த்துவந்தான். கன்னன் இளமைப் பருவத்தில் துரி யோதனன் முதலிய கௌரவர்களுடனே விளையாடி அவர் களோடு பெரு நட்புப் பூண்டான். வாலிபப் பருவம் எய்தி யதும், சுயோதனன் கன்னனுக்குத் தற்காலம், அஸ்ஸாம் எனப் பெயர்கொண்ட அங்கநாட்டின் அரசுரிமையை அளித்தான்.

அங்கநாட்டின் அரசனுகிய கன்னன் தன்னிடம் வந்து இரக்கும் ஏழைகள்பால் பேரன்பு வைத்து, அவர்கள் வேண்டு மளவு பொன்னும் மணியும் ஆடையும் அளிப்பான்.

அதனால் அவன் புகழ், மாலை வெயில் நிழல்போல் ஓங்கிற்று. உலகத்தார் கன்னனைப் போற்றுவதைக் கண்ட துரியோதனன், ஒரு நாள் பொறாமை கொண்டு, தானும் அவன் போலவே தானங் கொடுத்துப் புகழ்பெற வெண்ணினான். "சுயோதன மகாராஜர் இரப்பவர்க்கு இல்லையென்னாது தானஞ் செய்வார்" என்று அவனுடைய ஏவலாளர் நாடெங்கும் பறை யறைந்தனர். அவ்விதமே சிறிது காலம் வந்தவர்க்கெல்லாந் தருமஞ் செய்தான். ஒரு நாள் வயது முதிர்ந்த அந்தணர் ஒருவர் சுயோதனனை யணுகி, ஒரு மாதம் சென்று தான் ஒரு மா மகம் செய்யப்போவதால், அதற்கு வேண்டிய விறகெல்லாம் சுயோதனன் உதவ வேண்டுமென்று கேட்டார். சுயோதனன் அவ்வாறே தருவதாக வாக்களித்தான். ஒரு மாதஞ் சென்றது; மழைக் காலமுந் தொடங்கியது. எட்டு நாள் விடாது அடை மழை பொழிந்தது. அப்பொழுது ஒரு நாள், அவ்வந்தணர் சுயோதனனிடம் திரும்ப வந்து, முன்பு வாக்களித்தவாறு விறகு தரும்படி அவனை வேண்டினார். துரியோதனன் அவர் வருகையை எதிர் பார்த்திலன். மழையோ விடாது பெய்து கொண்டிருந்தது. ஏவலரை அழைத்து அந்தணருக்கு விறகு அளிக்குமாறு கட்டளையிட்டான். ஆயினும் அவர்கள் அக்கட்டளையை நிறைவேற்றக் கூடாமற் போயிற்று. அரவக்கொடியோன் தன்னால் வாக்களித்த வாறு செய்ய முடியாமையை அந்தணருக்கு அறிவித்து, அவர் செய்யவேண்டிய வேள்வியைச் சில நாட்கள் பொறுத்துச் செய்ய வேண்டினான்.

அந்தணர், "குறித்த நாள் தவறி விடுகின்றதே!" என்று மிக வருந்தி, வந்த வழியே திரும்ப முயன்றார். அப்பொழுது அவருக்குக் கன்னனிடஞ் சென்றால் தமது விருப்பம் நிறைவேறுமென்று தோன்றியது. உடனே

அவனிடஞ் சென்றார். அப்பொழுது கன்னன் உணவு கொள்ளப்போகும் வேளை. அவனை நோக்கி அந்தணர் வேள்விக்கு விறகு தருமாறு வேண்டினார். விடா மழையில் காட்டுக்குச் சென்று விறகு கொண்டு வருவதென்பது முடியாத காரியம். ஆகவே கன்னன் யாது செய்வது என்று சற்று ஆலோசனை செய்து, பின்பு பணியாளரை அழைத்துத் தன் மாளிகையின் ஒரு பாகத்தின் கூரையைப் பிரித்து அங்குள்ள மரச்சாமான்களை யெல்லாம் வண்டிகளிலேற்றி அந்தணர் கூறுமிடத்திற்கு அனுப்ப ஆணையிட்டான். அந்தணர் மிகவும் மகிழ்ந்து கன்னனை வாழ்த்தி விடை கொண்டு சென்றார்.

இங்ஙனம் உலகம் போற்றப் பெருங்கொடையாளியாக வாழ்ந்த கன்னன், தன்னுயிர்க்குயிராகி என்றென்றும் வெற்றியைத் தருவதற்குச் சாதகமான பொருள்களையும் தன்னிடம் வந்து இரப்பவர்க்கு அளிக்கும் பெருந்தகையாய் விளங்கினான். கன்னன் பிறக்கும்பொழுது அவனுடன் கூடவே பிறந்த கவச குண்டலங்கள் அவனிடமிருக்கும் வரை, அவனை எவரும் வெல்ல முடியாததை யறிந்த கண்ணபிரான், அவைகளை அவனிடமிருந்து பெற்றுவர இந்திரனை ஏவினார். இந்திரன் எவ்விதம் அவைகளைப் பெறுவது என்று யோசித்தான். இரந்து பெறுவதே எளிய வழி என்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே அவன் வயது முதிர்ந்த அந்தணன் உருக்கொண்டு கன்னனை அணுக முயன்றான். கன்னனுடைய தந்தையாகிய சூரியன் இதனை யறிந்து, தன் மகனை எச்சரிக்க விரும்பினான். அவனிடம் சென்று அவன் அணிந்திருந்த குண்டலங்களைப் பெறுவதற்கு இந்திரன் சற்று நேரத்தில் அங்கே வருவானென்றும், கன்னனுடைய உயிரை அவை பாது

காப்பதால், இந்திரனுக்கு அக்குண்டலங்களைத் தானஞ் செய்யக்கூடாதென்றும் சூரியன் கூறி மறைந்தான். சற்று நேரத்தில் கிழப்பிராமண உருவோடு இந்திரன் கன்னனை யணுகி அவனது குண்டலங்களைத் தனக்களிக்கும்படி வேண்டினன். கன்னன் மறு மாற்ற முரைக்காது அவை களைக் கழற்றி அவனுக்கு அளித்தான். இந்திரன் அவனது தரும சிந்தையை மிகவுங் கொண்டாடி வெற்றி வேல் ஒன்றை அவனுக்கு அளித்துவிட்டு மறைந்தான்.

## 15. கடிதம் எழுதுதல்

நமக்கு எதிரே இருப்போருக்கு நம் மனதது எழும் எண்ணங்களைத் தெரிவிக்க நாம் நேரில் அவருடன் சம்பாஷிக்கிறோம்; ஆனால், வேலையிலிருப்போருக்குச் சமாசாரங்களை அறிவிக்கத் தூர சம்பாஷணைக் கருவி, தந்தித்தபால், கம்பியில்லாத் தந்தி இவைகள் நவீன காலத் தில் ஏற்பட்டிருப்பினுங் கடிதப் போக்கு வரவு இன்றி யமையாதது. நம்மவரில் பெரும்பான்மையோர் உத்தி யோக முறையில்லாத சொந்தக் கடிதங்களைக்கூட, போலிப் பெருமைபற்றித் தாய்மொழியில் எழுதாமல் ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளில் எழுதுகிறார்கள். இப் பழக்கம் மிகவும் கண்டிக்கத்தக்கது. தாய் பாஷையைப் போற்றக் கடமைப்பட்டுள்ள தமிழராகிய நாம், இவ்விதக் கடிதங்களைத் தமிழ் மொழியாலும், தமிழ் முறைகளிலும் எழுதப் பழகுவது அவசியமாகும். ஆதலால் கடிதம் எழு துஞ் சில முறைகளை இங்கு விவரிப்போம்.

கடிதமெழுத நேர்த்தியான உயர்ந்த காகிதம், நல்ல எழுதுகோல், நல்ல மை இவைகளையே உபயோகித்தல் நலம். எழுத்துக்களை நிறுத்தி மணி மணியாக எழுதவேண்டும்.

கோழி கிறுவதுபோல் பிறருக்கு விளங்காதவாறு எழுது தல் அறவே கூடாது. அவ்விதம் எழுதிய லிகிதங்கள் அரு வருப்பானவை. பல அடித்தல்களும், திருத்தங்களுமுள்ள கடிதங்களை மறுமுறை சரியாக எழுதியே அனுப்பவேண் டும். சுத்தமாகவும் தெளிவாகவும் அச்சடித்தாற்போ லுள்ள கையெழுத்துக் கடிதங்கள் படிப்போருக்கு இன்ப மளிக்கும். மேலும் எழுத்துப் பிழை, சொற்பிழை, பொருட் பிழை இவை நேரிடாமல் எழுதுவதில் கருத்தாய் இருத்தல் வேண்டும். இவை கடிதம் எழுதுவதில் சில பொது விதிகளாகும்.

எழுதுவோர் விலாசம், எழுதுந் தேதி, தலைப்பில் மரியாதை முறை, சமாசாரம், முடிவில் மரியாதை முறை, கடிதம் போய்ச் சேரவேண்டிய விலாசம் ஆக ஆறு பாகங் களாக ஒவ்வொரு கடிதத்தையும் பிரித்து ஒவ்வொன்றை யும் தக்க முறையில் எழுதவேண்டும். உறவினர், நண்பர், வியாபாரிகள், அதிகாரிகள் முதலிய ஒவ்வொரு வகையின ருக்கும் கடிதம் எழுதும் முறைகளில் சில வித்தியாசங்கள் உள. மேலும் மூத்தோர், ஆடவர், மகளிர் இவர்கட்கு எழுதுங் கடிதங்களும் வித்தியாசப்படும். இவைகளில் உறவினருக்கு எழுதும் மாதிரிக் கடிதமொன்று இங்கு இணைக்கப்பட்டுளது.

25, வடக்கு வீதி,<br>
சிதம்பரம்,<br>
22—11—1931.

அன்பார்ந்த மாமா அவர்கட்கு, வணக்கம் பல. இவண் நலம். அவண் குழந்தைகள் முதலானோரது நலமறிய அவா. நான் மூன்று நாள் அனுமதி பெற்றுக்கொண்டு,

திருவாவடுதுறையில் நடைபெறும் நெருங்கிய உறவினரது திருமண விழாவிற்கு வரும் வாரத்தில் செல்ல எண்ணி யிருக்கிறேன்.

நாளது மார்கழி மாதத்தில் இவ்விடத்தில் நிகழும் திருவாதிரை உற்சவத்திற்கு நிறைநாள் செல்வன் சுந்தரன், திருவளர் செல்வி காந்திமதி இவர்களுடன் தாங்கள் இங்கு வருமாறு வேண்டுகிறேன்.

கிராமத்தில் நல்ல மழை சொரிந்து பயிர் பச்சைகள் செழிப்பாயிருக்குமென்று நினைக்கிறேன். சீக்கிரத்தில் பதில் எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்பும் பணிவுமுள்ள,
தி. நடராஜன்.

விலாசம் :—

| |
|---|
| உயர் திருவாளர் சுப்பிரமணிய முதலியார் அவர்கள்,<br>72, தெற்கு வீதி,<br>கீழ்வேளூர். |

## 16. கர்ணன் (இரண்டாம் பாகம்)

பாரதப் போர் தொடங்கிற்று. கௌரவர் பக்கத்திலே, பற்பல வீரர்கள் தலைமை வகித்துச் சேனையை நடத்திப் பதினைந்து நாட்கள் போர் செய்தனர். பகைவராகிய பாண்டவரின் அம்புபட்டு அவர்களில் பலரும் மாய்ந்தனர். பதினேழாம் நாட் காலையில் சுயோதனன், கன்னனைச் சேனைத்தலைவனாக நியமித்தான். அவனும் தன் சேனையை அணிவகுத்து எதிரியை வளைந்தான்.

கன்னனுக்கும் பாண்டவர்களில் அருச்சுனனுக்கும் குழந்தைப் பருவமுதலே தீராப் பகையுண்டு. இருவரும் வில் வித்தையில் நிகரற்றவர்கள். ஆகவே ஒருவர் உயிருடன் இருக்கும் வரை மற்றவர் புகழ் ஒப்பில்லாமல் சோபிக்கக் கூடவில்லை. மேலும், அருச்சுனன் மணஞ் செய்த பாஞ்சாலியைக் கன்னனும் மணஞ் செய்ய விரும்பியிருந்தான். அதனாற் பகை இன்னும் வளர்ந்தது. அருச்சுனன் கன்னனைக் கொல்லவும், கன்னன் அருச்சுனனைக் கொல்லவுஞ் சபதஞ் செய்திருந்தனர். போர்க்களத்தில் அருச்சுனனும் கன்னனும் நேருக்கு நேர் சந்திக்கவும் அவர்களுடைய பகை கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. இருவரும் தனி நின்று மிக்க மும்முரமாகப் போர் செய்தனர். விஜயன் தன்னுடைய மேலான விற்பயிற்சியால் கன்னனுடைய தேர்ப்பாகனை யடித்து, கன்னன் கையிற் கொண்டிருந்த வில்லையுமொடித் தெறிந்தான். சில அம்புகள் கன்னன் மேலும் தைத்தன. ஆயினும் அவன் எதிரிக்குச் சளையாது, மற்றைய படைகளாற் போரை நடத்திக் கொண்டிருந்தான். அருச்சுனனும் கைசோர்ந்து எதிரியின் திறமையை வியந்து, "கன்னனை எங்ஙனம் வெல்லுவது?" என்று மனந் தளர்ந்தான்.

அருச்சுனன் அங்ஙனம் மனந்தளர்ந்ததை, அவனுக்குத் தேரோட்டிக்கொண்டிருந்த எல்லாம்வல்ல கண்ணபிரான், அவனுடைய முகக்குறிகளால் அறிந்தார். அறிந்ததும் அவர் அருச்சுனனை விளித்து, "பார்த்த! வருந்தாதே ! மனத்தை உறுதிப்படுத்திக்கொள் ! கன்னனை அறக் கடவுள் முன்னின்று காத்துக்கொண்டிருக்கிறது. இதோ இப்பொழுது பார்!" என்று அருச்சுனனுடைய அகக் கண்ணைத் திறந்தார். மிக்க வொளி யுள்ள தருமதேவதை கன்னன்முன்னே நின்று அருச்சுனன் எய்யும்

அம்புகளை யெல்லாம் அவன்மீது படாது விலக்கிக்கொண் டிருந்ததைக் கண்ட பார்த்தன், "கன்னனுடைய பெருமை இருந்தவாறென்னே! இவனை வெல்வதற்கு நான் தகுதி யுடையவனோ!" என்று மனமுடைந்து கூறினான்.

கண்ணன் அருச்சுனனை நோக்கி "விஜய, தருமம் தலைகாக்கும் என்னும் முதுரையை நிலை நாட்டவேண்டித் தருமதேவதை அவனைக் காத்து நிற்கின்றது. எனினும் கவலை யுறேல்; உனக்கு வெற்றியளிப்பேன்" என்று தேற் றினார். பின்னர் பார்த்தனுக்கு வெற்றியளிக்கவும், கன்ன னுக்கிறுதி சூழவுந் தன்னுள்ளே சூழ்ந்து, கன்னன் செய்த தருமங்களின் பலனை அவனிடம் இரந்து பெறுவதே வழி யென்று ஸ்ரீ கிருஷ்ணன் உணர்ந்தார்.

கிருஷ்ணபகவான் குள்ளமான விருத்த வேதியன் உருக்கொண்டு களைப்புற்றிருந்த கன்னனை யணுகி, "ஓ கர்ண! எளிய அந்தணனாகிய யான் மேருமலையில் தவஞ் செய்து வாழ்பவன். வறுமையால் வாடுகின்றேன். 'கன் னன் இரப்பவர்க்கு இல்லையென்னாது அளிக்கும் வள்ளல்' என்று எல்லாவுலகும் புகழ்வது கேட்டு நின்னை நாடி வந் தேன். எனக்கு ஏதேனும் இப்பொழுதே தரவல்லையோ?" என்றான். அது கேட்ட கன்னன், "இப்பொழுது யான் எதனைக் கொடுக்கமுடியுமோ அதனைக்கேளுங்கள்; திண்ண மாய்த் தருவேன்" என்றான். உடனே விப்பிரன், "ஐய! நீ இதுவரை செய்த தருமங்களின் பலனை எனக்கு அளி; யான் அதனைக் கொண்டு உய்வேன்" என்றான். தன்னாற் கொடுக்கக் கூடியதையே அந்தணன் விரும்பிக் கேட்டதற் காக மனமுவந்து,

"ஆவியோ நிலையிற் கலங்கியது,
யாக்கை அகத்ததோ புறத்ததோ வறியேன்;

பாவியேன் வேண்டும் பொருளெலாம்
நயக்கும் பக்குவந் தன்னில்வந் திலையால்,
ஒவிலாதி யான் செய் புண்ணியம்
அனைத்தும் உதவினேன் கொள்க, நீ * * * "

என்று, தான் செய்த கருமத்தின் பயனை அளித்தான். அது கேட்ட அந்தணர், "கன்ன, தானஞ் செய்வது நீர் வார்த்துச் செய்யவேண்டாமோ? புனலுடன் தருக" என்றார். கன்னன் தண்ணீர் இல்லாததால் தன் மெய்யில் தைத்திருந்த அம்பொன்றை யுருவிப் புண்வாயிலிருந்து வடிந்த இரத்தத்தைக் கையிலேந்தி, "அந்தண! இதோ மனமுவந்து ஏற்றருள்க!" என்று கூறிக் கண்ணன் கையில் குருதியை வார்க்க, அது மாயோன் மகிமையால் கங்கை நீராக மாறி விழுந்தது. மூவுலகளந்த முதல்வரும் கன்னன் செய்த தானத்தை யேற்று அக மகிழ்ந்து, தன் உண்மைத் திருவுருவைக் கன்னனுக்குக் காட்டி, அவனை நோக்கி, "கன்ன, உனக்கு வேண்டிய வரத்தை என்னிடம் கேட்டுப் பெற்றுக்கொள்" என்று கூறினார்.

கன்னன் ஈசன் திருவுருவைக் கண்டு களித்து,
"அல்லல் வெவ்வினையால் இன்ன முற்பவமுண்(டு)
ஆயினும் ஏழ் எழு பிறப்பும்
இல்லை யென்றிரப்போர்க் கில்லை யென்றுரையா
இதயம் நீ ஈந்தருள்" என்றான்.

எல்லாம் வல்ல திருமாலும் கன்னனை நோக்கி, "எச் சென்மத்திலும் இல்லை யென்னாது ஈயும் மனத்துடன் கொடுக்கக் குறையாச் செல்வத்தையும் பெற்று முடிவில் முத்தியும் நீ அடைவாய்" என்று மறுமொழி யளித்து மறைந்தார்.

# 17. தூய்மை

தூய்மை யென்பது சாதாரண வழக்கில் பரிசுத்தம் எனப் பொருள்படும். நாம் சுகமாக வாழ்வதற்குச் சுத்தம் இன்றியமையாதது. வசிக்குமிடம், உடை, உடல் இவைகளைச் சுத்தமாக வைத்தல் புறத்தூய்மை யெனப்படும்; மனது பரிசுத்தமாயிருத்தல் அகத்தூய்மை யாகும். திருவள்ளுவ நாயனாரும்,

> "புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை
> வாய்மையாற் காணப்படும்"

என்று கூறியுள்ளார். மேற்கூறிய இருவிதத் தூய்மையும் இனிய வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

சுத்தம் மனோகரமானது; அசுத்தம் அருவருக்கத் தக்கது. சுத்தம் அழகு அளிக்கும்; அசுத்தம் அழகை அழிக்கும். தூய மேனியும் ஆடையு முள்ளவர்கள் யாவராலும் நன்கு மதிக்கப்படுவார்கள்; அவ்வித மில்லாதவர்கள் இகழ்ந்து ஏளனஞ் செய்யப்படுவார்கள். பரிசுத்தமான இடங்களில் இலக்குமி வாசம் செய்வள்; அழுக்குற்ற இடங்களில் அவள் அக்காள் குடியிருப்பள். சுத்தம் சுவர்க்கத் தன்மையது; அழுக்கு நரகத் தன்மையது.

புறந்தூய்மை அமைய முதலாவது நமது வீட்டையும் சுற்றுப்புறங்களையும் தூசு, குப்பை, கூளம், அழுக்கு இவை சேரா வண்ணம் கண்ணாடிபோல் நிர்மலமாக வைக்க முயற்சிக்க வேண்டும். சுவர்களுக்கு வெள்ளை யடித்தும், அடிக்கடி தரையைப் பெருக்கியும், கூரையிலுள்ள ஒட்டடையை நீக்கியும், ஜலதாரையைத் தினந்தோறும் தண்ணீர் விட்டுக் கழுவியும் வீட்டைச் சுத்தஞ் செய்வது அவசிய

மாகும். "பொருள்கள் தத்தம் இடம் விட்டு மாறி இருப்பதே அழுக்கெனப்படும்," என்று பெரியா ரொருவர் கூறியுள்ளார். ஆதலால் வீட்டுப் பொருள்கள் ஒவ்வொன்றையும் வைக்க ஒவ்வோரிடம் திட்டஞ் செய்து, அவற்றை அந்த அந்த இடத்திலேயே வைப்பது நல்ல பழக்கமாகும். குப்பைகளைக் கண்ட விடத்திற் போடாமற் குப்பைக் கூடையொன்று வைத்து அதில் அவைகளைப் போட்டு வருவது நன்று. வீடுகளைப்போல் வீதிகளையும் ஊர்ப்புறத்தையும் சுத்தமாக வைத்தல் அவசியமாகும். நீர் நிலைகளையும், நடைபாதைகளையும் தெருக்களையும் சுத்தமாக வைக்க, தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கறையற்ற தூய வஸ்திரங்களைத் தரிப்பதே ஆரோக்கியமளிக்கும். அழுக்குத் துணியை யுடுப்பதால் தேகம் அசுத்தமாகிச் சொறி சிரங்கு முதலியவைகள் உண்டாகும். தூய உணவுகளைப் புசித்தலும், நன்னீரை அருந்தலும் பரிசுத்தமான காற்றைச் சுவாசித்தலும் தேக சுகத்திற்கு இன்றியமையாதனவாகும்.

நமது தேகத்தில் உள்ளங்கால்முதல் உச்சந்தலைவரையுள்ள ஒவ்வொரு அங்கத்தையும், அழுக்கின்றிச் சுத்தமாக வைத்தல் நமது கடமையாகும். தினமும் நன்னீரில் ஸ்நானஞ் செய்வதுடன் கால், கை, முகம் இவைகளை அடிக்கடி கழுவியும் கண், செவி, நகக்கண் இவைகளிற் சேரும் அழுக்குகளை நீக்கியும் தேகத் தூய்மை பெறவேண்டும்.

அகத்தூய்மை அமைய, வாக்கும் மனதும் வாய்மை கடைப்பிடிக்கவேண்டும். பொய் பேசுதல், கோட் சொல்லுதல், சொன்ன சொற் பிறழ்தல், வைதல், வஞ்சகப் பேச்சு இவை வாக்கு அசுத்தங்களாகும். மெய் பேசுதல் இன்சொற் கூறல், இறைவனை வழுத்தல் இவை நல்வாக்காகும்.

நல்ல எண்ணங்களை நினைத்தல் மனத் தூய்மைக்குச் சாதகமாகும். பிறர் பொருளுக்கு ஆசைப்படுதல், கள்ளெண்ணம், பொறாமை, மிகைப்பட்ட விருப்பு வெறுப்பு, கர்வம், கோபம் இவை மனதை அசுத்தஞ் செய்யக்கூடியவை. நாம் இவைகளை அறவே விலக்கி அன்பு, பரோபகாரம், தெய்வபக்தி முதலிய நல்லெண்ணங்களையே நினைத்தல் வேண்டும்.

மனம், மொழி, மெய் இம்மூன்றையுந் தூய்மைபெறச் செய்தால்தான் இம்மையிலும், மறுமையிலும் இன்புறுதல் கூடும்; இல்லாவிடில் துன்பமே விளையும்.

## 18. குரங்கும் குருவியும்

பாடு மூடனுக்குப் பற்பல போதித்தாலும்
வீடுடையவனை வீட்டை இழந்திடச் செய்வான் என்று
நீடுறு சன்மன் சொல்வான் நெடியதோர் பழுமரத்தில்
கூடு கொண்டன இரண்டு தூக்கணங் குருவி தாமே.
குளிரினால் நடுங்கி, வானக் கொடுமழையால் நனைந்து
நளிர் சுரத்தோடு தேகம் நடுக்கியே பற்கள் கிட்டி
வளம்அறு குரங்கொன் றங்கு வந்தது; குருவி பார்த்தே
இளகிய மனத்தினாலே இன்சொலால் ஒன்று சொல்லும்.
கைகள் கால் இருந்தும இந்தக் கன்மத்தை அனுபவிக்கும்
செய்தி ஏன் என்ன, 'ஊசி மூஞ்சிகொள் சிறிய மூடா,
வைதா நீ புத்தி சொல்ல வல்லையோ?' எனக் கோபித்து
நெய்திடும் அதன் தன் கூட்டை நெடுங்கையால் பிய்த்த தன்றே.

—வீரமார்த்தாண்டதேவர்

## 19. ஸ்பார்ட்டா நகரத்து வீர வாலிபர்கள்

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள கிரீஸ் தேசத்தில் ஸ்பார்ட்டா என்ற நகரமானது இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ஒரு சிறு இராஜ்ஜியமாக இருந்தது. அந்நகரத்தினராகிய ஸ்பார்ட்டர் அஞ்சா நெஞ்சுடைய வீரர்களாக விளங்கினர். தமது வாழ்நாளை ராஜாங்கத்திற்கே உரிமைப் படுத்தித் தமது நாட்டிற்காக உயிரைக் கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாக இருந்து வந்தனர். எல்லாச் செல்வத்தையும்விட புயவலிமையையும், தைரியத்தையும், கீழ்ப்படிதலையுமே சிறந்த செல்வமாகக் கருதினர். இம் முக்குணங்களையும் பெற்று விளங்கும் பொருட்டு ஒவ்வொரு சிறுவனும் இளமையிலிருந்தே மிகவும் எச்சரிக்கையாக வளர்க்கப்படுவான்.

எண்ணெழுத்துப் படிப்பைப் பெரிதாகக் கருதாது, சிறு வயது முதல் அந்நகர வாலிபர்கள் உடற் கல்வியையே முக்கியமாகப் பயின்று வந்தனர். ஸ்பார்ட்டா நகரில் ஒரு சிறுவன் பிறந்தால் பெற்றோர்கள் அவனை நகர பரிபாலன சங்கத்தாரிடம் கொடுத்துவிட வேண்டும். சங்கத்தார் அச் சிறுவனைத் திண்ணிய உடலும், வலிய உறுப்புகளுமுடையவனு வென்று பரிசோதிப்பர். அவன் திடமான சிறுவனெனக் கண்டால், அவனைப் பெற்றோரிடம் திரும்பக் கொடுத்துவிடுவார்கள். அவ்வாறின்றி அவன் வலிகுன்றி, உறுப்பில் ஊனமுற்றவனு யிருப்பானுயின் நகர சங்கத்தார் அவனை மலைமீது விடுத்து வருமாறு ஏற்பாடு செய்வர். அவன் உயிர் பிழைத்து வலிமையுற்றுத் திரும்பிவந்தால் ஏற்றுக்கொள்வார்கள். இவ்வாறு விடுத்தவர்களில் பலர் மலையிலேயே மாண்டு போவதுண்டு. திடமுடைய சிறுவரையே விரும்பினராதலால், வலிகுன்றி, நோயுற்ற சிறு

குழந்தைகள் வருத்தமுற்று வளருவதிலும், அவர்கள் மரிப்பதே நாட்டுக்கு நன்மையென்று ஸ்பார்ட்டா நகரத்தார் கருதினர்.

நகர பரிபாலன சங்கத்தாரால் பரிசோதிக்கப்பட்ட சிறுவன் தன் பெற்றோரிடம் ஏழு வயது மட்டும் வளர்ந்து வருவான். சிறுவனுக்கு ஏழுவயதானதும், அச்சங்கத்தார் அவனை இராணுவப் பயிற்சிசாலைக்கு அனுப்பிவிடுவர். அவன் அங்கு கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள்வான்; உயிரே போகினும் உளந்தடுமாறாதிருக்கப் பழகுவான். அங்குள்ள இராணுவ அதிகாரிகள், சிறுவர்களை வெகு கண்டிப்பாய் நடத்துவர்.

ஸ்பார்ட்டா நகரத்துச் சிறுவர்கள் இராணுவப் பயிற்சிசாலையிலிருக்குங்கால் எத்தகைய பாதரட்சையு மணியலாகாது. கரடு முரடாகிய மலைப்பிரதேசத்தில் வாழ்கின்றவர்கட்குப் பாதரட்சைகளின்றி நடப்பது எளிதன்று; ஆதலால் அந்நகரத்துச் சிறுவர்கள் அவ்வாறான ஆணையால் பெரிதும் வருந்தினர். உடலை நடுக்குங் குளிர் காலத்திலும் சிறுவர்கள் மெல்லிய துணியினாலான ஓருடைதான் தரிக்க வேண்டும். குளிரால் கை கால்கள் உணர்வற்றுப் போயினும் அவர்கள் ஒன்றுமே பேசலாகாது. அவர்கள் படுக்கும் பாய் இவற்றினும் விநோதமானது. ஒவ்வொரு சிறுவனும் யுரோடாஸ் என்னும் நதிக்குச் சென்று, ஆங்கு இரு கரையிலும் காடாக வளர்ந்த நாணல்களை அறுத்துக் கட்டிக் கொண்டு வரவேண்டும். தான் கொண்டு வந்த நாணல்களை எவ்வித ஆயுதமுமின்றிக் கையினாலேயே கிழித்துப் பாயாகப் பின்னிக்கொள்ள வேண்டும். நாணல்களைக் கிழிக்கும் போது கைவிரல்களில் வெட்டுப் பட்டுக் குருதிபாயினுங் கண்ணிலொரு துளி நீரேனுந் தோன்றலாகாது. கோழைத்

தனமாக ஒருவன் கண்ணீர் விடுவானாகில் அவன் யாவராலும் ஏளனஞ் செய்யப்படுவான். பட்டினி பசியைப் பாராட்டக் கூடாது; நாட்டு நன்மையையும், வீரத்தன்மையையுந் தான் பெரிதாகக் கருதவேண்டும்.

ஸ்பார்ட்டா வாலிபர்கள் நாளெல்லாம் படைக்கலப் பயிற்சியிலும், மற்போரிலும், பந்தய ஓட்டங்களிலும், சரீர அப்பியாசங்களிலும் பழகுவர். பதினாறு வயதானவுடனே அவர்கள் போர் வீரராகி இராணுவ வீரர் தங்கும் பாசறையில் தம் வாழ்நாளைக் கழிக்கச் செல்வர். ஒவ்வொரு வீரனும் முப்பது வயதாகிய பின்னரே விவாகஞ் செய்து கொள்ளும் உரிமை பெறுவான்.

வாலிபர்கள் போருக்குச் செல்லுங்கால், அவரது அன்னையர் அவரிடம் கேடகங்களைக் கொடுக்க வருவர். அப்பொழுது அவர்கள் தம் புத்திரனை நோக்கி, "மகனே! நீ வரும்பொழுது இக்கேடகத்தோடு வருக. இன்றேல் அதன் மீது பிணமாய்ப் படுத்து வருக," என்று கூறிப் போருக்கனுப்புவர். போருக்குச் சென்றார் எவரும் புறங்கொடுத்தோடார்; பகைவருக்கு அடிமையுமாகார்.

சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு ஸ்பார்ட்டா சேனைத் தலைவரது வீரச் செயலை இங்குக் கூறுவோம்:—

கி. மு. 480-வது வருஷத்தில் கிரீஸ் தேச முழுவதையும் கைப்பற்றிக்கொள்ளப் பாரசீகச் சக்கரவர்த்தி ஸராக்ஸீஸ் என்பவர் படையெடுத்து வந்தார். அப்பொழுது ஆதன்ஸ் நகரத்தாரும் ஸ்பார்ட்டர்களும் ஒருங்கு சேர்ந்து ஸராக்ஸீஸ் மன்னரோடு போர் புரிய நேர்ந்தது. அன்னிய தேச அரசருக்கு இடங்கொடுத்து விட்டால் கிரீஸ் தேசம்

தனது சீரியதிலை கெட்டுப் பாரசீக நாட்டுக்கு அடிமையாக வேண்டியிருக்கும். அவ்வாறு தோல்வியடைந்து அடிமையாகிறதைவிட உயிர் துறப்பதே மேலென்று இரு நகரத்தாரும் தீர்மானித்தார். அப்பொழுது ஸ்பார்ட்டர் சேனைத் தலைவராக இருந்த லியோனிதாஸ் என்பவர் ஒரு சிறந்த பராக்கிரமசாலி. எப்படியாவது தமது தேசத்தைக் காக்க வேண்டுமென்று உறுதிகொண்டார்.

பாரசீகர் சேனை வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்தது. கிரீஸ் தேசம் மலையடர்ந்த நாடாகையால், தர்மாபைலி என்ற குறுகிய கணவாய் வழியாகத்தான் பகைவரது சேனை வரவேண்டும். இதை யறிந்து, பொறுக்கி யெடுத்த முன்னூறு ஸ்பார்ட்டா வீரர்களைக் கூட்டிக்கொண்டு, லியோனிதாஸர் மேற் சொல்லிய கணவாயின்கண் சென்று எதிர்த்து நின்றனர். எதிரிகளின் மகத்தான சேனை இக்குறுகிய மலை வழியாய்ச் சிறு, சிறு கூட்டமாக வரும்போது அவர்களைத் தாக்கி ஸ்பார்ட்டர்கள் சின்னாபின்னமாக்கினார்கள். என்றாலும், பாரசீகர்கள் லட்சக் கணக்காகவும், ஸ்பார்ட்டர்கள் நூற்றுக்கணக்காகவும் இருந்தமையால், இவர்களும் லியோனிதாஸரும் முடிவில் வீர சுவர்க்கம் அடைய நேரிட்டது. ஆனால் இவர்களது உயிர்த்தியாகம் வீணாகவில்லை. இவர்கள் எதிரிகளை உட்பிரவேசிக்க விடாமல் கொஞ்சகாலம் தடுத்து வந்தது, கிரீஸ் தேசத்தினர் போருக்குச் சன்னத்தமாக அவகாசங் கொடுத்தது. கிரேக்கர்கள் முடிவில் பாரசீகரை முறியடித்துத் துரத்திவிட்டனர். லியோனிதாஸரது அரும்பெரும் வீரச் செயலை என்றும் ஞாபகத்திலிருக்கும்படி ஒரு பெரிய ஜெயஸ்தம்பத்தை இவர் மாண்ட இடமாகிய தர்மாபைலிக் கணவாயினருகில் கிரேக்கர்கள் நாட்டியுளர்.

மாணுக்கர்களே! விடா முயற்சியுடன் உடற்பயிற்சி பயின்றும், உங்களது கல்விச் சாலையில் ஏற்பட்டுள்ள சாரணர் சங்கத்திற் சேர்ந்தும், புஜ வலிமை, கண்ணியம், மரியாதை, கீழ்ப்படிதல், அஞ்சா நெஞ்சு முதலிய வீரக் குணங்களைப் பெற்றுக் கடவுளுக்கும், அரசருக்கும், நாட்டுக்கும் நலம் புரிவீர்களாக!

## 20. ஸ்தல சுய ஆட்சி

நமது தேச ஆட்சியை ஆங்கில துரைத்தனத்தார் பொது ஜனங்களின் க்ஷேமத்துக்கான முறைகளில் செவ்வனே தாமே நேரில் நடத்திவருகின்றனர். ஆனால் அவர்கள் கிராமம், நகரம், தாலூகா, ஜில்லா இவைகள் சம்பந்தமான பொதுநல வசதிகளை அமைத்துப் பரிபாலனம் செய்யும் பொறுப்பை அவ்வவ்விடங்களிலுள்ள நமது நாட்டாரிடமே விட்டிருக்கிறார்கள். ஆங்காங்குள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமர்ந்த சபைகள் மூலமாக ஜனங்களே நாட்டாண்மை நடத்துவது ஸ்தல சுய ஆட்சி யெனப்படும். இவ்வித ஜன சமூக நாட்டாண்மை நமது நாட்டில் பண்டைக் காலத்திலும் நடைபெற்று வந்தது.

இந்தியர்கள் நவீன ராஜரிகத்தில் பழகி அனுபவம் பெறும் பொருட்டு ஐம்பது வருஷங்களுக்கு முன் ராஜப் பிரதிநிதியாக விளங்கிய ரிப்பன் பிரபு என்பவர் முதன் முதலில் ஸ்தல சுய ஆட்சி உரிமையை அளித்தனர். இது பற்றி இவரது பெயர் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது. ஆரம்பத்தில் ஸ்தல சபைகளின் அங்கத்தினரிற் பலர் சர்க்காராலேயே நியமிக்கப்பட்டனர்; சர்க்கார் உத்தியோகஸ்தர்களே அச்சபைத் தலைவர்களாக இருந்

தனர். பிறகு கவர்ன்மெண்டாரது தலையிடுதல் வர வரக் குறைந்து சபைத் தலைவர்களும், அங்கத்தினரில் பெரும் பான்மையோரும் ஜன சமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1930-ம் ஆண்டில் சீர்திருத்திய ஸ்தல ஸ்தாபனச் சட்டம் மேலும் அதிகமான உரிமைகளை நமக்கு வழங்குகிறது. 1934-ம் வருஷத் திட்டப்பிரகாரம் பஞ்சாயத்துச் சபை, நகர பரிபாலன சபை, ஜில்லா சபை என ஸ்தல சபைகள் மூன்று வகைப்படும்.

கிராமங்களில் அமைக்கப்படும் ஸ்தல சபை 'பஞ்சாயத்து போர்டு' எனப்படும். இப்பஞ்சாயத்துக்களே ஸ்தல சுய ஆட்சிக்கு அடிப்படையாகும். கிராமச் சுகாதாரம், ஆரம்பக் கல்வி முதலியனவும் பிறவுமுள்ள பொது ஜன உபயோகத்துக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வது இச்சபையாரது முக்கிய அலுவல் ஆகும். தெருக்களில் விளக்குப் போடுதல், குடி தண்ணீர் வசதி அமைத்தல், வீதிகளையும் ஜலதாரைகளையுஞ் சுத்தஞ் செய்தல், இவைகட்கான ஏற்பாடுகளையும் கிராமப்பள்ளிக்கூடம், மந்தைவெளி, கிராமச் சமுதாய நிலங்கள், குடிமராமத்து வேலை இவைகளை மேற்பார்வை செய்வதும் இவர்கள் பொறுப்பாகும். வீட்டுவரி, தொழில்வரி, கல்விவரி, சர்க்காரது உதவித் தொகை, மற்றும் பல சில்லறை வரிகள் இவை மூலமாக இவர்களது செலவுக்கான வருவாய் கிடைக்கும்.

இவ்விதமாகவே பெரிய பட்டணங்களில் நகர பரிபாலன சபையார் (முனிசிபாலிடி) பொதுநலக் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள். இவ்விதச் சபை சென்னைப் பட்டணத்தில் சென்னைக் கார்ப்பொரேஷன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருக்கிறது. பல கிராமங்களுக்குப் பொதுவான போக்கு வரவு வசதிகள், ஆரம்பப் பாடசாலைகள்,

உயர்தரக் கல்விச்சாலைகள், வைத்தியசாலைகள் முதலிய வற்றை அமைத்துப் பராமரிப்பதும், ஜில்லா முழுமைக்கு மான க்ஷேமத்தைத் தேடுவதும் ஜில்லா சபையாரது கடமை.

இம் மூன்றுவித ஸ்தல சபைகளுக்குமுள்ள அங்கத்தினர்களும், தலைவர்களும் மூன்று வருஷத்திற் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பஞ்சாயத்து கிராமங்களையும் முனிசிபல் பட்டணங்களையும் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் எத்தனை அங்கத்தினரென்றும், தாலூகாக்களையும் ஜில்லாக்களையும் பல வட்டாரங்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லா சபைக்கும் எத்தனை அங்கத்தினரென்றும் கவர்ன்மெண்டார் நிர்ணயஞ் செய்கிறார்கள். அவ்விதப் பகுதியிலுள்ள வாக்காளர்கள் தேர்தல் தினத்தில் உரிமைச் சீட்டு இட்டு தங்களுக்குப் பிரதிநிதிகளான அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவ்விதந் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை இருபத்தொன்று வயதடைந்த எவ்வித வரி செலுத்துவோருக்கு முண்டு. அங்கத்தினர்கள் தேர்தலான பிறகு இவர்கள் தங்களிலொருவரைத் தலைவராகவும், மற்றொருவரை உபதலைவராகவுந் தேர்ந்தெடுக்கவேண்டும். சபைத்தலைவரே சபையாரது அதிகாரத்தை வகித்து அவர்கள் தீர்மானிக்கும் விதங்களில் பொது நல ஊழியஞ் செய்யும் அதிகாரியாவர். பொது நலத்திற்குப் பாடுபடக்கூடியவர்களையும், உலகானுபவமுள்ள அறிவாளிகளையும், தக்க நாணயஸ்தர்களையும் மாத்திரமே ஸ்தல சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தல் நலம். இச்சபைகளில் ஸ்திரீகள், மகமதியர், தாழ்ந்த வகுப்பினர் இவர்கள் தொகுதிக்கு அவரவர்கட்குள்ளேயே இரண்டொருவரைத் தேர்ந்தெடுக்க ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்தல ஆட்சி சபையார்கள் மாதம் ஒரு முறையாவது சபையின் காரியாலயத்தில் கூடி, தமது நாட்டாண்மை சம்பந்தமான தீர்மானங்களைப் பிரேரேபித்தும், ஆமோதித்தும் நிறைவேற்றுவார்கள். இக்கூட்டங்களில் நிரந்தர சபைத் தலைவராவது உபதலைவராவது அக்கிராசனம் வகிப்பார்.

சிறுவர்களே! நீங்கள் பெரியவர்களாகும்பொழுது ஸ்தல சபை சம்பந்தமான வாக்குரிமை உங்களுக்கும் ஏற்படும். ஜனங்களின் பிரதிநிதிகளாக நீங்களும் தேர்ந்தெடுக்கப்படலாம். அப்பொழுது ஜனங்களுக்கு அவசியமான பல சௌகரியங்களை நீங்களே செய்யலாம். ஜன சமூக சேவையில் நீங்களும் ஈடுபட்டு நன்மை புரிய முயற்சிக்க வேண்டும்.

## 21. கண்ணன் என் சேவகன்

கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாந் தாமறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
ஏனடா நீ, நேற்றைக் கிங்குவரவில்லை யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லாற் கடித்ததென்பார்;
வீட்டிலே பெண்டாட்டிமேற் பூதம் வந்த தென்பார்;—

பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டா நாளென்பார்;
ஓயாமற் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறு செய்வார்.
தாயாதியோடு தனியிடத்தே பேசிடுவார்
உள் வீட்டுச் செய்தியெலாம் ஊரம்பலத்துரைப்பார்;
எள் வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்;

சேவகராற் பட்ட சிரமமிக வுண்டு கண்டீர்;
சேவகரில் லாவிடிலோ செய்கை நடக்கவில்லை.
இங்கிதனால் யானுமிடர் மிகுந்து வாடுகையில்
எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நானென்றான்;

"மாடுகன்று மேய்த்திடுவேன், மக்களைநான் காத்திடுவேன்;
வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்;
சொன்னபடி கேட்பேன்; துணிமணிகள் காத்திடுவேன்;
சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்;
காட்டுவழி யானாலும் கள்ளர் பயமானாலும்
இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர் தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கு ஓர் துன்பமுறா மற்காப்பேன்;
கற்றவித்தை யேதுமில்லை, காட்டு மனிதன் ஐயே!
ஆனபொழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்
நானறிவேன்; சற்றும் நயவஞ்சனை புரியேன்"
என்று பல சொல்லி நின்றான்.

"ஏது பெயர்? சொல்" என்றேன்.

"ஒன்றுமில்லை—கண்ணனென்பார் ஊரிலுள்ளோர் என்னை"
கட்டுறுதி யுள்ளவுடல், கண்ணிலே நல்ல குணம்,[என்றான்.

ஒட்டுறவே நன்றா யுரைத்திடுஞ் சொல்—ஈங்கிவற்றால்
தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்
"மிக்கவுரை பல சொல்லி விருது பல சாற்றுகிறாய்,
கூலி என்ன கேட்கின்றாய்? கூறு" என்றேன். "ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏதுமில்லை;



திருவாங்கூர் மஹாராஜா.

[பக்கம் 76

நானோர் தனியாள் நரைதிரை தோன்றாவிடினும்
ஆன வயதிற் களவில்லை—தேவரீர்
ஆதரித்தாற் போதும் அடியேனை ; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை " யென்றான்.
பண்டைக்காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே
கண்டு மிகவும் களிப்புடனே நானவனை
ஆளாகக் கொண்டு விட்டேன் ; அன்று முதற்கொண்டு
நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன், கண்ணனாற்
பெற்று வரு நன்மையெலாம் பேசிமுடியாது.

கண்ணை யிமையிரண்டுங் காப்பதுபோல் என்குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான்; வாய்முணுத்தல் கண்டறியேன் ;
வீதி பெருக்குகிறான், வீடு சுத்தமாக்குகிறான்
தாதியர் செய் குற்றமெல்லாந் தட்டியடக்குகிறான்
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்

ஒக்க நயங் காட்டுகிறான் ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாஞ் சேர்த்து வைத்துப் பால் வாங்கி மோர்
பெண்டுகளைத் தாய் போற் பிரியமுற ஆதரித்து, [வாங்கிப்
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்

எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி யென்று சொன்னான்
இங்கிவனை யான்பெறவே என்ன தவஞ்செய்து விட்டேன் !
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்

கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாஞ் சிவஞானம் என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்!
கண்ணனை நான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்!
கண்கொண்டேன்!!
கண்ணனெனை யாட்கொள்ளக் காரணமு முள்ளனவே.
—பாரதியார்

## 22. திருவாங்கூர் மஹாராஜா

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்படும் நால் வகை நிலங்களும் ஒருங்கே பொருந்திய திருவாங்கூர் இராஜ்ஜியம் இந்திய மன்னரால் ஆளப்படுகிறது. இது சென்னை இராஜதானியின் தென்மேற்கு மூலையில் மேற்கு மலைத் தொடருக்கும் அராபிக்கடலுக்கும் இடையே கன்னியாகுமரி முதல் கொச்சி நாடு மட்டும் நீண்டு கிடக்கின்றது. திருவிதாங்கூர் அல்லது திருவாங்கூர் எனும் இந்நாடு உன்னத மலைகள், பள்ளத்தாக்குகள், மலையருவிகள், உப்பங்கால்வாய்கள், தென்னை, கமுகு, தேக்கு முதலிய மரங்கள் செறிந்த தோப்புக்கள், தேயிலை, ஜாதிக்காய், ஏலக்காய், கிராம்பு, மிளகு இவைகட்கான தோட்டங்கள், யானை, வேங்கை, கரடி முதலிய வன விலங்குகள் வாழும் காடுகள் முதலான பலவகைப்பட்ட இயற்கைக்காட்சிகளும் வளங்களும் நிரம்பியது. இது 7,600 சதுர மைல் விஸ்தீர்ணமும் ஐம்பது இலட்சம் ஜனத்தொகையுமுடையது.

இந்த இராஜ்ஜியத்திற்குத் தலை நகரம் திருவனந்தபுரமாகும். அனந்தசயன மென்றுஞ் சொல்லப்படும் இந்நகரிலுள்ள ஸ்ரீ பத்மநாப சுவாமி ஆலயம் மிகப் பழமையுஞ் சிறப்பும் வாய்ந்தது. கன்னியாகுமரி, சுசீந்திரம், நாகர்

கோயில், ஜநார்த்தனம், வைக்கம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களும், ஆலப்புழை, கொல்லம் முதலிய கடற்கரைப் பட்டினங்களும் இத்தேசத்திலுள. ஆண்பாலரும் பெண் பாலரும் கல்வியில் ஊக்கமுள்ளவர்கள். இவர்கள் சுலப வாழ்க்கையும், உழைப்பும், விடா முயற்சியும், இராஜவிசுவாசமும், தெய்வபக்தியுமுள்ளவர்கள். இந்நாட்டினருடைய பழக்கவழக்கங்களும் நடையுடை பாவனைகளும் தமிழராது போலன்றி வேறுபட்டிருக்கின்றன. இத்தேசத்தில் பிதாவின் ஆஸ்தி மக்களுக்குக் கிடைக்காமல் அவருடைய சகோதரியின் மக்களாகிய மருமக்களுக்கே போய்ச் சேரும். இவ்விதத் தாய பாகம் மருமக்கள்தாய மெனப்படும்.

திருவாங்கூர் இராஜ்ஜியத்தைத் தொன்று தொட்டே இந்து அரசர்கள் ஆண்டு வந்துளர். இவ்வேந்தர்கள் தமிழ் நாட்டு மூவேந்தர்களில் வஞ்சிமாநகரை இராஜதானியாகக் கொண்டிருந்த சேரமன்னர்களின் வழித்தோன்றல்கள். இந்த இராஜ்ஜியத்திற்குத் தலை நகராகிய திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீபத்மநாப சுவாமி திருவாங்கூருக்கு ரக்ஷக தெய்வமென்றும் அக் கடவுளது பிரதிநிதியாகச் சேர மன்னர்கள் அச்சமஸ்தானத்தை ஆண்டு வருவதாகவும் ஓர் ஐதிகம் வழங்கி வருகிறது. இதுபற்றியே இவ்விராஜ்ஜியத்திற்குத் "தர்ம ராஜ்ஜியம்" என்ற மற்றொரு பெயருமுண்டு. இம்மன்னர்கள் ஜனங்களின் க்ஷேமத்தையே கருதிச் செங்கோல் செலுத்தி வந்துளர். அசோக மன்னர் காலத்திய கல்வெட்டு எழுத்துக்களில் இந்நாட்டைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதால், இது மிகப் பூர்வீகமான இராஜ்ஜிய மென்பதற்கு ஐயமே இல்லை. 1776-ம் வருஷத்திலேயே ஆங்கிலேயருக்கும் இவ்வேந்தர்களுக்கும் நட்பும் உடன்படிக்கையும் ஏற்பட்டு ஐதர் அலி, திப்பு சுல்தான் இவர்களோடு நடந்த போர்களில் திருவாங்கூர்

மன்னர்களும் ஆங்கிலேயர்களும் ஒருங்கு சேர்ந்து யுத்தஞ் செய்து வெற்றி பெற்றுளர்.

மேற்சொல்லியவாறு சீருஞ் சிறப்பும் பெற்றுள்ள இந் நாட்டைத் தற்காலம் மேன்மை தங்கிய ஸ்ரீ ராமவர்மா என்னும் சித்திரைத் திருநாள் மகாராஜா ஆண்டு வருகிறார். இவர், ஸ்ரீ மூலம் திருநாள் என்னும் முந்திய மன்னரது சகோதரியாகிய மேன்மைதங்கிய இளைய இராணியார் சேது பார்வதி தேவியாரது குமாரர். 1912-ம் வருஷம் நவம்பர் மீ 7 உ சித்திரை நட்சத்திரங்கூடிய சுபதினத்தில் ஜனனமானதால் இம்மன்னர்களது குலவழக்கப்படி இவர் ஸ்ரீ சித்திரைத் திருநாள் என்ற பெயர் அளிக்கப்பட்டுளர். இவர் 1924-ம் வருஷம் பட்டத்திற்கு வந்தார்; ஆனால் இவர் இளமையாக விருந்ததால் இவருடைய பெரிய தாயாராகிய மேன்மை பொருந்திய ஸ்ரீமதி சேது லக்ஷ்மி இராணியார் இவரது பிரதிநிதியாக இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து வந்தார்கள்.

மஹாராஜாவுக்குத் தக்க வயது வந்தமையால் 1931-ம் வருஷம் நவம்பர் மீ 6-தேதி மகுடாபிஷேகம் செய்யப்பட்டு அரசாளும் உரிமையைத் தனது பெரிய அன்னையிடமிருந்து பெற்று இவர் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து வருகிறார். இவர்களது முடி சூட்டு வைபவம் ஒரு பெருந் திருவிழாவாக சமஸ்தான மெங்கும் கொண்டாடப்பட்டது. கோயில்களிலும் மசூதிகளிலும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் இம்மன்னருக்கு நீடிய ஆயுளும் நோயற்ற வாழ்வும் அளிக்க வேண்டிப் பிரார்த்தனைகள் நடந்தன. இவர் சிங்காசனம் ஏறிய தினம் திருவாங்கூரின் சரித்திரத்தில் ஞாபகத்திருத்த வேண்டிய நன்னாளாகும்.

மஹாராஜா சித்திரைத் திருநாள் அவர்கள் இராஜ்ஜிய பாரத்தை வகிப்பதற்கு வேண்டிய ராஜகுணங்களும் பயிற்சி

யும் பெற்றிருக்கிறார்கள். ஐந்தாவது பிராயத்தில் அக்ஷ ராப்பியாசஞ் செய்விக்கப் பெற்று இவர் இரண்டு சிறந்த பண்டிதர்களால் மலையாள பாஷையும் வடமொழியுங் கற்பிக் கப்பட்டார். தமக்குள்ள பாடங்களை மதி நுட்பத்துடன் கற்று வந்தார். ஏழாவது வயதில் குலாசாரப்படி இவருக்கு உபநயனம் நடந்தது. பிறகு இரண்டு ஆங்கில ஆசிரியர்களிடம் நவீனக்கல்வியும் பயின்று மிக்க தேர்ச்சியுற் றார். அரசாங்கமுறைகளை நன்கு கற்றறிந்தவுடன் மைசூர் இராஜ்ஜியத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் நிர்வாக ஒழுங்கைக் கவனித்தும் வந்துளர். இம்மன்னர் இந்தியா வின் பல பாகங்களுக்கும் பிரயாணஞ் செய்து பல நாட்டு வழக்கங்களையும் பல பெரியோர்களையும் நன்கு அறிந்திருக் கிறார். மேலும், உடற் பயிற்சியிலும் அசுவப் பயிற்சியிலும் மிக்க ஊக்கங் காட்டித் திறமை பெற்றுளர். சாரணர் களின் தலைவராக இவர் விளங்குகிறார். இவரது முடிசூட்டு வைபவ தினத்தில் இவர் இயற்றிய சொற்பொழிவில், "திரு வாங்கூர் எத்துறைகளிலும் முன்னணியில் நிற்கும்படி நான் சிரத்தை எடுத்துக்கொள்வேன்," என்று கூறியிருப் பது இவர்களது உத்தம குணங்களுக்கும் நோக்கங்களுக் கும் நற்சான்றாகும். மாட்சிமை தங்கிய இராமவர்மா சித்தி ரைத் திருநாள் அவர்கள் நாலிருசெல்வங்களும் பெற்று நீடூழி வாழ்க!

## 23. புத்திமானே பலவான்

வடதிசையிலுள்ள விந்திய மலையை யடுத்த சண்பகா ரண்யம் என்னும் பெரிய வனத்தில் தனது வல்லமையினால் மிருகேந்திரன் என்னும் பட்டப்பெயர் பெற்று மிருகங் களுக்கெல்லாம் அரசனாகப் பிங்களன் என்னும் ஒரு சிங்கம்

ஆட்சி செய்து வந்தது. அதே காலத்தில் அவ்வனத்தில் 'புத்திமான் பலவானுவான்' என்கிறபடி தனது மதி வலி மையால் ஜம்புகன் என்னும் நரியொன்று சிறிதும் பெரிது மான விலங்குகள் பலவற்றைத் தந்திரமாகப் பிடித்துக் கொன்று தின்று வாழ்ந்து வந்தது. ஏனைய மிருகங்கள் இந்நரியைக் காணும்போதெல்லாம் நமனைக் காண்பதுபோல் அஞ்சி அதனிடத்திற் பொறுமை கொண்டு தங்களுக்கெல் லாம் இறைவனுகிய சிங்கத்தினிடம் ஜம்புகனைப்பற்றிக் குறை கூறி, அது செய்துவரும் கொடுமைகளை முறையிட் டுக்கொண்டன. மிருகேந்திரனுகிய பிங்களன், சதுரன் என்னும் பூனையை ஏவி ஜம்புகனை அழைத்துவரச் சொல்லிற்று.

பூமிக்குள் பல வாயில்கள் கூடிய ஓர் அரண்போன்ற வீடமைத்து அதில் வசித்து வந்த ஜம்புகனிடம் சதுரன் சென்று அரசருடைய ஆணையைத் தெரிவித்தது. நரியும் அரசரிடம் வருவதாக ஒப்புக்கொண்டு, பூனையை இரவில் தன் இல்லத்தில் தங்கிச் செல்ல வேண்டிற்று. அதுவும் அவ்வாறே இணங்கி அங்குத் தங்க, ஜம்புகன் அதற்குச் சில கிரைகளை உணவாக அளித்தது. பூனை அவைகளைத் தின்ன வெறுத்து மாமிச போஜனம் வேண்டிற்று. உடனே ஜம்பு கன் சதுரனை அருகாமையிலிருந்த ஒரு குடியானவன் வீட்டிற்கு, அங்குள்ள எலிகளைப் பிடித்துத் தின்னலா மென்று அழைத்துச் சென்றது. முந்திய இரவில் அக் குடியானவன் வீட்டுக்கோழி யொன்றை நரி திருடிச் சென் றிருந்ததால், அதைப் பிடிக்கப் புறக்கடை வாசலில் அவன் ஒரு வலையைக் கட்டியிருந்தான். ஜம்புகன் அங்கு வந்ததும் சதுரனை முதலில் உள்ளே நுழையச் சொல்லிற்று. சதுரன் அவ்வாறு செய்யவே வலையில் சிக்கிக் கூச்சலிட்டது. அச் சத்தத்தைச் செவியுற்ற உழவன் தடியுடன் ஓடி வந்து பூனை

யைப் புடைக்க அது வலையைக் கிழித்துக்கொண்டு உயிர் தப்பி மிருகராஜனுகிய பிங்களனிடம் ஓடிச் சேர்ந்தது. நிகழ்ந்ததை அரசனிடம் அது தெரிவிக்க, மற்றும் பல மிருகங்களை அனுப்பி நரியைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வரச் சிங்கம் உத்தரவிட்டது.

நரியும் மன்னனிடம் வந்து சேர்ந்தது. எல்லோரும் நடு நடுங்கப் பிங்களன் கர்ஜித்து நரியை நோக்கி, "சிறிதும் அச்சமின்றி அடாத செயல்களை நீ செய்து வந்தது உண்மையா?" என்று விசாரித்தது. ஜம்புகன் அதுவரையில் தான் செய்துள்ள தீவினைகளை மறைக்காமல் ஒப்புக்கொண்டது. அதனுல் மிருகேந்திரன் நரியைக் கொன்றுவிட உத்தரவிட்டது. அப்பொழுது ஜம்புகன், "மகாராஜரே! நான் தங்களது கட்டளைப்படி இறக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனுல் இதுவரை நான் தேடியுள்ள திரளான திரவியத்தை வனத்தின்கண் ஓரிடத்தில் புதைத்து வைத்திருக்கிறேன். தாங்கள் என் பெயரை எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கும் பொருட்டு அதைத் தங்கட்குச் சமர்ப்பிக்க எண்ணுகிறேன். அதுகாறும் என்னை மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தது.

பணம் என்றுல் பிணமும் வாய் திறக்குமல்லவா? பிங்களன் நரி கூறிய பெருஞ் செல்வத்தில் ஆசையுள்ளதாய் அதை மன்னித்து, அதைத் தனது முக்கிய மந்திரிகளில் ஒருவராகவும் நியமித்தது. மேலும், மற்றப் பிராணிகளைப் பார்த்து, "ஜம்புகனுக்குக் கீழ்ப்படிந்து அதனிடம் மரியாதையாகப் பழகவேண்டும். இல்லாவிடில் உங்களைக் கொல்ல நேரிடும்" என்று சிங்கம் எச்சரித்தது. அது முதல் எல்லா மிருகங்களும் ஜம்புகனிடம் நட்புப்பூண்டு வாழ்ந்தன.

சிறிது காலத்திற்குப் பிறகு ஜம்புகன் சுயேச்சையாக வாழ விரும்பிக் காசி யாத்திரை சென்று வருவதாக அரசனிடம் அனுமதி பெற்று சுந்தரன் என்னும் மானையும் முசலி என்னும் முயலையும் துணையாக அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தது. சுந்தரனை வாயிற் புறத்தில் நிறுத்தி விட்டு, முயலை மட்டும் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றது. அங்கு அதைக் கொன்று தின்றுவிட்டு, வெகு நேரமாகக் காத்திருந்த மானிடம் பிறகு வந்து ஒரு சிறு பொட்டணத்தை அதனிடம் கொடுத்து அதை மன்னனிடம் அளிக்க ஏவிற்று. முயலைப்பற்றிச் சுந்தரன் கேட்க அது உள்ளே யிருப்பதாக நரி தெரிவித்தது.

மான் அரசனிடஞ் சென்று பொட்டணத்தைக் கொடுக்கவும் அதைத் திறந்து பார்க்கவே அதில் முயலின் தலையைக் காணப் பிங்களன் மிக்க வருத்தமுற்றது. அத்தருணத்தில் மந்தரன் என்னும் கிரிப்பிள்ளை பெரு மூச்சுடன் ஓடிவந்து பின்வருமாறு கூறிற்று: "அரசே! நான் இன்றைக் காலையில் வனத்தின்கண் செல்லும்போது ஜம்புகன் திருநீறிட்டுக் கையில் உருத்திராக்ஷ மாலையுடன் வரக்கண்டேன். அதனது தவ வடிவத்தைப் பார்த்து அதன் அருகிற் சென்றேன். அது சரேலென்று என் தாடையில் ஓர் அறை அறைந்து என்னைக் கொல்ல முயன்றது. நான் உயிர் தப்பித் தங்களிடம் ஓடி வந்துளேன். இவ்விஷயத்தைத் தாங்கள் விசாரித்து நியாயம் பிறப்பிக்க வேண்டுகிறேன்."

சிறிது நேரத்திற்கெல்லாம் மேகவர்ணன் என்ற காகம் பறந்தோடி வந்து முறையிட்டதாவது, "மிருகேந்திரனே! நானும் என் மனைவியும் பறந்து செல்லும்போது ஜம்புகன் பிணம்போல் மல்லாந்து படுத்துக்கிடந்தது. அது உண்மை

யில் இறந்து கிடக்கிறதாவென்றறிய நரியின் அருகில் என் மனைவி சென்று கொத்திற்று. திடீரென்று ஜம்புகன் எழுந்து எனது மனைவியைப் பிடித்துக் கொன்றுவிட்டு என்னையும் பிடிக்க ஓடி வந்தது. நான் உயிர் பிழைத்து நேரில் தங்களிடம் பறந்து வந்துளேன்.'' இக்குறைகளைச் செவியுற்ற மிருகராஜன் மறுமுறை ஜம்புகனைத் தன்னிடம் அழைத்துவர ஆக்ஞாபித்தது. ஜம்புகனும் ராஜ சபையில் ஆஜராகித் தன் குற்றங்களை ஒப்புக்கொண்டது. பிங்களன் அதைச் சிரச்சேதஞ் செய்ய மறுபடியும் உத்தரவிட்டது. அத்தருணம் ஜம்புகன் அரசனைப் பார்த்து, "மன்னாதி மன்னனே! தங்களது உத்தரவுப்படி நான் உயிர் துறக்கச் சித்தமாக உளன். ஆனால் மூப்பு, நரை, சாக்காடு இவைகளைத் தடுக்கக்கூடிய அமிர்த சஞ்சீவி போன்ற ஒரு மூலிகையை என் வீட்டில் வைத்திருக்கிறேன். அதைத் தங்களிடம் அளிக்க விரும்புகிறேன். தங்களது உத்தரவை வேண்டுகிறேன்" என்றது. சிங்கமும் அம்மூலிகையைக் கைப்பற்ற அவாக்கொண்டு மீண்டும் ஜம்புகனை மன்னித்தருளியது.

இவ்விதமாகவே, மேவிவந்த பல அபாயங்களை உபாயங்களால் நிவர்த்தி செய்துகொண்டு ஜம்புகன் சுகமே வாழ்ந்து வந்தது.

## 24. கொயினா மரம்

மாந்தரது உயிரை உண்ணும் கொடிய நோய்களுள் 'மலேரியா' என்னும் மலைச்சுரம் மிகக் கொடியது. இதனால் நமது நாட்டில் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டு போகின்றனர். இக்கொடிய நோயை விளைப்பதற்குக் காரணமாகிய பிராணி சிறு கொசுவேயாம். மனிதர் மலைச்சுரத்திற்குத் தப்பிப் பிழைக்கக் கொசுக்களைப்

பெருகவிடாமற் தடுப்பதும், அப்பிராணிகள் நம்மைக் கடிக்காதபடி காத்துக் கொள்வதுமன்றி, இந்நோய்க்கு மருந்தாகிய கொயினாவையுந் தேடிக்கொள்ளவேண்டும்.

கொயினாவெனும் அரியமருந்து ஒரு மரத்தின் பட்டையிலிருந்து எடுக்கப்படும் வெண்மையான தூளாகும். இம்மருந்தெடுக்கப்படும் மரம், இன்று நமது நாட்டில் நீலகிரி, மேற்கு மலைத்தொடர்கள், வடமேற்கு மாகாணங்களிலுள்ள மேட்டுப் பாங்கான நிலங்கள், இலங்கை, இமயமலைச் சாரல் முதலிய பல விடங்களிலும் பயிர் செய்யப்படுகின்றது.

விதை விதைத்தும், கிளைகளை வெட்டி நட்டும் இம்மரத்தைப் பயிர் செய்தல் கூடும். பயிர் செய்யுமுன் மலைச் சாரலில் உள்ள காடுகளை வெட்டித் திருத்தவேண்டும். போதிய அளவு காற்றும் வெளிச்சமுமின்றி இம்மரங்கள் செழித்து வளரா. நிலத்தைப் பண்படுத்தி விதைகளை யூன்றிய பிறகு பதினாறாவது நாள் முளை தோன்றும். ஓர் அவுன்ஸ் விதையினின்று சுமார் [illegible]0,000 செடிகள் முளைக்கும். செடிகள் ஓங்கி வளரத் தொடங்கும்பொழுது கிளைகளைத் தறிப்பதும், பட்டைகளைக் காப்பதும் அவசியமாகும்.

கொயினா மருந்து மலைச்சுரத்திற்கு மருந்தாவதோடு, வேறு பல சுரங்களுக்கும் பிணிகளுக்கும் மருந்தாய் உதவுகின்றது. வைத்திய முறையிற் பெரிதும் கையாளப்படுகின்ற மருந்துகளுள் இது சிறந்து முதன்மைபெற்று விளங்குகின்றது. கொயினா மரத்தின் இலைகளும் ஒரு சிறிது மருந்தாக உபயோகப்படுகின்றன. இவ்வரிய ஔஷதம் மலைச்சுரத்தை நீக்குமென்று மனிதன் அறிந்த விதம் ஒரு கதை போலிருக்கிறது.

தென் அமெரிக்காக் கண்டத்திலுள்ள பெரு வென்னும் நாட்டில் வானோங்கிய மரங்களடர்ந்த காடுகள் பலவுள

அக்காடுகளொன்றில் சில பூர்வீகக் குடிகள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமது கிராமத்திற் கருகாமையிலுள்ள ஓர் ஏரியிலிருந்து உண்பதற்கும் சமைப்பதற்கும் நீர் மொண்டுகொள்வது வழக்கம். இங்ஙனமிருக்கையில், ஒரு நாள் இரவிற் பெரும் புயற்காற்றடிக்கவே, அவ்வேரிக் கரையோரமாக நின்றிருந்த சில மரங்கள் சாய்ந்து அவ் வேரியினுள் விழுந்துவிட்டன. இது நிகழ்ந்த சில நாட்களுக்கெல்லாம் அவ்வேரி நீர் எட்டிக்காய்போலக் கைக்கத் தொடங்கிற்று. ஆதலால், ஊரார் அப்பொய்கையிலிருந்து தண்ணீர் எடுப்பதைத் தவிர்த்துச் சற்று தூரத்திற்கப்பாலிருந்த மற்றொரு குளத்திலிருந்து நீர் எடுத்து வரலாயினர்.

இங்ஙனமிருக்கையில், அவ்வூரில் இருவர் மலைக்காய்ச்சல் கண்டு இறக்குந் தருவாயில் இருந்தனர். அவ்வூர் மருத்துவர்கள் அவர்களைக் கைவிட்டுவிட்டனர். பிணியாளிகளிருவரும் சுரத்தின் கொடுமையால தாகமேலிட்டு அருந்த நீரகப்படாமல் நகர்ந்து நகர்ந்து சென்று அவ்வேரியை யணுகித் தமது தாகமடங்க அக்கைப்பு நீரை அருந்தினர். அதை அருந்திய பொழுது அவர்களுடைய நீர்வேட்கை சற்றே அடங்கிற்று. அதனால் அவர்கள் வேண்டும்போதெல்லாம் அந்நீரைப் பருகிவந்தனர். சில நாட்கள் செல்லவே அவ்விரு பிணியாளரும் சுகமடைந்துவிட்டனர். இதைக் கண்ட அவ்வூரார் அக்குளத்து நீர் சுரத்தை நீக்கும் நல்ல மருந்தெனத் தெரிந்துகொண்டார்கள்.

ஐரோப்பியர்கள் அமெரிக்கா தேசத்தைக் கண்டு பிடித்தபொழுது அவர்கள் பெரு நாட்டாரிடமிருந்து மருந்துப் பொய்கையின் வரலாற்றை யறிந்து அதை ஆராய்ந்து நோக்கினர். நோக்கிய வளவில், அதில் விழுந்த மரங்களே அந்நீர் கைப்பதற்குக் காரணமென்றும், அம்மரங்களின் பட்டைகளிலுள்ள சாரமே பிணிகளைத் தவிர்ப்பதென்றும்

அறிந்துகொண்டனர். அம்மரங்களே கொயினா மரங்களாம். வெகு விரைவில் கொயினா மருந்து உலக மெங்கும் பரவலாயிற்று.

சற்றேறக்குறைய எழுபத்திரண்டு வருடங்களுக்கு முன் நமது அரசாங்கத்தார் ஓர் ஐரோப்பிய வைத்தியரைத் தென் அமெரிக்காவிற் கனுப்பிக் கொயினா மரத்தின் நாற்றுக்களையும் விதைகளையும் கொண்டுவரச் செய்தனர். இப்பொழுது இம்மரம் நமது நாட்டு மரம்போலப் பலவிடங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றது. கொயினா மரத்தினின்று சர்க்காருக்கு அதிக வருமானங் கிடைக்கின்றது. அரசாங்கத்தார், கொயினா மருந்தை வைத்திய சாலைகளில் உபயோகிப்பதோடு தபாலாபீசுகளிலும் அதை விற்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர். கடவுள் மாந்தருக்களித்துள்ள எண்ணிறந்த கொடைகளில் இம்மரம் மிகச் சிறந்ததாகும்.

## 25. காரைக்காலம்மையார்

சோழமண்டலத்திலே காரைக்காலெனுந் திருநகரில் தனதத்தன் எனும் வைசியனொருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்கின்ற ஒரு புத்திரியார் இருந்தார். தனதத்தன் புனிதவதியாரை நாகப்பட்டணத்தில் வாழ்ந்திருந்த பரமதத்தன் என்பானுக்குமணஞ்செய்துகொடுத்து, தனக்கு வேறு பிள்ளையில்லாமையால், புனிதவதியாரை நாகப்பட்டணத்திற்குப் போகவிடாமல் அவரது கணவனோடு அவரையும் காரைக்காலிலேயே குடியிருக்கச் செய்தான். பரமதத்தன் காரைக்காலிலிருந்து வாணிபம் போற்றிப் பொருளீட்டி இல்லறம் நடத்திவந்தான். புனிதவதியார் பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும் பெருக, இல்லறத்துக்கு வேண்டுவனவற்றை வழுவாது

செய்து, தமது இல்லத்திற்கு வரும் சிவனடியார்களைப் பூசித்து வாழ்ந்து வந்தார்.

இங்ஙனமிருக்கையில் ஒரு நாள் பரமதத்தனிடத்தில் காரிய மூலமாக வந்த சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழங்கள் கொடுத்தனர். அவன் அவற்றைப் புனிதவதியாரிடமனுப்ப, அவர் அவைகளை வாங்கி வைத்திருந்தார். பின்பு, சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்தி வரவே, அம்மையார் அவருக்கு உணவளித்து உபசரித்ததோடு, அம் மாம்பழங்களில் ஒன்றை அவரது உண்கலத்திலிட்டுத் திருவமுது செய்வித்தார்.

சிவனடியார் சென்றபின் பரமதத்தன் வீட்டிற்கு வந்து போசனம் பண்ணும்பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனியை அவனது கலத்திற் படைத்தார். அக்கனியின் இனிய சுவையைக் கண்ட பரமதத்தன் மற்றொரு கனியையும் கொண்டுவந்து படைக்கச் சொல்லவே, அம்மையார் நிகழ்ந்ததைக் கூறினார். கணவன் அதை நம்பாமல், மிக்க கோபத்துடன் மறுமுறை வற்புறுத்திக் கேட்கவே, அவர் உள்ளே சென்று மிகவும் சோகித்துப் பரமசிவனைத் தியானித்தார். தியானித்த வளவிலே அடியார்க்கெளியனாகிய அம்மையப்பர் புனிதவதியாருடைய கரத்திலொரு மாங்கனி தோன்றச் செய்தார். அம்மையார் இறைவனது பேரருள் திறத்தை வியந்து, அக்கனியைக் கொண்டுபோய் நாயகனுடைய கலத்தில் இட்டாள். அவன் அதைச் சுவைத்தவளவில், அஃது மூவுலகங்களிலும் பெறுதற்கரிய இனிய கனியாய் இருக்கக் கண்டு, "இக்கனி நான் தந்ததன்றே. இது எங்கிருந்து கிடைத்தது?" என்றான்.

ஈசன் ஈந்ததைப் புனிதவதியார் தெரிவிக்கப் பரமதத்தன் அக்கதையை நம்பாதவனாகி, "இக்கனி சிவபிரா

னுடைய திருவருளினாற் கிடைத்ததாயின் பின்னுமொரு கனி அவருடைய திருவருளினாலேயே வருவித்துத் தா” என்றான். புனிதவதியார் அவ்விடத்தை விட்டுப் போய் மங்கைபாகனைத் துதித்து, “அடியார்க்கெளியனே! இன்னுமொரு கனி தந்தருளாவிடில் அடியேனுடைய வார்த்தை பொய்யாகிவிடும்” என்று விண்ணப்பஞ் செய்ய, சுவாமியினுடைய திருவருளினாலே பின்னுமொரு மாங்கனி அவர் கையகத்துற்றது. அம்மையார் அக்கனியைத் தன் கணவனது கரத்திற் கொடுக்க, அவன் பெருவியப்படைந்து அதை வாங்கினான். வாங்கினவளவிலே, அது மறைந்து போயிற்று.

அப்பொழுது பரமதத்தன் மனந்திடுக்கிட்டு, புனிதவதியாரைத் தெய்வமென்றே நினைத்தான். இதன் பின்னர் அவன் அவ்வம்மையாரோடு இல்லற வாழ்க்கையில் இருக்க அஞ்சினான். ஆகையால் ஒருநாள் ஒரு மரக்கலஞ் செய்வித்து, அதில் வர்த்தகச் சரக்குகளை யேற்றித் திரை கடலோடித் திரவியந் தேடிக்கொண்டு பாண்டிய நாட்டிலுள்ள ஒரு நகரை அடைந்தான். அவன் அங்குள்ள ஒரு வைசியனுடைய மகளை மணந்துகொண்டு பெருஞ்செல்வத்தோடு வாழ்ந்திருந்தான். இம்மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவன் புனிதவதியாரைத் தான் வணங்குந் தெய்வமாகக் கொண்டிருந்தமையால், அவருடைய பெயரையே அப்பெண்ணிற் கிட்டான்.

பரமதத்தன் இப்படி யிங்கிருக்க, காரைக்காலில் கற்பு வழுவாது இல்லறம் நடத்திவந்த புனிதவதியாரது சுற்றத்தார் பரமதத்தனுடைய வரலாற்றை யறிந்து அம்மையாரை அவனிடம் கொண்டுபோய் விடுத்தனர். அப்பொழுது பரமதத்தன் அம்மையாருடைய திருவடிகளைப் பணிந்து, “அடியேன் உம்முடைய கருணையினாலே


வாழ்கின்றேன். இப் பெண்ணிற்கும் உம்முடைய பெயரையே இட்டேன்" என்றான். அவனது செய்கையைக் கண்ட சுற்றத்தார், "நீ உன் மனைவியை வணங்குவதென்ன?" என்று கேட்க, "நான் இவரிடத்திலே தெய்வத் தன்மைகளைக் கண்டேன். இவரை என் குலதெய்வமாகக் கொண்டுவிட்டேன். நீங்களும் இவரை வணங்குங்கள்," என்றான்.

புனிதவதியார் சிவபெருமானுடைய திருவருளினாலே கிடைத்த ஞானத்தைக் கொண்டு அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடினார். பின்பு அவர் திருக்கைலாயத்தை யடைந்து, அங்கே தலையினால் நடந்து மலைமீதேறிச் சென்றார். அவருடைய பக்தியைக் கண்ட உமா பிராட்டியாரும் பெரு வியப்படைந்தார். புனிதவதியார் சமீபத்தில் வரவே, பரமசிவன் உலகமெல்லாம் உய்யும் பொருட்டு, அவரை நோக்கி, "அம்மையே," என்று அழைத்தார். அக்காரணம் பற்றிப் புனிதவதியாருக்குக் "காரைக்காலம்மையார்" என்ற பெயர் வழங்கலாயிற்று. சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவரில் ஒருவராகிய இவரது சரித்திரம் பெரிய புராணம் என்னும் அரிய நூலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

## 26. தேனீ

நமது வீடுகளிலுள்ள ஈக்களை நினைக்குமளவிலேயே நமக்கு நடுக்க மெடுக்கின்றது. ஆயினும், தேனீயைக் குறித்துச் சிந்திக்கும்பொழுதோ நமதுள்ளம் உவகையாற் பொங்குகின்றது. இதற்குக் காரணம் யாதெனின், நமது வீடுகளில் உலவுகின்ற ஈ நோயைத் தந்து நம் வாழ்க்கையின் இனிமையைக் கெடுக்கின்றது; தேனீயோ நாவிற்கினிய தேனைத் தந்து நம் வாழ்வை மதுரமாக்குகின்றது. அன்றி


யும் அது தன் ஜீவியத்தினாலே நமக்குப் பல நீதிகள் கற்பித்து நம்மைச் சீர்படுத்துகின்றது. இச் சிறு பிராணியின் ஜீவிய சரித்திரம் வெகு அற்புதமானது.



சோலைகளில் தேனீக்கள் வெகு சுறுசுறுப்பாய் வேலை செய்வதை நாம் பன்முறையும் பார்த்திருக்கிறோம். தேனீக்களின் சமூக வாழ்க்கை பல விஷயங்களில் மனித சமூக வாழ்க்கையை ஒத்திருக்கின்றது. சில தேனீக்கள் மலர்தோறுஞ் சென்று உண்ணுதற்குகந்த பொருள்களாகிய செழுந்தேனும், பூந்தாதும் கவர்ந்து வரும். வேறு சில தேனீக்கள் கூட்டிற்குள் சேதமான பாகங்களைப் பழுது பார்க்கும். வெட்டியான்போல் மற்றுஞ் சில தேனீக்கள் கூட்டினுள் செத்துக் கிடக்கும் பிணங்களையெல்லாம் அப்புறப்படுத்திச் சிற்றறைகளை எப்பொழுதும் சுத்தமாக வைக்கும். இன்னும் சில தேனீக்கள் செவிலித்தாய் போலிருந்து தேனீப் புழுக்களைப் பராமரித்து வளர்க்கும். சேகரித்து வைத்த தேனை வேறு தேன்கூட்டைச் சார்ந்த ஈக்கள் வந்து, கவர்ந்துகொண்டு போகாதவாறு போர்ச் சேவக ஈக்கள் கூட்டின் வாசலைக் காத்துக்கொண்டிருக்கும். மேலும், ஒரு தேன் கூட்டில் ஓரே பெண் ஈ வசிக்கும். அப்பெண் ஈக்கு இராணி ஈ என்று பெயர். ஆகவே ஒவ்வொரு தேன் கூட்டிலும், தேன் எடுக்கும் ஈக்கள், கூடுகட்டும் ஈக்கள், சுத்தஞ் செய்யும் ஈக்கள் காவல் புரியும் ஈக்கள், செவிலித்தாய் ஈக்கள் எனப் பல வேலைக்காரர்களும், சோம்பேறி

கள் எனப்பெயர்பெற்ற ஆண் ஈக்களும், இராணி ஈக்களும் இருக்கின்றன.

கூட்டிலுள்ள தேனீக்களுக்கு வேலையிடுகிறது யார் என்று நமக்குத் தெரியாது. யாவும் மகா மாயமாய் நெறிமுறை தவறாது செவ்வையாக நடைபெறுகின்றது. ஒவ்வொரு தேனீயும் தான் செய்ய வேண்டிய வேலை இன்னதென்று நன்றாய் உணர்ந்து ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும்.



தேன் கூடு

### தேனீக் கூட்டின் அமைப்பு

மிகவும் விசித்திரமானது. ஒரு கூட்டத்தைச் சார்ந்த தேனீக்கள், வசதியான ஓரிடத்தைத் தெரிந்து கொண்டபின் அவை தேன் கூடு அமைக்க ஆரம்பிக்கும். முதலில் தேனீக்கள் மேற்பக்கத்தில் வரிசையாக ஒன்றின் காலை மற்றொன்று பிடித்துக்கொண்டு மாலைபோல் தொங்கும். தேனீக்களுடைய அடிவயிறுகளிற் சிறு வளையங்கள் காணப்படுகின்றன. இவ்வளையங்களின் கீழ் சிறு பைகள் காணப்படுகின்றன. இப்பைகளிலிருந்து ஒரு வகை மெழுகு இறங்கும். இம்மெழுகு தேனீக்கள் அருந்துகின்ற தேனிலிருந்தே உண்டாக்கப்படுகிறது. ஈக்கள் முற்கூறியவாறு தொங்கிக்கொண்டிருக்கும் பொழுது மெழுகுப் பைகளிலிருந்து மெழுகு இறங்குகின்றது. அது, காற்றால் உறைந்ததும், தேனீக்கள் பின் கால்களினால் அம்மெழுகை வழித்தெடுக்கும். பின்பு அதனை முன் கைகளில் வாங்கித் தம் நாவிலிருந்து சுரக்கும் நீரோடு கலந்து ஈரமாக்கும். பின்பு,

அதனைத் தமக்குத் தேவையானபடி உருவாக்கி ஓர் இடத்தில் வைக்கும்.

தேனீக்கள் இப்படித் திரட்டிய மெழுகை முதன் முதலிற் கூட்டின் உச்சியாய் அமையவேண்டிய இடத்திற் பதித்துவைக்கும். இங்ஙனம் பதிக்கப்படுகிற மெழுகிற்கு அஸ்திபாரமெழுகென்று பெயர். இவ்வாறு எல்லா ஈக்களும் மெழுகு சேர்த்து வைத்தபின், ஓர் ஈ அவற்றின் நடுவிற் சென்று அறைகளை அமைக்கும். அந்த ஈ, களைப்படையுமாயின் அப்பணியை மற்றொன்று ஏற்றுக்கொள்ளும். நடுவறை அறுகோணவடிவமாய் அமைந்திருக்கும். நடுவறையை அமைத்தவுடனே, மற்ற ஈக்கள் யாவும் அதனைச் சூழ அறுகோண வடிவமாகிய அறைகளை யமைக்கும். அறுகோண வடிவாய் அறைகளை அமைப்பதினால், இடம் வீணாகாதபடி காத்துக்கொள்ள முடியும்.

தேன் கூட்டினுள் பலவகையான அறைகள் அமைந்திருக்கும். இராணி ஈ கூட்டினுட் புகுந்து அறைகளில் முட்டையிடும். அது முட்டையிடுமுன் அறைகளைப் பரிசோதிக்கும்; வேலைக்கார ஈக்களைச் சிறிய அறைகளிலும், ஆண் ஈக்களாக வேண்டிய முட்டைகளைப் பெரிய அறைகளிலும், இராணி ஈ பிறக்கக்கூடிய முட்டைகளை மிகப் பெரிய அறைகளிலும் இடும். முட்டைகள் சிறிது நீல வர்ணங்கலந்த வெண்மையாய் இருக்கும். முட்டைகளின் மேற்புறத்தில் ஒரு வகைப் பசை யிருப்பதினால், அவை கூட்டின் பக்கங்களில் ஒட்டிக்கொள்ளும்.

மூன்று நாட்களுக்குப் பிறகு முட்டைகள் பொரியவே, புழுக்கள் வெளிப்படும். இங்ஙனம் பொரிகின்ற புழுக்களைச் செவிலித்தாய்கள் வளர்க்கும். செவிலித்தாய்கள் உணவுப் பொருள்களை மிதித்தும் மென்றும் குஞ்சுகள் சாப்பிடத் தக்க விதமாக அமைத்துக் கொடுக்கும். புழுக்கள் நன்றாய்

வளர்ந்தவுடனே அவை தங்கும் வாசல்கள் மெழுகினால் மூடப்படும். இவ்வாறு அடைக்கப்பட்ட அறைகளி னுள்ளே தங்குகின்ற புழு தன் உடலினின்று ஒருவகை மெழுகை உண்டாக்கி, அதனாற் கூடு அமைத்துக் கொண்டு அதனுட் புகுந்திருக்கும். மெழுகுக் கூடுகளில் மறைந்து உறங்கும் புழுக்கள் நாளடைவில் உருமாறிச் சிறகு முதலிய உறுப்புக்களைப் பெற்று, தேனீக்களாகும்.

இப்பொழுது, பலதேசங்களிலும் தேனீக்களைப் பேணி வளர்க்கின்றனர். இங்ஙனம் வளர்க்கப்படும் தேனீக்களுக்கு வீட்டுத் தேனீக்கள் என்று பெயர். வீட்டுத் தேனீக்களை வளர்ப்பதனால் ஏராளமாகத் தேன் சேகரித்து, அது கிடைக் காத தேசங்களுக்கு அதை அனுப்புகின்றனர். நமது நாட்டில் கோடைக்கானல், நீலகிரி, வயநாடு முதலிய இடங்களிலும், வட இந்தியாவில் இமயமலைப் பிராந்தியங் களிலும், பம்பாய் மாகாணத்திற் சில இடங்களிலும் தேனீக்களைக் கூடுகளில் விட்டு வளர்த்துத் தேன் சேர்க் கின்றனர்.

## 27. ஜெ. என். டாட்டா

பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த கூர்ஜர நாட்டில் நவசாரி என்னும் ஊரில் 1839-ம் வருஷம் ஒரு பார்ஸிப் புரோகிதக் குடும்பத்தில் மிகவும் அற்புதமான காரியங்களைச் செய்யவல்ல சிறுவன் ஒருவன் பிறந்தான். அச்சிறுவ னுடைய தந்தையார் பெயர் நசர்வான்ஜீ நத்தன்ஜீ டாட்டா. அவர் நவசாரியிற் குடியேறிய பார்ஸிகளுக்குப் புரோகிதரா யிருந்தார். அவர் வேறொரு தொழிலியற்றிப் பொரு ளீட்டித் தன் மகனை ஒரு செல்வவந்தனாக்கத் தீர்மானித் தார். இதற்கு அவர் நவசாரியிற் செய்துவந்த புரோகித வேலை பொருத்தமற்றதாய் இருந்தது. ஆகையால் அவர்

அவ்வூரிலேயே கிடந்து வறுமையால் வருந்துவதில் பயனில்லையென்று அவ்விடம் விட்டுப் பம்பாய் நகர் வந்து சேர்ந்தார். அவரோடு நமது சிறுவனும் பம்பாய்க்கு வந்துவிட்டான்.

அப்பொழுது சிறுவனுக்கு வயது 13. பம்பாய்க்கு வந்ததும் அச்சிறுவன் அங்கே ஒரு சிறு பள்ளிக்கூடத்திலே மூன்று வருஷகாலம் படித்த பிறகு அந்நகரிலுள்ள பிரபலமான எல்பின்ஸ்டன் கலாசாலையில் 1855-ம் ஆண்டு சேர்ந்து உயர்தரக் கல்வி பயின்றான். அப்பொழுது நசர்வான்ஜி வியாபாரத் தொழிலொன்று ஆரம்பித்து அதை நடத்தி வந்தார். அது நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வளர்ந்தது. சிறுவனது கல்லூரிப் படிப்பு முடியுமுன்னே ஒருநாள் அவனை அழைத்து, "மகனே! நான் ஒருவனே எல்லா விஷயங்களையுங் கவனிக்க வேண்டியதாயிருக்கின்றது. எனக்கு உதவி செய்ய நம்பிக்கையுள்ள ஒருவர் வேண்டும். ஆகையால் நீ உன் கல்வியை நிறுத்தி, வியாபாரத்தில் எனக்கு உதவி செய்யத் தலைப்பட வேண்டும்" என்றார். அது கேட்ட சிறுவன், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்று, பிதா செய்துவந்த வர்த்தகத் தொழிலிற் பிரவேசித்தான்.

அதுமுதல், அவன் பம்பாயிலேயே நிலையாய் இருக்க முடியவில்லை; வியாபாரத்தின் பொருட்டுப் பல இடங்களிலுஞ் சுற்றித் திரியவேண்டியதாயிற்று. அப்பொழுது அவன் இருபத்தொன்று வயதுள்ள இளை வாலிபனாயிருந்தும் வியாபார சம்பந்தமாகச் சீனா தேசத்துக்குப் போகவேண்டியதாய் இருந்தது. அவன் சீனா தேசத்தில் நான்கு வருஷகாலம் தங்கியிருந்தான். 1863-ம் வருஷம் சீனா தேசத்திலிருந்து அவன் திரும்பி வந்த பிறகு, இரண்டு வருஷ காலம் பம்பாயை விட்டு வெளி

யேறுமல் வியாபாரத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான்; தான் செய்துவந்த வியாபாரத்தை இங்கிலாந்திலும் பிரபலமாக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு அந்நாட்டிற்குச் சென்றான்; அங்கே இந்தியன் பாங்க் ஒன்று ஏற்படுத்தப் பெரிதும் முயன்றான்; ஆனால் அது கைகூடாமற் போயிற்று. ஏனென்றால், பம்பாயில் அவனுடைய வியாபாரம் படுத்துக்கொண்டது; பலவிதக் கஷ்டங்களோடு நஷ்டங்களும் ஏற்பட்டன.

அந்நிலைமையிலும் அவன் தன் மனோதைரியத்தைக் கைவிட்டுக் கலங்கிப் போகாமல், சமயோசிதமான முறைகளைக் கையாடியும், சில மராமத்துக் குத்தகைகள் எடுத்தும் தன் குடும்பத்தை நிலை நாட்ட உறுதிகொண்டான். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்றபடி, இது முதல் அவன் தொட்ட மண்ணுருவும் பொன்னுருவாக மாறிச் சிறந்து விளங்கத் தலைப்பட்டது. வெகு நாளாய்த் தரிசு நிலமாகக் கிடந்த ஒரு பூமியைத் தார்க்காஸ்து நிலமாக வாங்கி அதை வெட்டித் திருத்திப் பண்படுத்தி முயற்சி செய்யவே, அது பத்துக்கு நூறுய்ப் பலன் கொடுத்தது. அப்பொழுது அவன் அதில் பெரிய பெரிய ஆலைகள் வைத்துத் தொழில் நடத்த ஊக்கங்கொண்டான். பின்னர் ஒரு செக்காலையை நெசவுத் தொழிலாலையாக மாற்றி, அதற்கு "அலெக்சாந்திரா ஆலை வேலைகள்" எனப் பெயரிட்டுத் தொழில் போற்றி வந்தான். அதுவும் இலாபம் பொழிய வாரம்பித்தது. சிறிது காலத்தில் அதற்கு நல்ல விலை வந்தபோது அதை விக்கிரயஞ் செய்துவிட்டான். ஏனெனில், இங்கிலாந்துக்கு மறுபடியுஞ் சென்று அங்கே நடைபெறும் ஆலை வேலைகளில் அநுசரிக்கப்படும் உத்தம முறைகளைக் கற்றுணர்ந்து, பின் திரும்பிவந்து, தானுணர்ந்த முறைகளைத் தன் நாட்டிற்கு உகந்தவாறு பொருத்தித்

தொழிலிற் பன்மடங்கு அபிவிர்த்தியடைய வேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று.

ஆதலால் அவன் 1872-ம் வருஷம் இங்கிலாந்திற்குச் சென்று, அங்குச் சிறிது காலம் தங்கிக் கற்றுணர வேண்டு வனவற்றையும், கண்டறிய வேண்டுவனவற்றையுஞ் செவ்வனே கிரகித்து, வெகு சீக்கிரம் தன்னூட்டிற்குத் திரும்பி வந்தான்; வந்ததும், ஒரு பெரிய ஆலையை ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானித்தான். அதை எவ்விடத்தில் ஏற்படுத்தலாமென்று துணிதற்பொருட்டு இந்தியா தேசமெங்குஞ் சுற்றித் திரிந்து முடிவிலே நாகப்பூர்தான் ஏற்ற இடமெனத் தீர்மானித்து, அங்கே 'எம்பரஸ்' தொழிலாலையை ஸ்தாபித்தான். ஆய்ந்தோய்ந்து பார்த்து அமைவுறச் செய்த காரியம் பழுதுபடாதாகையால், நாகப்பூரில் ஸ்தாபித்த "எம்பரஸ்" ஆலையிலிருந்து பொருத்த லாபம் வந்தது. அவ்வாலைக்கு நிகராக இந்நாட்டில் வேறெதனையும் ஒப்பிடமுடியாது. அவன் அத் தொழிலாலையை ஏற்படுத்துவதற்கு முன்னர், தகுந்த பங்காளிகள் பலரைச் சேர்த்துக்கொண்டு அதை யாரம்பித்தான். அதில் ஏராளமான இலாபம் கிடைக்கவே, பங்காளிகளின் க்ஷேமத்தைத் தன்னலத்தினும் அதிகமாய்ப் பாராட்டலானான். அத்துடன் முதலாளியின் க்ஷேமத்திற்கு வேலையாட்களின் க்ஷேமமே ஆதாரமானது என்ற தொழில் இரகசியத்தையும் நன்குணர்ந்து, வேலையாட்களின் வயிற்றில் மண்ணடியாமல், தக்க கூலி வழங்கி வந்தான். இம்முறைகளை உபயோகித்தமையால், அவன் ஆரம்பித்த தொழிற்குப் பழுது ஏற்படவில்லை.

அவன் ஆரம்பித்த தொழில்களி லெல்லாம் மிகப் பிரசித்தி பெற்றது இருப்புச் சுரங்க வேலையேயாம்.

வங்காள மாகாணத்தில் ஜேம்ஷெட்பூரில் மிகவும் விசால மான ஒரு பூமி வெறுந் தரிசுக்காடாய்க் கிடந்தது. நமது சிறுவன் மேற்சொன்ன சுரங்கவேலையை ஆரம்பித்தான். தரிசுக்காடு இப்பொழுது டாட்டா நகர் என்று பெயரோடு மகா அற்புதமான பட்டணமாய் விளங்குகின்றது. அங் குள்ள இரும்பாலையில் ஒரு நாளில் இருபத்து நான்கு மணி நேரமும் ஓய்வென்பதேயின்றி வேலை நடந்து வரு கின்றது. எட்டு மணி நேரத்திற்கு 8,000 கூலியாட்களாக 24,000 கூலியாட்கள் வேலை செய்கின்றனர் எனில், அக் கூலியாட்களை யெல்லாம் மேற்பார்வையிடும் உத்தியோகஸ் தரின் எண்ணிக்கையையும், அங்கே ஓயாமற் சுழல்கின்ற பூதாகாரமான யந்திரங்களையும், வானளாவிய புகைக்குழாய் களையும், தொழிலாளர்களும் உத்தியோகஸ்தர்களும் வசிக்கும் குடிசை, வீடு, மாளிகைகளையும், அவைகளின் மத்தியிற் செல்லும் அழகான தெருக்களையும், பாதைகளை யும், ஜோதிமயமான விளக்கு நிலைகளையும், இருப்புப்பாதை களையும், மோட்டார் வண்டிகளையும் நீங்களே உங்கள் மனக்கண்ணாற் பாருங்கள்! சுரங்கத்திலிருந்து வெட்டி யெடுக்கப்படும் கலப்பான இரும்பு பெரிய அக்கினிக்கோட் டையிலே செந்நீராகமாறி, அசுத்தம் நீங்கி, பல வாய்க்கால் வழியோடிப் பல்வகையான பெரிய அச்சுக்களிலே பாய்ந்து வெகு பாரமான இருப்புத் தண்டவாளங்களாகவும், கம்பி களாகவும், தகடுகளாகவும் மாறுகின்ற காட்சி, அங்கு நிக ழுங் காட்சிகளில் ஓர் சர்வ சாதாரணமான காட்சியேயாம். அங்குள்ள கூலியாட்களில் அதிகமான தினக்கூலி வாங்கு கின்றவர்கள் நாளொன்றுக்கு ரூ. 12 வீதம் வாங்குகிறார் கள்.

மேலும் மலையினு மாணப் பெரிய ஈகைக் குணத்தி னாலே அவன் இந்நாட்டின் கல்விப்பெருக்கத்திற்கும் தொழி

லபிவிருத்திக்கும் இலட்சக்கணக்காய் மூலதன மளித்துச் செய்துள்ள தருமகைங்கரியங்கள் எண்ணிறந்தவை. அவற்றுளெல்லாம் நடுநாயகமாய் விளங்குவது பெங்களூரில் ஸ்தாபித்திருக்கின்ற இரசாயன ஆராய்ச்சி சாலையேயாம். அவன் இதற்கு முப்பது லட்சம் ரூபாய் மூலதனமாக அளித்திருக்கின்றான்.

தனது அரிய பெரிய செயல்களால் இச்சிறுவன் நமது நாட்டிற்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் பலவற்றைச் செய்தபின் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகம் அடைந்துவிட்டான். ஆயினும் இவன் இறந்தும் நம் மத்தியில் உயிரோடிருக்கின்றான் என்று கூறலாம். இவ்வரிய மைந்தனே ஜெம்ஸெட்ஜி என். டாட்டா என்பவர். நீங்கள் பெரியவர்களாகிறபோது இவருடைய ஜீவிய சரித்திரத்தை நன்றாகப் படித்தறியவும், இவருடைய டாட்டா நகரத்தை நேரிலே சென்று பார்க்கவும், இந்நாட்டின் தொழிலபிவிருத்திக்கு உதவிபுரியவும் வேண்டுமென்பதே நமது தாய்நாட்டின் குறிக்கோளாகும்.

## 28. ஸ்ரீ கிருஷ்ண குமாரி

நமது பரதகண்டத்திலுள்ள இராஜஸ்தானம் என்னும் நாடு பல ராஜபுத்திர மன்னர்களால் ஆண்டுவரப்பட்டு பண்டைக்காலமுதல் வீரத்திற்குந் தீரத்திற்கும் புகழ் வாய்ந்தது. ராஜபுத்திர ஆடவரும் மகளிரும், தங்கள் உயிரினும் மானமே பெரிதென்று கருதி வாழ்ந்து வந்தனர். இந்நாட்டில் உதயபுரி (உதயப்பூர்),ஜெயபுரி (ஜெய்ப்பூர்), ஜோதிபுரி (ஜோத்பூர்) என மூன்று சிறு இராஜ்ஜியங்கள் சரித்திரத்திற் பெயர் பெற்றவை. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் உதயபுரியில் ஸ்ரீ கிருஷ்ண குமாரி என்ற ஒரு ராஜகன்னிகை

இருந்தாள். அவளது கற்பின் மாண்பையும், வீரத்தையும் பின்வரும் சரித்திர சம்பந்தமான நாடகம் விளக்குகிறது.

## காட்சி 1.

இடம் : உதயபுரி அரண்மனை. காலம் : மாலை.

பாத்திரங்கள் :—அரசர், அரசி, மந்திரி, ஜோதிபுரி இராஜ தூதர்கள்.

மன்னர் :—(உட்பிரவேசிக்கும் ஜோதிபுரி இராஜ தூதர்களைப் பார்த்து) வாருங்கள் இராஜ தூதர்களே ! ஆசனத்தில் அமருங்கள். உங்கள் வேந்தர் பராக்கிரம சிங்கர் சுகமாக அரசுபுரிந்து வருகிறாரா ?

இராஜ தூதர்கள் :—ஆம் அரசே ! ஓதல், பொருதல், புரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல் என்னும் ஆறு தொழிலையும் செவ்வனே நடத்திச் சுகமே வாழ்ந்து வருகிறார். ஆனால், அவர் வாலிபப் பருவம் எய்தியும் விவாகமாகாமையால் அரசி இல்லா எங்கள் நாடு சந்திரனில்லா வானம்போலிருக்கிறது. தங்களது புதல்வி ஸ்ரீ கிருஷ்ண குமாரியின் உருவப் படத்தை அவர்கள் பார்த்த பிறகு தங்கள் குமாரியையே மணம்புரிய எண்ணி எங்களை அது விஷயமாகத் தங்களிடம் அனுப்பியுளார். எங்கள் தேசத்துக் குடிகளும் இச்சம்பந்தத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். தங்களது மங்களகரமான பதிலை வேண்டுகிறோம்.

மன்னர் :— அன்புள்ள நாயகியே ! இவர்களது கோரிக்கையைப்பற்றி உனது அபிப்பிராயம் யாது ? அவர் கல்வி கேள்விகளில் வெகு சமர்த்தர் என்று அறிகிறேன்.

அரசி :—அது நல்ல சம்பந்தமே ! அவர் யௌவனமுள்ள சுந்தர புருஷரென்று தெரிகிறது. அவரது உருவப்

படத்தைக் கண்ணுற்ற கிருஷ்ண குமாரியும் அவரை மணக்க இச்சைகொண்டு இருப்பதாய் அவளது தோழிகள் மூலமாக அறியலானேன்.

மன்னர் :—அமைச்சரே ! உமது ஆலோசனை என்ன ?

மந்திரி :—ஜோதிபுரி, உதயபுரிக்குச் செல்வத்திலும் சீரிலும் இணையுள்ளதே. அவ்வேந்தர் தமது பெயருக்கேற்ப பராக்கிரமமும், ஆண்மையுமுள்ள சிறந்த வீரர். நமது இளவரசியை அவருக்கு மணம் புரிவது நமது நாட்டினருக்கு மகிழ்ச்சி தரும்.

மன்னர் :—ஜோதிபுரி தூதர்களே ! எனது நண்பர் பராக்கிரம சிங்கர் எனக்கு மருமகனாதலும், நமது கிருஷ்ண குமாரி ஜோதிபுரி அரசியாவதும், எனக்கு மிக்க சந்தோஷகரமானது என்பதை அவருக்குத் தெரிவியுங்கள். ஆனால் இப்பொழுது மாரிக் காலமாக இருப்பதால் வசந்தகாலம் வந்ததும் திருமணம் நடைபெறலாம்.

ஜ. தூதர்கள் :—தங்களது உத்தரவுப்படியே, மஹாராஜா! (விடைபெற்றுச் செல்லுகிறார்கள். சபை கலைகிறது.)

## காட்சி 2.

இடம் : ஜயபுரி அரண்மனை தர்பார் மண்டபம்.

பாத்திரங்கள் :—பிரதானி, சேனாதிபதி, சபையோர்.

காலம் : காலை.

சேனாதிபதி :—:—பிரதானியாரே ! ஜோதிபுரி மன்னர் பராக்கிரம சிங்கர் விவாகம் நடைபெறுவதற்கு முன்னேயே திடீரென்று இறந்து விட்டாராமே ! அது உண்மையா ?

பிரதானி :—நானும் அவ்விதமாகத்தான் கேள்விப் பட்டேன். ஜுரத்தால் இறந்ததாகத் தெரிகிறது.

சேனாதிபதி —அவருக்குப் பிறகு யார் பட்டத்திற்கு வந்திருக்கிறார் ?

பிரதானி :—மானசிம்மன் என்ற ஒருவர் இராஜ்ஜியத்தை அபகரித்துச் சிங்காசனம் ஏறியுளர்.

சேனாதிபதி :—காலஞ் சென்ற மன்னன் பராக்கிரம சிங்கருக்கு உதயபுரி மன்னன் மகளாகிய கிருஷ்ண குமாரியை விவாஹம் செய்வதாக நிச்சயித்திருந்தார்களே. இனிமேல் என்ன செய்யப்போகிறார்கள் ?

பிரதானி :—நமது அரசருக்கு அம்மங்கையை மணஞ் செய்து கொடுக்க வேண்டி அங்கிருந்து நமது மந்திரி உதயபுரிக்குச் சென்றிருக்கிறார்.

(ஜெயபுரி மன்னர், பிரதாப சிங்கர், மந்திரி, சேகவர் முதலியோர் தர்பாருக்கு வருகிறார்கள். சபையோர் எழுந்து அரசருக்கு மரியாதை செய்து, அவர் சிங்காதனத்தில் அமர்ந்ததும், எல்லோரும் உட்காருகிறார்கள்.)

அரசர் :—மந்திரி ! உதயபுரிக்குச் சென்று எப்பொழுது இங்கு திரும்பினீர்? போய்வந்த காரியம் இசைந்ததா ?

மந்திரி :—இப்பொழுதுதான் திரும்பி வந்தேன். ஸ்ரீ கிருஷ்ண குமாரியைத் தங்களுக்கு விவாகம் செய்துகொடுப்பதில் தமக்குப் பூரண சம்மத மென்றும், நமது இஷ்டம் போல் கலியாணத்தை இங்கேயே நடத்திக் கொள்ளலா மென்றும், முகூர்த்த நாளைக் குறிப்பிட்டுப் பத்திரிகை அனுப்பவும் உதயபுரி மன்னர் கூறினார்.

அரசர் :—மிக்க சந்தோஷம். கலியாணத்திற்கான ஏற்பாடுகளை உடனே கவனியுங்கள்.

மந்திரி :—உத்தரவுப்படியே, மஹாராஜா !

(சபை கலைகிறது.)

காட்சி 3.

இடம் : உதயபுரி அரண்மனை. காலம் : மாலை.

பாத்திரங்கள் :—அரசர், அமைச்சர் முதலானோர்.

மந்திரி :—அரசர் ஜெயபுரி அரசனுக்கு நமது கிருஷ்ண குமாரியை விவாகஞ் செய்விக்கத் தீர்மானித்த பிறகு, இப்பொழுது ஜோதிபுரியிலிருந்து அது விஷயமாக ஒரு லிகிதம் வந்திருக்கிறது.

அரசர் :—அதைப் படியும், பார்க்கலாம்.

மந்திரி :—(வாசிக்கிறார்.)

ஜோதிபுரி

.........1820

மாட்சிமை தங்கிய உதயபுரி மஹாராஜா அவர்கள் சமுகத்திற்கு ஜோதிபுரி மந்திரியாகிய விஷ்ணு மித்திரர் மிக்க வணக்கமாய் எழுதியது.

தங்கள் புத்திரி ஸ்ரீ கிருஷ்ண குமாரியை எங்கள் நாட்டிற்கு அரசி யாக்குவதாகத் தாங்கள் வாக்குதத்தஞ் செய்திருக்கிறீர்கள். அதற்கு மாறாக இப்பொழுது தங்கள் புதல்வியை ஜெயபுரி அரசருக்கு விவாகம் செய்யப் போவதாகத் தெரிகிறது. முந்திய மன்னராகிய பராக்கிரம சிங்கர் காலஞ் சென்றுவிட்டாலும் தங்கள் வாக்குப்படி அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்துள்ள எங்கள் மஹாராஜா

மானஸிம்மர் அவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ண குமாரியை மணஞ் செய்து கொடுப்பதே முறையாகும். இந்தக் கடிதங் கண்டதும் தங்களது மங்களகரமான பதிலை எதிர்பார்க்கிறோம். அப்படி யில்லாத விஷயத்தில் எங்களுடைய சைன்னிய மானது இன்னும் ஒரு வாரத்தில் தங்கள் கோட்டையை முற்றுகை யிடுமென்று தெரிவிக்கிறோம்.

இப்படிக்கு,
மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்கள் உத்தரவுப்படி,
விஷ்ணு மித்திரர்,
ஜோதிபுரி மந்திரி.

அரசர் :—இதென்ன விபரீதம்; ஜோதிபுரி மன்னர் பராக்கிரம சிங்கருக்கு நமது குழந்தையைக் கொடுப்பதாகச் சொன்னது உண்மையே. ஆனால் அவர் இறந்த பிறகு அந்த இராஜ்ஜியத்தை அபகரித்துள்ள மானஸிம்மர் நமது குமாரியை விவாகம் செய்துகொள்ளக் கேட்பது எவ்வாறு நியாயமாகும்? என்றாலும், போர்புரிவதைவிட மானஸிம்மருக்கே குழந்தையை மணஞ் செய்வித்து விடுவோமா?

மந்திரி :—அப்பொழுது ஜெயபுரி அரசரது பகை ஏற்படுமல்லவா? அதையுங் கவனிக்க வேண்டுகிறேன்.

அரசர் :—ஆம், மந்திரி! நீர் சொல்லுவதும் சரியே! இப்பொழுது யாருக்கு நாம் இல்லை யென்பது? ஒருவருக்குக் கொடுத்தால் மற்றவரது விரோதம் திண்ணம். இருதலைக் கொள்ளி எறும்பு போலாயிற்றே என் நிலைமை. என்றாலும், ஸ்ரீ கிருஷ்ண குமாரியை அழைத்துவரச் சொல்லும். (சிறிது நேரத்திற்குப் பிறகு ஸ்ரீ கிருஷ்ண குமாரி வந்து அரசரைப் பணிந்து, ஆசனத்தில் அமருகிறாள்.)

குழந்தாய்! முதலில் உன்னை விவாகஞ் செய்விக்க நிச்சயித்திருந்த ஜோதிபுரி பராக்கிரம சிங்கர் திடீரென்று இறக்க நேரிட்டது கடவுள் செயல். வீரத்திலும், செல்வத்திலும், சௌந்தர்யத்திலும் அவருக்கு இணையுற்ற ஜெயபுரி பிரதாப சிங்கருக்கு உன்னை இப்பொழுது மணம் புரிவிக்க ஏற்பாடு செய்துள்ளேன். அதற்கிடையில் ஜோதிபுரி நாட்டை அபகரித்து ஆண்டுவரும் மானசிம்மன் உன்னைத் தனக்கே விவாகஞ் செய்விக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் நமது இராஜ்ஜியத்தின் மீது பெருத்த சேனையுடன் படையெடுப்பதாயும் தெரிவித்திருக்கிறான். இருவரில் எவருக்கு உன்னை மணம் புரிவித்தாலும், மற்றவரது பகை யேற்பட்டு நமது ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டம் நேரிடும். உனது அபிப்பிராயம் யாது?

ஸ்ரீ கிருஷ்ண குமாரி :—தந்தையே! தாங்கள் ஒன்றிற்கும் கவலையுறவேண்டாம். நாம் இராஜபுத்திரர். பத்மினி முதலிய இராஜபுத்திர ஸ்திரீகள் தமது நாட்டின் நன்மைக்காகத் துணிகரமான செயல்களைச் செய்தும், தமது உயிரைக் கொடுத்தும் அழியாப் புகழ் பெற்றிருக்கிறார்கள். அவ்வித வீர இரத்தமே என் உடம்பிலும் பாய்கிறது. மேலும் நம் நாட்டு உத்தம பதிவிரதைகளின் தன்மை உங்களுக்குத் தெரியாததன்று. எப்பொழுது தாங்கள் என்னை ஜோதிபுரத்து முந்திய மன்னருக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்தீர்களோ, அப்பொழுதே அது விஷயமறிந்த நான் அவருடைய மனைவியாகி விட்டேன். அவர் இறந்த தருணமே நானும் உயிர்விட்டிருக்க வேண்டும். அவ்வாறிருக்க என்னைப் பிறருக்கு எவ்வாறு விவாகம் செய்துகொடுக்கக் கூடும்? ஜெயபுரி மன்னருக்கு என்னை மணஞ்செய்ய ஏற்பாடு செய்தது நான் அறியாததே. உத்தம ஸ்திரீகள் ஒருவரைக் கணவரென்று ஒருமுறை மன

தில் வரித்துவிட்டால் பிறகு எந்தவிதமான இடையூறு நேரிட்டாலும், மனதை மாற்றமாட்டார்கள். சத்தியவானைச் சாவித்திரி தன் கணவரென்று தீர்மானித்தபின் அவர் அற்பாயுளுள்ளவரென்று தெரிந்தும், அவரையே மணஞ் செய்து கொள்ளவில்லையா? நளாயினி, தமயந்தி, சந்திரமதி, சீதை முதலிய உத்தம ஸ்திரீகள் தங்களது கணவர்க்காக எவ்வளவு கஷ்டங்களைப் பொறுத்திருக்கிறார்கள். ஆகையால் எனக்குக் கணவர் பராக்கிரம சிங்கரே! அவரைத் தவிரப் பிறரை மனதிலுங் கருதேன். எப்பொழுது என் நாதர் இறந்துவிட்டாரோ அப்பொழுதே என் வாழ்க்கை நலம் போயிற்று. நான் இவ்வுலகில் இருக்கவேண்டிய காலமும் இவ்வளவுதான். நான் உயிரோடிருந்தாலன்றோ தங்களுக்கு இவ்விருவருடைய பகையும், அதனால் யுத்தமும் சேதமும் நேரிடும். நான் ராஜபுத்திர ஸ்திரீகளின் வழக்கப்படி, தீக்குளித்து உயிரை விடத் தீர்மானித்துவிட்டேன். அதற்கு வேண்டிய ஏற்பாடு ஆகிவிட்டது. இவ்விஷயத்தைத் தங்களிடம் தெரிவித்துக்கொள்ளுங் கருத்துடனேயே இங்கு வந்தேன். தாங்களும், பிரஜைகளும் சுகமே வாழுங்கள்! ராஜபுத்திர திலகமாகிய தாங்கள் என் வீரத்தை ஆமோதிப்பீர்களென்று எண்ணுகிறேன். இதோ நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன், எனக்கு உத்தரவு கொடுங்கள். (உடனே வெளியில் சென்று தீயிற் குதித்து வீரசுவர்க்க மடைந்தாள்).

## 29. நவீன அற்புதங்கள்


மனிதர் பூமியின் கண் தோன்றியது முதல் இயற்கைப் பொருள்களையுஞ் சங்கதிகளையும் தம் வயப்படுத்தி, தமக்கு ஊழியக்காரர்களாக அமைத்துக்கொள்ள முயன்றுவந்திருக்கிறார்கள். காடுகளை அழித்து நாடாக மாற்றியுளர். காட்டு

விருட்சங்களை வெட்டி வீடு கட்டவும், படகுகள் அமைக்கவும், மற்றும் அநேக சாமான்கள் செய்யவும் அவைகளை உபயோகித்துளர். வன விலங்குகளைப் பழக்கி வாகனங்களாகவும், அவற்றை வேட்டையாடி உணவாகவுங் கொண்டுளர். பூமியைத் திருத்திப் பல பயிர் வகைகளைச் சாகுபடி செய்துளர். உலோக வகைகளை உருக்கி ஆயுதங்களாகவும் ஆபரணங்களாகவும் பாத்திரங்களாகவும் அமைத்துளர். மலைகளைக் குடைந்து குகை வழிகளையும், ஆறுகளைக் கடக்கப் பெரிய பாலங்களையும் ஏற்படுத்தியுளர்.

மேலும், காற்றின் பலத்தினல் காற்றாடி இயந்திரங்களையும் கப்பல்களையும் இயங்கச் செய்தார்கள். நீர்வீழ்ச்சியின் பலத்தினுல் பெரிய சக்கரங்களைச் சுழலச் செய்து பல ஆலைகளை அமைத்தார்கள். நீராவியின் சக்தியால் இருப்புப் பாதை வண்டிகளையும், மற்றும் பல இயந்திரங்களையும் ஏற்படுத்தினர்கள். பிறகு மண்ணெண்ணெய், சிலாத்தைலம் (பெட்ரோல்) இவைகளை ஆவியாகச் செய்து நெல் குத்தும் இயந்திரங்களையும் மோட்டார் வண்டியையும் ஓடச் செய்தார்கள். தற்காலத்தில் மின்சார சக்தியினல் எண்ணரிய நவீன அற்புதங்களை அனைவரும் அதிசயிக்குமாறு அமைத்துளர்.

தூர திருஷ்டிக் கண்ணாடியால் சந்திர சூரிய நட்சத்திரங்களின் அமைப்பு இரகசியங்களை அருகிற் கண்டு அறிகிறோம். பூதக்கண்ணாடியின் உதவியால் கண்ணுக்குத் தெரியாத நுட்பமானவைகளைப் பெரிதாகப் பார்க்கிறோம். புகைப்படக் கருவியால் பல உருவப் படங்களைத் தயாரித்து நிரந்தரமாக வைத்துக்கொள்கிறோம். விளக்குப்படக் கருவியால் பல சித்திரங்களையும், ஓடும் படக்காட்சியால் (சினிமா) பல நாடக நடிப்புகளையுங் கண்டு களிக்கிறோம். புதியதாக வந்துள்ள பேசும் படக் காட்சியில் சங்கீதம், சம்பா

ஷணை, நடிப்பு இவைகள் மூன்றையுங் கண்டும் கேட்டும் இன்புறுகிறோம். கிராமபோன் இயந்திரங்களால் பல அரியார்களுடைய சங்கீதத்தையுஞ் சொற்பொழிவுகளையுஞ்



ஆகாய விமானம்

செவியுறுகிறோம். ஆகாயக் கப்பல், ஆகாய விமானங்கள் இவைகளின் உதவியால் வான வழியிற் பிரயாணஞ் செய்கிறோம். இவைகள் மணிக்கு 200 மைல் வேகத்திற் செல்வதால் மிக்க தூரங்களை வெகு சீக்கிரத்தில் தாண்டி விடுகிறோம். இவைகளின் மூலம் ஆகாயத்தபால்கள் தொலையான இடங்களுக் குக் கொண்டுபோகப்படுகின்றன. தந்தித்தபால் மூலமாகச் சமாசாரங்களை அதே நிமிஷத்தில் தொலையூர்களுக்குத் தெரிவிக்கிறோம். தூர சம்பாஷணைக் கருவியால் மிகத் தொலையிலுள்ளவருடன் நேரில் நின்று பேசுவது போலப் பேசுகிறோம். நுட்பமான மின்சாரக் கருவிகளால் ஒலிகளைப் பரப்பிக் கம்பியில்லாத் தந்தித்தபால் மூலமாகச் சமாசாரங்களை ஆயிர மைலுக்கு அப்பாலும் அனுப்புகிறோம். மற்றும் சுமார் முன்னூறு ரூபாய்க்குள்ளாக நவீன ஒலி பரப்புங் (ரேடியோ) கருவிகளை வாங்கிவைத்து, நமது வீட்டிலிருந்தபடியே உலகத்திற் பற்பல இடங்களிலும் நிகழ்த்தப்படுஞ் சொற்பொழிவுகளையும் சங்கீதக் கச்சேரிகளையுங் கேட்டு மகிழ்கிறோம்.

மனிதர் கண்டுபிடித்துள்ள பலவித சக்திகளில் எதுவும் மின்சார சக்திக்கு இணையன்று. மின்சாரத்தின் அபார சக்தியைச் சிறிது காலமாகத்தான் ஆராய்ந்தறிந்து, கணக்கற்ற விதங்களில் உபயோகப்படுத்தி வருகிறார்கள். மின்சார சக்தியென்றால் இன்னதென்று எளிதில் இங்குக் கூறுவது இயலாது. அதன் தன்மையைப் பற்றியும் அதை உண்டுபண்ணக் கூடிய முறைகளையும் மேல் வகுப்புகளிற் கற்றறியலாம். ஆனால் மின்சார பலத்தால் நவ நாகரிகத்தில் என்னென்ன அற்புதங்கள் ஏற்பட்டுள வென்றும், என்னென்ன விதங்களில் அவை உபயோகமாகின்றன வென்றுங் கண்கூடாகப் பார்த்தறிகிறோம்.

மின்சார கைவிளக்குகள் எங்கும் மலிந்து பலரும் அவைகளை உபயோகிக்கக் காண்கிறோம். தபாலாபீசுகளில் மின்சார சக்தியுதவியால் தந்திக் கருவிகளும், ரயில்வே ஸ்டேஷன்களில் மின்சாரப் பேசுங் கருவிகளும், மின்சார மணி, விளக்கு, விசிறிகளும் சாதாரணமாய்ப் பார்க்கிறோம். சென்னை முதலிய பெரிய நகரங்களில் மின்சார ரயில் வண்டிகளும், டிராம் வண்டிகளும் ஒடுகின்றன. பல மாடிகள் உள்ள காரியாலயங்களில் ஏறும் படிக்கட்டுகள் வைக்காமல், ஏறியிறங்க மின்சாரக் கருவிகள் ஏற்படுத்தப்பட்டுள. பெரிய வைத்திய சாலைகளில் மின்சார முறையால் சிகிச்சை செய்கிறார்கள். நகரபரிபாலன சபையார், ஒலி பரப்பும் கருவிகளைச் சென்னையிற் பலவிடங்களிலும் அமைத்து, பல வூர்களில் நடைபெறும் சங்கீதக் கச்சேரிகளை ஜனங்கள் கேட்டு இன்புற ஏற்பாடு செய்துளர். பொன் கொழிக்கும் அமெரிக்கா நாட்டில் வீடுகளிற் கூட மின்சார அடுப்புகளும், மின்சாரத் துலக்குங் கருவிகளும், மின்சாரக் கடிகாரங்களும், மின்சாரத் தையல் இயந்திரங்களும் சர்வ சாதாரணமாய் வழங்கி வருகின்றன.

தமது உத்தம உழைப்பாலும், முயற்சியாலும், இயற்கையின் பல இரகசியங்களையும் அறிந்து, செயற்கை வகையிற் பல்கோடி அற்புதங்களை மனிதர் அமைத்திருப்பது மிகவும் அதிசயிக்கத் தக்கதே!

I. ஔவையார் அருளிச்செய்த

# நல்வழி

1. புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

2. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்,
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

3. வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றால் போகா—இருந்தேங்கி
நெஞ்சப்புண் ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

4. உள்ளதொழிய வொருவர்க் கொருவர் சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு.

5. எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

6. ஈட்டும் பொருண் முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

7. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

8. ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் — வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

9. ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் — ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

10. ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

11. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர் விடுகை சால வுறும்.

12. தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற் — பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

13. செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம் — வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்?

14. சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

15. நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான்.

16. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

17. வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

18. நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

19. ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லாருக்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு.

20. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

21. உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

22. மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர்.

23. தாந்தாமுன் செய்தவினை தாமே யநுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி.

24. இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்றுத் தனி.

25. ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து.

26. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற் றீன்றெடுத்த தாய்வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள்

27. பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

28. வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி.

29. தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

## II. இனியவை நாற்பது

1. ஆற்றாந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற் பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

2. யானை யுடைய படைகாண்டன் முன்னினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினின் தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

3. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லாதார் மாண்புடையார்ச் சேருந்
திருவுந்தீர் வின்றேல் இனிது.

4. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

5. குழவி தளர்நடை காண்ட லினிதே
யவர் மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாக லினிது.

6. கற்றார்முற் கல்வியு ரைத்தல் மிகவினிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

## III. திரிகடுகம்

வைத்திய சாஸ்திரத்தில் திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று காரமுள்ள மருந்துகளைக்குறிக்கும். (கடுகம்= காரமுள்ளது). அவை உடம்பிற்கு நலந்தரும்.

அதுபோல வாழ்க்கைக்கு நலன் தரும் மும்மூன்று உயரிய நீதிகளைக் கூறும் நூல் திரிகடுகம் ஆகும்.

1. தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்த லினிது.

2. தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தாற்
குற்றங்கடிந்த வொழுக்கமுந்—தெற்றெனப்
பல் பொருணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

3. தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை.

4. தூய்மை யுடைமை துணிவாந் தொழிலகற்றும்
வாய்மை யுடைமை வனப்பாகும்—தீமை
மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை மூன்றும்
தவத்திற் றருக்கினார் கோள்.

5. வைததனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் காட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

6. நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு மஞ்சுமிம் மூன்றுந்
திற வதிற் றீர்ந்த பொருள்.

## IV. கடவுள் துதிப் பாக்கள்

### விநாயகர்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும், தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவோம்.

—விருத்தாசல புராணம்

### சரஸ்வதி

ஆடகன் நா நின்றுறையும் அன்னமே, நின்னுடைய
பாடகமுஞ் சீரடியும் பற்றினேன்—தேடரிய
அற்புதமே, அம்மே ; அணங்கே, மணநாறுங்
கற்பகமே, நாயேனைக்கா.

—பெரும்பற்றப்புலியூர் நம்பி

### சிவபெருமான்

கண்ணவனைக் காண்க, இரு காதவனைக் கேட்க, வாய்
பண்ணவனைப் பாட பதஞ்சூழ்க—எண்ணிறைந்த
நெய்யொத்து நின்றானை நீல மிடற்றானையென்
கையொத்து நேர் கூப்புக.

—ஐயன் ஆரிதர்

### திருமால்

ஆதித்தனிக் கோலமானான் அடியவற்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழமுதலே எனவழைப்ப
என் னென்றான் எங்கட்கிறை.

—புகழேந்திப் புலவர்

## முகமது நபி

ஆதியா யனாதி யாகி அரும்பொருள் அனைத்து மாகிச்
சோதியாய்ச் சொரூப ஞானச் சுடரொளித் தீபமாகி
நீதியாய்த் திறமை யாகி நித்தியா னந்த மாகி
மாதிரப் புயமு மான முகம்மதே! வருக வீரா.
—மஸ்தான் சாயபு பாடல்

## அருள் நாதர்

இச்செய்யுள் வீரமாமுனிவர் என மறு நாமம் புனைந்த அர்ச்சிஷ்டர் பெஸ்கி அவர்கள் பாடிய தேம்பாவணியில் உள்ளது.

நீர்பாய் உலகிற் குயிரோய் நீ !
நிமிர்வீட் டுலகிற்குயிரோய் நீ !
சீர்பாய் பாவிற் குரையோய் நீ !
திரன் கொண்டாள்வாய் கடலோய் நீ !
ஏர்பாய் இரவிக் கொளியோய் நீ !
எம்மேல் இரங்கிப் பிறந்தனை, நாஞ்
சூர் பாய் துகள் அற்றய் வதற்குன்
துணைத்தாள் தொழும்பண் புரையாயோ ?

# V. தனிப் பாடல்கள்

## அரிது, அரிது!

அரிதரிது மானிடராத லரிது ;
மானிடராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது ;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது ;
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான் செயலரிது ;
தானமுந் தவமுந் தான் செய்வாராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே. —ஔவையார்

## பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்

தந்தைதாய் வாக்கியபரி பாலனஞ் செய்தவன்
தசரத குமார ராமன் ;
தமையனருள் வாக்கியபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர் ;
சிந்தையி லுணர்ந்துருகு வாக்கியபரி பாலனஞ்
செய்தவன் அரிச்சந்திரன் ;
தேகியென் றோர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் தான கன்னன் ;
நிந்தை தவிர் வாக்கியபரி பாலனஞ் செய்தவன்
நீள்பெல மிகுத்த அநுமான் ;
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தினில் நளாயினி செய்தாள் ;
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர உகந்த துணைவா !
மயிலேறி விளையாடு குகனே ! புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

### கல்வி

வெள்ளத்தே போகாது ; வெந்தணலில் வேகாது ;
வேந்த ராலும்,
கொள்ளத்தான் முடியாது ; கொடுத்தாலும் நிறைவன்றிக்
குறை வுறாது ;
கள்ளர்க்கு மிக அரிது ; காவலோ மிகஎளிது
கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க ஊரெல்லாம் பொருள்தேடி
உழல்வ தென்னே !

—விவேகசிந்தாமணி

## ஏர் நடத்தற் சிறப்பு

கார் நடக்கும் படி நடக்குங் காராளர் தம்முடைய [ம்
ஏர் நடக்கும் எனிற் புகழ்சால் இயலிசைநா டகநடக்கு
சீர் நடக்குந் திறல் நடக்குந் திருவறத்தின் செயல்
[நடக்கும்
பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே.
—கம்பர்

## இரத்தல்

பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்
[கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து
[நீட்டி,
மல்லெலாம் அகல ஓட்டி மான மென்பதனை வீட்டி,
இல்லொலாம் இரத்தல் அந்தோ; இழி விழி வெந்த
[ஞான்றும்.

## தவிர் வன சில

சுடரிடைப் போகார்; சுவர்மேல் உமியார்;
இடரெனினும் மாசுணி கீழ்தம் மேற் கொள்ளார்;
படை வரினும் ஆடை வளியுரைப்பப் போகார்;
பலரிடை ஆடை உதிரரே; என்றுங்
கடனறி காட்சி யவர்.

## தமிழ் நாட்டின் சிறப்பு

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்
நன்னாடு சான்றோர் உடைத்து. [தொண்டை
—ஔவையார்

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.